


# கிராம நலம்

டிசம்பர் '67




படம் 1: சென்னை மாநகராட்சியின் 280-வது துவக்க நாள் விழா 21-11-1967 அன்று கொண்டாடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விழாவிற்குத் தலைமை தாங்கினர். விழாவினைத் துவக்கி வைத்த மாண்புமிகு மைசூர் மாநில முதலமைச்சர் திரு எஸ் நிஜலிங்கப்பா அவர்கட்கு நகர வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. விழாவினை ஒட்டி நடைபெற்ற விருந்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சரும் மாண்புமிகு மைசூர் மாநில முதலமைச்சரும்.

படம் 2: ரோமாபுரியில் அண்மையில் நடைபெற்ற உலக உணவு-விவசாய மாநாட்டில் இந்தியக் குழுவின் மாற்றுத் தலைவராக மாண்புமிகு தமிழக உணவமைச்சர் திரு கே. மதியழகன் கலந்து கொண்டார். மாநாட்டில் மாண்புமிகு தமிழக உணவமைச்சர் உரையாற்றுவதை, படத்தில் காணலாம். (6-11-1967)



# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 டிசம்பர் 1967 நெல 3

## உலகத் தமிழே! வாழி!!

உலகத் தமிழே வாழி!
உயிர்மொழி யேநீ டூழி!
உலகின் முதன்மொழி நீயே!
உள்ளொளி வழங்கிடு வாயே!
..உலகத் தமிழே வாழி!

யாதும் ஊரென மொழிந்தாய்!
யாவரும் உறவென மகிழ்ந்தாய்!
காதலும் வீரமும் வளர்த்தாய்!
கவிநயக் களஞ்சியம் படைத்தாய்!
..உலகத் தமிழே வாழி!

'த'கரம் வல்லின அழுத்தம்!
'மி'கரம் மெல்லினம் உயர்த்தும்!
'ழ'கரவொற் றிடையினம் இணையும்!
'தமிழ்'எனில் இனிமை கனியும்!
..உலகத் தமிழே வாழி!

கன்னடம் தெலுங்குடன் துளுவும்
கவின்மலை யாளமென் மொழியும்
உன்னிடம் தோன்றிய பின்னும்
உன்பெயர் கன்னிஎன் அன்னை!
..உலகத் தமிழே வாழி!

உயிரினும் சிறந்தது மானம்!
ஒழுக்கம் தருவதுன் ஞானம்!
அயலக அறிஞரும் உன்னை
அமுதென விரும்புதல் உண்மை!
..உலகத் தமிழே வாழி!

—கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

---

உலகத் தமிழ் மகாநாடு பற்றிய முழு விவரங்கள்—படங்களுடன்—
அடுத்த இதழில் இடம் பெறும்.

# இன்னலுறும் ஏழை மனிதனை
## முன்னேற்றும் புனிதப் பணி

[''புன்னகைப் பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை—குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை—தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்'' என்று மாணவச் செல்வங்களுக்கு அழைப்பு விடுகிறார், மாண்புமிகு முதலமைச்சர் தன்னுடைய கருத்தாழம் செறிந்த பேருரையில். 18-11-1967—ல் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரையின் சாரம் இது. சமூகப் பணி என்ற உயர்ந்த தத்துவத்தை வலியுறுத்தி கண்ணியத்தின் காவலர்களாய், கடமை வீரர்களாய், தாயகத்தின் திருவிளக்குகளாய், தன்மானத் தீரர்களாய், பொய்மையைச் சுட்டெரிக்கும் புனிதத் தொண்டர்களாய் மாணவர் சமுதாயம் திகழ வேண்டும் என்ற அடிப்படையை மையமாகக் கொண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரை, அறிவுக்கு விருந்தாக, சிந்தனைக்கு செந்தேனாக, உள்ளத்திற்கு அருமருந்தாக அமைந்துள்ளது. ஆற்றல் மிகு அண்ணா அவர்களின் பேருரையை வாசகர்களுக்கு வடித்துக்கொடுப்பதில் 'கிராம நலம்' பேருவகை கொள்கிறது; மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

—ஆசிரியர். ]

[''சமுதாயத்திற்குச் சேவை புரியும் உன்னதமான கடமைக்கு உங்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நான் விரும்பி வேண்டுகிறேன். இத் தருணத்தில் நீங்கள் கேலிப் புன்னகை புரிந்து கண் சிமிட்டி ''சொல்வது யார்க்கும் எளிது'' என்று தயவுசெய்து கூறிவிட வேண்டாம்.

உங்களது வாழ்க்கை வழித்தடத்திலுள்ள இன்னல்களை நான் அறியாதவனல்ல !

உங்கள் மீதுள்ள சுற்றுச் சார்பின் அழுத்தத்தையும் செல்வாக்கையும், 'இல்லை' என்று ஒதுக்கித் தள்ளி விடுபவனும் அல்லன் நான்.

எந்த உலகத்தில் உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் துவக்க இருக்கிறீர்களோ—அந்த உலகம் உங்களுடைய நம்பிக்கை ஒளியைக் குன்றச் செய்யலாம். உங்கள் உறுதியை உருக்குலைக்கும் தன்மையில் இருக்கலாம்.

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்கள் இதயம் படிந்த கொள்கை—கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான பழக்கவழக்கங்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டி வரும்.

உலகில் சுயநலம் விரும்பிகள் கனக சிம்மாசனத்தில் வீற்றிருப்பதையும் அமைதியுருக் கொண்ட உழைப்பாளி ஒடுக்கப்படுவதையும் கண்டிக்கப்படுவதையும் நீங்கள் காண நேரிடலாம்.

எல்லாவகைக் கொடுங்கோன்மையும் உங்கள் மீது மிரட்டு விழிப்பார்வை செலுத்தலாம்.

அந்தப் பயணத்தில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் ஒவ்வொரு போராட்டமாக இருக்கலாம்.

### சமுதாயத்திற்குப் பணிபுரியும் அருவியோட்டம் போன்ற தொண்டர் திருக்கூட்டம்

நேர்மைக்குணம் படைத்த நிறை நோக்கர்களையும்கூட உற்சாகம் குன்ற வைத்து, சுலபமும் வசதியுமிக்கக் குறுக்கு வழியைத் தேர்தெடுக்குமாறு பலவந்தப்படுத்தும் வலிமைமிக்கது இந்த

சமூகச் சூழ்நிலை என்பதை, நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நாம் ஒன்றை உணரவேண்டும். சமூகத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு மிக்க ஆடவர்—பெண்டிர் உள்ளடங்கிய அருவியோட்டம் போன்ற தொடர்பான திருக்கூட்டம் இருந்து வருகிறது. அது இந்தப் புனிதப் பணியை வெற்றிகரமாக நடத்துகிறது; மனித சமுதாயத்திற்கு வளமிக்க பலனைத் தந்திருக்கிறது.

சமூகப்பணி என்னும் இந்தத் தத்துவத்தை தமிழர்களாகிய நாம் உச்சிமேல் வைத்து மெச்சத்தகும் வகையில் கடைப்பிடித்து பாராட்டியிருக்கிறோம்.

பிரச்சினை. அவ்விதம் இருக்குமாயின், அந்தப் பிரச்னையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது.

ஆனால் நமது பிரச்சினைகள் இதயத்தில் ஏற்படும் மண் அரிப்பு போன்ற செயலால் ஏற்படுவது.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை—இருக்கிற வயலில் உரம் போட்டு—உழவு செய்யும் நிலைமையில் இருக்கிறோம்!

ஆம்; தத்துவங்களைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை, அதைவிடக் கடுமையான

## அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா

புறநானூற்றில் அந்தக் கருத்தைக் காண்கிறோம்.

''உண்டால் அம்ம இவ்வுலகம்————

————————————————

தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே''

—இத்தகைய செழுமை மிக்க பாரம்பரியத்தின் வழித்தோன்றல்களாகிய நீங்கள் சமூகச் சூழ்நிலையின் அழுத்தத்திலிருந்து விடுபட்டு, உங்களது திறமைக்கேற்றபடி சமூகத்திற்கு உழைத்திட வேண்டும்!

நல்லது செய்ய நினைத்திடும் யாரும்—தங்கள் பாதையில் தடைப்படும் கற்களை மக்களில் சிலர் நீக்கியுதவுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

அந்த தடைக் கற்களோடு மேலும் சில கற்களை உருட்டி விட்டாலுங்கூட மிகுந்த பொறுமையாய் இருந்திடல் வேண்டும்.

பணியில் ஈடுபட்டிருக்கின்றோம், இருக்கின்ற தத்துவங்களை வகைப்படுத்தி—தொகைப்படுத்தி—தணிக்கைப் படுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக் கூடுகளை அகற்றி—கலந்து விட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

**கண்ணியமிக்க எல்லாவற்றிற்கும் காவலர்கள் நாம்**

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே கண்டு கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம், நமது சிந்தனைக் கட்டிடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்டவேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

கண்ணியமிக்க எல்லாவற்றுக்கும் நாம் ஒரு காலத்தில் காவலர்களாக இருந்தோம். ஆனால் அழிவின் கிருமிகள் பல்கிப் பெருகிட அனுமதித்தோம்!

## மாண்புமிகு முதலமைச்சர் பேருரை

''தடைகளைச் சந்தித்துப் பெறும் அனுபவம் மூலமாகவே நமது வலிமை தெளிவாகும்; மேலும் பலப்படும், பிறகு அந்த வலிமையே தடைகளை வெல்லும் திறனாய் மாறும்'' என்கிறார் அறிஞர் ஆல்பர்ட் சுவிட்சைர்.

பல்வேறு நாடுகளிலுள்ள பிரச்சினைகள் ஒரே மாதிரியான இயல்புடையவை எனினும் நமது நாட்டின் பிரச்னைகளில் வினோதப் பண்பு சேர்ந்திருப்பதோடு தனித் தன்மையும் இருக்கும்!

எங்கோ ஏற்பட்ட கீறல்களிலிருந்து சிக்கல் எழுவதுபோன்ற தன்மை வாய்ந்ததல்ல நமது

இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும் உதயசூரியனின் ஒளியையும் அனுமதித்து—நமது உண்மையான பழைய உருவையும் பொலிவையும் அடைய வேண்டும் என்பதே. அத்தகைய பொலிவுமிக்க உருவந்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப் பரப்புகளிலும் நமது புகழைப் பரப்பியது.

நமது இலக்கியமும், கலையும் சிற்பமும் மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்கின்றன. ஆனால் அவை இன்று காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற்கின்றன.

ஆகவேதான் நமது அருமை பெருமைகளைப்பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளே! உங்களுடைய—உங்கள் குடும்பங்களுடைய நன்னிலைக்குப் பாடுபடுவதோடு, சமூகத்திற்கான பணியையும் நீங்கள் செய்யவேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதத்தின் ஒளிவிளக்கை ஏற்றிப் பிடிப்பவர்களாக நீங்கள் பணிபுரியவேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை—நெறிகளை—மறுப்பது என்பது அல்ல. போலித்தனமான எண்ணத்தையும் செயலையும் அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு வாதம்.

அதாவது புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய இளம் இதயத்தைப்போல் பசுமையானதாக விளங்கவேண்டும்.

ஈவோஸ் என்னும் தேவதை "ஆண்டவனே! என் காதலனுக்கு அமரத்துவம் கொடு" என்று இறைவனை வேண்டினாள், சாகா வரம்பெற்ற அவள் காதலன் முதுமையடைந்தான், அந்த முதுமையினால் தளர்வுற்று முடக்கமுற்றான். எல்லோரும் அவனைக் கண்டு வெறுத்தனர். சிலர் வருந்தினர். அமரத்துவம் பெற்ற அவன் இறக்க மாட்டோமா என்று இறைஞ்சினான்.

தேவதை ஈவோஸ் பெருமூச்செறிந்து "இறைவா! என் காதலனுக்கு நீங்கா இளமை கேட்டுப் பெறவேண்டிய நான் அதை மறந்து அமரத்துவம் வேண்டினேனே" என்று வருந்தினாள்.

---

## சமுதாயத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு கொண்ட திருக் கூட்டம்

---

முனைப்புடனும்-உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும். ஏனெனில் நாம் பல நூற்றாண்டுகளாய் கப்பிவிட்ட சிலந்திக் காடுகளை அகற்ற வேண்டும்; காரண—காரிய செயல் முறை உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சி புரியவைக்க வேண்டும்.

நமது நாகரிகமும் பண்பாடும் தொன்மை வாய்ந்தவை. அதில் தொய்வு உண்டாகச் செய்துவிட்டோம், காலத்தால் அதில் வடுக்கள் தோன்றிவிட்டன. அவற்றை நோக்கி நம்முடைய பண்பாட்டையும் நாகரீகத்தையும் மீண்டும் நிலைநாட்டுவதோடு மற்றைய நாட்டாரின் சாதனைகளிலிருந்தும் நாம் கற்றறியவேண்டும்.

### நமக்கென்று ஒரு நெறி, ஒருமுறை உண்டு

அறிவின் எந்த யொரு துறையாயினும் நமக்கென்று ஒரு முறை இல்லாமல் இல்லை. அற்புதமான உதாரணங்களாகத் திகழும் சான்றுகள் நமக்குண்டு; எனவே நம்முடைய வாழ்க்கை

இந்த நாட்டில் வாழ்கின்ற நாம் அத்தகைய நிலைமையில்தான் இருக்கிறோம். நம்முடைய நாகரிகம் பண்பாடு ஆகியவற்றுக்குப் புத்துயிரும் புதுப் பொலிவும் ஊட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### சாதிமுறைகளை எதிர்த்துப் போர் தொடுத்திடுவோம்

நெடுங்காலமாகப் பழைய முறைகளிலேயே ஊறி அவற்றைத் தாங்கி நின்று அவற்றுக்கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறிக் காலத்தை கழித்திருக்கிறோம்.

இதே காலத்தில் உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தங்களது இடைவிடா சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தி புதிய உயர்வுகளை அடைந்துள்ளனர்.

நாமோ பண்டைப் பழம் பெருமையினிடத்தில்—இடிந்து கிடக்கும் கோட்டைக் கொத்தளங்கள்

---

## மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் அறிவாலயங்கள்

---

முறைகள் அழியாதவை அமரத்துவமுள்ளவை என்று நாம் கொண்டாடலாம்.

ஆயினும் அந்த முறைகளை இளமை குன்றாது பசுமையோடு தீவிரத்தன்மையோடு கூடியதாக வைத்திருக்க நாம் தவறிவிட்டோம். அவை சீரழிய நாம் இடமளித்துவிட்டோம்.

"ஒரு வாழ்க்கை முறை நிலைக்க வேண்டுமானால் என்றென்றும் இளமை குன்றாததாகவும் மாறுதலை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கவேண்டு"மென்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஓரத்தில்—அமர்ந்திருப்பதிலேயேதிருப்தி கொள்கிறோம். நமக்கென்று வாய்த்த சமய சாத்திரமெல்லாம் வெறும் சடங்குகள் என்கிற நிலைக்குச் சீரழிந்துவிட்டன. வர்க்க பேதமற்ற சமுதாயமாக இருந்த நமது சமுதாயம் இன்று சாதி-இன-வேறுபாடுகளால் கூனிக் குறுகி சிறு சிறு அமைப்புகளாக கட்டப் பெற்றுள்ளது.

மூடப் பழக்க வழக்கங்களைக் காணுமிடத்தில் நம்மில் பலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறோம். சிலர் சாத்திரம் பேசி அவற்றைச் சமா

[27-ம் பக்கம் பார்க்க]

கவிஞரைப் பற்றி கலைஞர்:

# "பாட்டுக்கொரு புலவன்"

[மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி]

[''நலிவற்ற நாடு—வலிவுற்ற மக்கள்—தாழ்வற்ற இனம்—வாழ்வுற்ற மொழி இந்தக் குறிக்கோள் வென்றிட பாரதி நாளில் உறுதி மேற்கொள்வோம்'' என்று அடலேறு போல் அறுதியிட்டு அழைக்கின்றார் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் தன்னுடைய வீர உரையில். மகாகவி பாரதியைப் பற்றி வானொலியில் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் நிகழ்த்திய உரையின் முழுவடிவம் இது. அவருடைய பேச்சிலே எழுத்துக்கு எழுத்து வீரம் முரசொலிக்கிறது. வரிக்குவரி அழகு தமிழ் அலங்கார நடைபோகிறது. கவிதையுள்ளம் கடல்மடை திறந்ததுபோல் பீறிட்டுக்கொண்டுவெளிவருகிறது. கவிஞரைப்பற்றி கலைஞருடைய பேச்சு, தேனாகத் தித்திப்பது மட்டுமல்ல; சிந்தனைக்கும் அரிய தொரு விருந்தாக அமைந்துள்ளது.

கவிஞர் பாரதி அமரரானது செப்டம்பர் திங்களில்; அவர் பிறந்தது டிசம்பர் திங்களில் பாரதியைப் பற்றி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் 1967 செப்டம்பர் திங்கள் 11-ம் நாள் வானொலியில் ஆற்றிய சொற்பொழிவை, அப்படியே வாசகர்களுக்கு இந்த டிசம்பர் இதழில் அளிப்பதில் ''கிராம நலம்'' பேருவகை அடைகிறது. காலத்தால் அழிக்க முடியாத அமர கவிஞனுக்கு செலுத்தும் அஞ்சலியில் 'கிராம நல'மும், பங்கு கொள்வதில் தனிமகிழ்ச்சி அடைகிறோம். —ஆசிரியர்.]

தேர்ச் சாரதிபோல் தலைப்பாகை—
திசை நோக்கும் பெரு விழிகள்—
திருகிவிட்ட கூர் மீசை—
தேன்தமிழ்பால் தணியாத பேராசை;

வட்டுக்குள்
வீட்டுக்குள்—தமிழ்
நாட்டுக்குள்
இதயக் கூட்டுக்குள்

இடம்பெற்ற பாட்டுக்கொரு புலவன்!
பாவாணன்! பாரதிரக் கவிதைச் சாட்டை கொண்டு;
பரங்கியரைப் பழமைகளைத் தாக்கித் தகர்த்திட்ட
பத்தொன்பதாம் சித்தன்—பாரதியார்!

அவர் நினைவுநாள் இன்று! ஆம்; மகாகவி மறைந்தநாள்!
இன்றைக்கு எண்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பு பிறந்து, நாற்பதுக்கும் ஓராண்டு குறைவாக வாழ்ந்து, நாட்டு மக்களின் நாடி நரம்பெல்லாம் உயிரேற்றித் துடிப்பேற்றிச் சென்றுவிட்டவர் பாரதியார்.

ஆண்டுக்கொரு முறை என்றல்ல; ஆடுகின்ற மயிலைக் காணும்போதும்—கூவுகின்ற குயிலை ரசிக்கும்போதும்—ஓடுகின்ற மழலையைப் பார்க்கும்போதும—பாரதியார் நினைவு வந்தே தீரும். குயில் பாட்டும் குழந்தைப் பாட்டும் மறக்கக் கூடியவைகளா!

"பாதகம் செய்பவரை கண்டால்—நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா! —அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!"

ஆகர—விளையும் பயிருக்கு அவர் இடுகின்ற வீர உரம் எப்படிப்பட்டது பார்த்தீர்களா? நீலவானமும் நெடிய கடலும் அவர் நினைவை ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன,

"நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்:
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்."



சின்னஞ் சிறு மனப்பறவை எவ்வளவு ஆர்ப்பாட்டமாகப் பறக்கிறது? எவ்வளவு தெம்பான வார்த்தைகள் எழில் கூட்டிக்கொண்டு மனப் பறவையின் உற்சாகப் பயணத்திற்கு ஊக்கமளிக்கின்றன!

தாயின் மணிக்கொடி பறக்கும் போதெல்லாம் அந்தத் தமிழ்க்கவி வேந்தனின் எழுச்சி கீதம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

"தாயின்மணிக்கொடி பாரீர்
—இதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்
திட வாரீர்"

காக்கைச் சிறகும்—வெள்ளைப் பூனையும் அவர் தம் கவிதை வரிகளை சுருக்கென்று நம் நெஞ்சில் பாய்ச்சும்.

காணி நிலமும்—கரும்புத் தோட்டமும் அவர் பாடலை எதிர் நிறுத்தி நம்மைப் பாடாய்ப் படுத்தும்,

'விடுதலை' என்ற நான்கு எழுத்துக்களுக்கு, எழுத்துக்கு எழுத்து எரிமலைக்கனலை உருவாக்கி வடித்தவர் பாரதியார்.

எங்கோ நடந்த புரட்சியின் முடிவை இங்கே எழுதிக் காட்டி, தோள் தட்டி நிற்கும் விடுதலை மறவர்க்கு அவர் தந்துள்ள போர்க்கருவி எத்துணை வீறு கொண்ட பாடலாக எழுகின்றது!

"இம் என்றால் சிறைவாசம், ஏனென்றால்
வனவாசம்; இவ்வா றங்கே
செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்; அடி பரவி
உண்மை சொல்லும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் வழியாலே
நோக்கினாள், முடிந்தான் காலன்"

கொடியவர்களின் முடிவுக்கு மகிழ்ந்து, பாரதி கொட்டிய மங்கல முரச மென்போம் இந்தப்பாடலை!

அறிவே தெய்வமென்று ஆர்த்தெழுந்தவர் அண்ணல் பாரதி.

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனில் கேளீரோ?"

எனச் ரங்கநாதம் செய்து செத்தபிறகு, சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருக்கும் பித்த மனிதரைச் சாடியவர் பாரதி.

நெஞ்சில் உரமுன்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை சொல்வாரைக் கடிந்துரைக்கும் கர்மவீரர்.

சிந்தையிற் கள் விரும்பிச் 'சிவ சிவ' என்பவரைச் சீறிச் சாடும் செந் தீ அவர்!

"இரும்பைக்காய்ச்சி உருக்கிடு
வோர்—
இயந்திரங்கள் வகுத்திடு
வோர்—
கரும்பைச் சாறு பிழிந்திடு
வோர்—
கடலில் மூழ்கி முத்தெடுப்
போர்—
மண் எடுத்துக் குடங்கள்
செய்திடுவோர்—
உண்ணக் காய் கனி தந்திடுவோர்—
உழுது நன்செய் பயிரிடுவோர்—
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவோர்—
இழையை நூற்று நல்லாடை செய்திடுவோர்—
பாட்டும் செய்யுளும் கோத்திடுவோர்—
நாட்டிலே அறம் கூட்டிடுவோர்"—

—இவர்கள் அனைவரையும் தெய்வங்கள் என்றே தொழுதவர் பாரதியார்.

பழம்புலவர்கள் எல்லாம் சொர்க்கம் செல்ல வரம் கேட்பர்; பாரதியோ சொர்க்கத்தையே இந்தப் புவிமீது கொண்டுவந்து வைக்கும் வரம்பெற்றார்:—ஏழைகள் வாழ்வே அவருக்குச் சொர்க்கம். இந்தச் சூழ் நிலையில்

எழுகின்ற கவிஞர்கள்தான் மக்கள் கவிஞர்களாகிறார்கள். அவர்கள் கடல் முத்தைக் கண்டவுடன் அதனை உழைக்கின்ற ஏழைகளின் வியர்வை முத்துடன் ஒப்பிடவே முந்தி நிற்பர். அவர்கள், கோவைக் கனியைப் பாவையின் இதழுக்கு ஒப்பிடுவதைவிட, கொள்கைக்கென

## துள்ளி வரும் வேல் போல

குமுறி நிற்கும் வீரனின் சிவந்த விழிகளுக்கு ஒப்பிடுவதையே சிறந்ததெனக் கருதுவர். ஆண்டவனைப் பற்றி ஆயிரம் பாடல் எழுதுவதும்; ஒரு நாட்டின் அடிமைத் தளை முறிவதற்காக ஒரு பாட்டு எழுதுவதும் ஒன்றேதான் என எண்ணிச் செயல்படுவர் மக்கள் கவிஞர்.

அவர்களில் முதல்வரே, பாரதியார்!

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்"

எனும் குறள் படித்தார்.

"தனியொருவனுக் குணவில்லையெனில்—இந்த
ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்ற குரல் கொடுத்தார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

என்கின்ற குறளுக்கு;

"தின்னவரும் புலி தன்னையும் அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்"

என்று எளிய நடையில் விளக்கம் தந்தார்.

"நமக்குத்தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

எனக் கூறி அவ்வண்ணம் வாழ்ந்து காட்டியவர் அவர்.

## சொல்லடுக்கிச் சூடேற்றி

உரைகூற ஒரு புலவர் அருகில் இல்லாவிடில், பழந் தமிழ்நூல் படித்திட முடியாதென்ற நிலையிருந்தபோது பசுமரத்தாணிபோல் நெஞ்சத்தில், பாய்ந்து பதியும் கருத்துக்களை எளிய தமிழ்ச் சொற்களால் பாடிக்காட்டி அவ்விதமே தமிழகததைப் பழக்கிய பெருமை பாரதிக்கு உண்டு. கத்தியை உச்சிமட்டும் தூக்கிக் கர்ச்சனை புரியும் படைத் தளபதியின் கட்டளைக்குப் பணிந்து களம்செல்லும் வீரர்களைப்போல்—பாரதியின் கவிதை மொழி கேட்டுப் பட்டாளத்து வீரரெல்லாம் தோற்றுப்போகும் பான்மையிலே பரங்கியரை எதிர்ப்பதற்கு அணி திரண்ட தமிழகத்துக் காட்சிதனை மறப்பதற்கு யாரால் முடியும்! எவரால் முடியும்!

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே"

நாட்டுப்பற்றும்—சுதந்திரக்கனலும் ஒவ்வொரு வரியிலும் ஒளிவிடுகிறதன்றோ; இந்தநாடு விடுபட்டே தீரும் என்ற கவிஞரின் தீர்க்க தரிசனம்.

"ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே!"

என்ற நம்பிக்கை மிகுந்த சுதந்திரப் பள்ளாக அன்றே ஒலித்தது!

தனல் கொட்டி எழுதினார்—அனல் தெறிக்கப் பேசினார்-துள்ளிவரும் வேல்போல—ஆவேசத்தை அள்ளிவரும்

## ஆவேசத்தை அள்ளி வரும் வாள் போல

வாள்போல—சொல்லடுக்கிச் சூடேற்றிக் கவிதைகளைச் சுழல் வைத்தார். அந்நியரின் தலை சுழல ஆட்டி வைத்தார்.

நெருப்புமிழும் நெஞ்சத்துடன் பகைவர்களை எதிர்த்த போதும், நெறியற்ற சொல் ஒன்றும் அவர் எழுத்தில் இருந்ததில்லை, பூண்டுவிட்ட விடுதலைப் போர்ச் கோலத்திலும பூவிதழாம் நல்ல தமிழ் எடுத்துப் பேரி முரசில் சூட்டிவிடப் பாரதி தவறியதில்லை.

எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் ஆணவ உரைகள் அண்டியதில்லை. இழிமொழிகள், அவர் எழுத்தேடுகளின் பக்கம் எட்டிப் பார்த்ததுமில்லை. கவிதைக் கணைகள் கிளம்பும்—அவை கண்யத்தோடு கிளம்பும்.

எதிரிகளைப் பண்படுத்தும் எழுத்து, புண்படுத்தும் எழுத்தல்ல பாரதியின் எழுத்து; தளையும் தொடையும் தெந்து விட்டால் தலைகீழ் நிற்கும் கவியுலகம் பாரதியின் காலத்தில் இல்லை.

பாரதியின் நோக்கு நிமிர்ந்த நோக்கு—உள்ளமோ அடக்கத்தின் கருவூலம், அவர் விழிகள் அம்பெனச் கூர் கட்டும்—ஆனால் அன்பினை மழைபோல் பொழியும் யார்க்குத் தலை தாழ்த்தா வணங்காமுடி. ஆயின் தமிழுக்கு—நல்ல தமிழர்க்குத் தெண்டனிடும் தேன் தமிழன்.

பூமிக்கு எழுதுவது
புகழுக்கு எழுதுவது

என்ற நிலை மாற்றி நாட்டுப் போருக்கு எழுதிய கவிவீரன்!

## கவிதைகளைச் சுழல வைத்த பெருங் கவிஞன்

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீடுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தைமனிதர் தலைகவிழ்ந்தார்."

இப்படிப் பெண்ணுரிமைக்காகப் புயல் வடிவம் கொள்கின்ற புலவன், இதோ தென்றல் வடிவம் தாங்கி வருகின்ற காட்சி காண்போம்:—

"சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே"—

தென்றலென வந்த பாரதி, இதோ, சிந்து பாடும் அருவியாக;

யார் பாடினாலும்—அவர் எதைப் பாடினாலும்—பாரதி, விட்டதை அல்ல; தொட்டதைத் தானே பாடுகின்றார் என்ற நினைப்பு நமக்கு வராமல் இல்லை.

மறைந்த மாகவிக்கு நாம் செலுத்தும் மரியாதை அவர்தந்த கருத்துக்களை மறக்காமல்.. மறைக்காமல் இருப்பதுதான்!

அவர், சாதிகளைச் சாடினார்; நாம் அதனை முழுமையாக ஒழித்தோமா?

## எழுத்துக்கு எழுத்து எரிமலைக் கனலை உருவாக்கிய தமிழ்க் கவி வேந்தன்

"பாயும் ஒளி நீ எனக்கு
பார்க்கும் விழி நான் உனக்கு
தோயும் மது நீ எனக்கு
தும்பியடி நான் உனக்கு—
வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நான் உனக்கு"

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவாய், பாரதியின் இன்பக் கனவாய், இதோ ஒரு பாடல்......

"சிங்களத் தீவினுக்கோர்பாலம் அமைப்போம்—
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்.
சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்."

பாரதியின் வாரிசாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்;

"பாரதியார் உலக கவி
அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாழ்ந்தோர்
ஓருருக்கு ஒரு நாட்டுக்கு உரியதான
ஒட்டைச் சாண் நினைப்புடையார் அல்லர்."

என்று பாடி மகிழ்ந்தார்—தமிழரையும் மகிழ வைத்தார்,

அவர், வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பெற்றதைப் பேணிக் காத்திட நாம் நம்மைச் சரியாகத் தயார்படுத்திக் கொண்டோமா?

பெண்ணடிமை தீர்க என்று கூவினார்; முற்றிலும் தீர்த்தோமா?

"வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்தெடுப்போம்"

என்றார்; இன்னும் அதில் குறைவைத்துள்ளோம்.

அவர் எண்ணியவைகளை யெல்லாம் நாம் செய்து விடப் போகிறோமா; அல்லது அவரே மீண்டும் எழுந்து வந்து நமக்கு உணர்த்தினால் தான் நாம் விழிப்போம் என்ற கருத்தில்;

பாரதி சென்ற திக்கு நோக்கி—

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா"

என்று அவரை அழைக்கப் போகிறோமா? அழைப்பதற்கு முன்பு அவர் இதோ வந்து விட்டார்—அவர் கவிதைகளில் சிரிக்கிறார்—பாடல்களில் நடக்கிறார்—எழுத்துக்களில் நிற்கிறார்—எண்ணங்களில் நிறைகிறார்.

அந்த மாவீரர் முன்னிலையில்
மனிதனை மனிதன் மதித்திடக்
கற்றுக்கொள்வோம்—

## அறிவே தெய்வமென்று ஆர்த்தெழுந்த அண்ணல்

"சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு—"

பாரதி இனிக்க இனிக்கப் பாடிய தமிழ்நாடு..இன்று இந்த மண்ணுக்குரிய பெயராய்..மாநிலத்தின் புகழ் செதுக்கித் திகழ்கின்ற காட்சி கண்டுகளிக்கின்றோம்—பாரதியை வாழ்த்துகின்றோம்.

அரசியல் பண்பு போற்றுவோம்—
ஜனநாயக மரபு காத்திடுவோம்—
அவர் தொட்டபணி தொடர்வோம்;

நலிவற்ற நாடு—வலிவுற்ற—மக்கள்—தாழ்வற்ற இனம்—வாழ்வுற்ற மொழி—இந்தக் குறிக்கோள் வென்றிட பாரதி நாளில் உறுதி மேற்கொள்வோம்.

வாழ்க பாரதியின் புகழ்! வாழ்க!!

[வானொலிப் பேச்சு (11—9—67)]

[இந்திய அரசின் சுகாதாரம்—குடும்பக் கட்டுப்பாடு அமைச்சகத்தின் சார்பில் "நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்தரங்கும்" (Seminar on Local Administration) உள்ளாட்சித் துறை அனைத்திந்திய மையமன்றத்தின் (Central Council of Local Self Government) 12-வது மாநாடும், சென்னை இராஜாஜி மண்டபத்தில் 1967 டிசம்பர் 8-ம் தேதி முதல் 11-ம் தேதிவரை நடைபெற்றன. உள்ளாட்சித் துறையின் அனைத்திந்திய மையமன்றத்தின் 12-வது கூட்டத்தை இந்திய அரசின் சுகாதார அமைச்சர் திரு. சத்தியநாராயண் சின்கா துவக்கி வைத்தார். தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் சிறப்புரை ஆற்றினார். தமிழக அரசின் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். நகராட்சி நிர்வாகம் பற்றிய முக்கியமான தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

கடலூர் நகராட்சி மன்றத் தலைவர் திரு வி. தங்கராஜ் முதலியார் அவர்களும், கும்பகோணம் நகராட்சி மன்றத் தலைவர் திரு என். காசிராமன் அவர்களும் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இராஜாஜி மண்டபத்தில் பகல் விருந்தளித்தனர். பிரதிநிதிகளில் ஒரு சிலர் காஞ்சிபுரம் சென்ற பொழுது, நகராட்சி மன்றத் தலைவர் திரு ஏ. கே. தங்கவேல் முதலியார் அவர்களை, வரவேற்று தேனீர் விருந்தளித்தார்.

நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்தரங்கில் தமிழக அரசின் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நகராட்சி, ஊராட்சி சம்பந்தப்பட்ட அனைவருக்குமே பெரிதும் பயன் அளிக்கக்கூடிய அவருடைய பேருரையின் முழுவடிவத்தை அப்படியே கீழே பிரசுரித்துள்ளோம்.

—ஆசிரியர்]

# ...நகராட்சி நிறுவனங்களின் வருவாயினைப் பெருக்க வழிவகை செய்யவேண்டும்...

"இக்கருத்தரங்களில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள மத்திய அரசு மற்றும் பல்வேறு மாநில அரசுகளின் மதிப்பிற்குரிய பிரதிநிதிகளை வருக வருக என வரவேற்பதில் நான் பேருவகையடைகிறேன். நகராட்சி நிறுவனங்களின் நிர்வாகம் பற்றி ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியது மட்டுமன்றி, தேவையானதும் பயன் தரக்கூடிய செயலுமாகும். "வாய்ப்புகளில் பொதுமை - சாதனைகளில் மேன்மை" என்ற கொள்கையை அமெரிக்க அறிஞர் ஜெபர்சன் கனவு கண்டபொழுது, உள்ளாட்சியைப் பற்றியும் சிந்தித்திருக்க வேண்டும் என்று, நான் திண்ணமாக நம்புகிறேன்.

## கனிந்த அனுபவம் பெற்றுள்ள தமிழகம்

தமிழகத்திலே நகராட்சி நிர்வாகம் 100 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று, அத்துறையில் கனிந்த அனுபவத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கும் இத்தகைய அனுபவங்கள் நிச்சயமாக ஏற்பட்டிருக்கும். ஆகவே, நாம் ஒருவருக்கொருவர் கூடிக் கலந்து பேசி நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்பவர்களாக இருக்கிறோம். நகராட்சி நிர்வாகம் குறிப்பிட்ட சில இலட்சியங்களையும் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, நூறு ஆண்டுகளுக்கு முன்பாகத் தொடங்கி, செயல்பட்டு வருகிறது. மக்களுக்கு கல்வி வளர்ச்சி, சாலை வசதி, பொது சுகாதாரம், மற்ற பலவசதிகள் போன்ற வேலைகளை நகராட்சி நிர்வாகங்கள் ஏற்று நடத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் நகராட்சிகள் செயல்படத் தொடங்கின. ஆரம்ப காலத்தில் காவல்துறையின் அலுவல்களும் நகராட்சிகள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பொறுப்பானது நகராட்சிகளிடமிருந்து எடுபட்டுவிட்டது. அந்தப் பொறுப்பு அவைகளிடமிருந்து எடுக்கப்பட்டதை, புத்திசாலித்தனமான செயலாகவே கருதலாம். சில பகுதிகளில் நகராட்சிகள் தங்களுடைய பொறுப்புக்களில் சிலவற்றை நிறைவேற்ற முடியாமல், சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இயங்கி வந்துள்ளன. ஆகவே நகராட்சி மன்றங்கள், எந்த நோக்கங்களுக்காக முதலில் அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களை எந்த அளவிற்கு அவை நிறைவேற்றி வந்துள்ளன என்பதைப் பற்றி மதிப்பீடு செய்ய அருமையானதொரு வாய்ப்பு நமக்கு இக்கருத்தரங்கின் மூலம் கிடைத்துள்ளது.

பல நகராட்சி மன்றங்கள், பல்வேறு இடர்ப்பாடுகள், வசதிக் குறைவுகளுக்கிடையே

தங்களது பணியை ஆற்றி வந்துள்ளன. நகராட்சி மன்றங்களுக்கு உள்ள இடர்ப்பாடுகள், வசதிக் குறைவுகள் என்னென்ன என்பது பற்றி நாம் கவனத்துடனும் அக்கறையுடனும் பரிசீலனை செய்து, அவைகளைப் போக்குவதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதுபற்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

#### அறிவுசால் பெரியோர்களின் அரிய தொண்டு

நகராட்சி நிர்வாகம் மிகச்சிறந்த நிர்வாகத் திறமை படைத்த பெரும் தலைவர்கள் பலரை இம்மாநிலத்தில் தோற்றுவித்துள்ளது. நகராட்சி மன்றத் தலைவர்கள் என்ற வரிசையில், கோவை திரு இரத்தினசபாபதி முதலியார், செங்கற்பட்டு திரு வேதாசல முதலியார், பாளையங்கோட்டை திரு டேனியல் தாமஸ், திருச்சிராப்பள்ளி திரு பி. ரத்தினவேலுத் தேவர், மற்றும் அவர்களைப்போலவே புகழ்பெற்ற, திறமை வாய்ந்த தலைவர்கள் பலருடைய பெயர்களையும், அத்தலைவர்கள் நகராட்சித் துறையில் ஆற்றியுள்ள பெரும் பணிகளையும் நாம் மறப்பதிற்கில்லை. மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் சேலம் நகராட்சியின் தலைவராகத்தான் தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார் என்பதை இச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட்டுக் காட்ட விழைகிறேன். நாம் கூடியிருக்கும் இந்நாள், மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்களின் பிறந்தநாள். அவருக்கு, இங்கு குழுமியுள்ள நம் அனைவரின் சார்பாக, பிறந்த நாள் வாழ்த்துக்களை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கே, சென்னையிலே மாநகராட்சியின் தலைவராகத் திகழ்ந்த 'வெள்ளுடை வேந்தர்' சர். பி. தியாகராஜ செட்டியாரை யாரால் மறக்க முடியும்? இந்தச் சந்தர்ப்பத்திலே நான் இன்னொரு கருத்தையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். நகராட்சி மன்றத் தலைவர்கள் பலர், தமிழகத்திலே சட்ட மன்ற உறுப்பினர்களாகத் திகழ்கிறார்கள். வேலூரைச் சேர்ந்த திரு எம். பி. சாரதி, ஆரணி திரு நரசிம்மன், இராஜபாளையம் திரு சுப்பராஜா, கும்பகோணம் திரு காசிராமன், திருப்பத்தூர் திரு சின்னராஜு கவுண்டர், அருப்புக்கோட்டை திரு சுந்தரபாரதி ஆகிய நகராட்சி மன்றத் தலைவர்களும், சென்னை மாநகராட்சியின் மேயர் திரு ஹபிபுல்லா பெய்கும், சட்ட மன்ற உறுப்பினர்களாகவும் திகழ்வதைக் காண்கிறோம். தமிழக அரசின் பொது சுகாதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் உடுமலைப்பேட்டை நகராட்சி மன்றத் தலைவராக இருந்தவர். இறுதியாக, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மன்றத்துடன் கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்புகொண்டு பணியாற்றிய திரு. சிவகாமிநாதபிள்ளை அவர்களைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர் இக்கருத்தரங்கில் தமிழகக் குழுவில் ஒரு பிரதிநிதியாகவும் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட திறமையாளர்கள் பலரை நகராட்சி நிர்வாகத் துறையிலே நாம் பெற்றிருப்பது, உண்மையிலேயே நமக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பாகும். நகராட்சித் துறையில் அவர்கள் காட்டிய தீவிர ஆர்வமும், சலியாத உழைப்புமே இந்த மாநிலத்தில் எல்லா இடங்களிலும் நல்லதொரு, நிலையான நகராட்சி நிர்வாகம் நடைபெறுவதற்கு உறுதுணையாக அமைந்திருந்தன என்பது வெள்ளிடை மலை. மேலே சொல்லப்பட்டவர்கள் போல, மேலும் பலரை நகராட்சி மன்றங்கள் நமக்கு அளித்துள்ளன. இத்துறையில் அவர்கள் ஆற்றிய பணியின் காரணமாக, தங்களுடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் மாநில அரசில் மதிப்பும் பொறுப்பும் வாய்ந்த பதவிகளை ஏற்று பணி புரியும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. இப்படிப்பட்ட திறமைவாய்ந்த அறிவுசால் பெரியோர்களின் இலட்சிய வாழ்க்கைகளைப் பற்றி நினைக்கும்போது, நமக்கு புறநானூற்றில் உள்ள

> "உண்டால் அம்ம இவ்வுலகம்......
> ........................
> தமக்கென முயலா நோன்றாள்
> பிறர்கென முயலுநர் உண்மையானே"

என்ற வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

#### தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத வசதிக் குறைவான நிலை

சமீப காலத்தில், நகராட்சி நிர்வாகத்தில் புதியதொரு தோற்றமும் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. கடந்த ஐம்பது அறுபது ஆண்டுகளில் நகரங்களிடையே மக்கள் தொகைப் பெருக்கமானது மிகவும் தீவிரமாக அல்லாமல் மெதுவாகவே இருந்து வந்தது. ஆனால், தொழில் துறையிலே அண்மையிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக, நகர்ப்புறங்களிலே மக்கள் தொகையானது வெகு வேகமாகப் பெருகிக் கொண்டே வருகிறது. இப்படி நகர்ப்புறங்களிலே மக்கள் அதிகமாக வந்து குவியத் தொடங்கியதால், பல்வேறு சிக்கலான பிரச்சனைகளை நகராட்சி மன்றங்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட வளர்ச்சி நாட்டிலே ஏற்படும்போதெல்லாம், நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இல்லாமல் வசதிகள் மிகக்குறைவாக இருக்கின்ற ஒருநிலை, நமக்கெல்லாம் வருத்

(30-ம் பக்கம் பார்க்கவும்)



# ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணி

[திரு வ. இராசமனோகரன், எம்.ஏ.]

"கொளுத்தும் வெயிலில் தலைச் சுமையைச் சுமந்து கொண்டு நடந்து செல்லும் மூதாட்டி ஒருத்தி வழியில் இளைப்பாற நினைக்கிறாள். சுமையை இறக்கி வைத்திட உதவிக் கரத்தை எதிர்பார்த்து, 'யாராவது வருகிறார்' என்று திரும்பிப் பார்க்கிறாள். பள்ளி மாணவன் ஒருவன் சைக்கிளில் வருகிறான். "தம்பி, இந்தச் சுமையைச் சிறிது இறக்கி வையப்பா" என்று உதவி கேட்கிறாள். பையனும் சைக்கிளிலிருந்து இறங்கி, உடனே சுமையை இறக்கிட உதவுகிறான். மூதாட்டி மனமார வாழ்த்துகிறாள். வாழ்த்தினைப் பெற்ற மகிழ்ச்சியோடு சிறுவன் சைக்கிளில் ஏறிப் பறக்கிறான.

அன்றாட வாழ்வில் நாம் காணும் நிகழ்ச்சி இது. வழியில் உதவி நாடிய மூதாட்டிக்கு உதவியளித்ததால் சிறுவனுக்குக்கிடைத்த மன நிறைவு மகத்தானது. எங்கே, யாருக்கு, எப்படி உதவலாம் என்று ஒவ்வொருவரும் கருத்துடன் இருந்தால், அனைவருக்கும் அத்தகைய மனநிறைவு எளிதில் கிட்டும்.

ஒருவன் தனக்காக என்றில்லாமல், பிறருக்காக, நாட்டிற்காக வாழ்வது தான் உண்மையான வாழ்க்கை யாகும். அதனால்தான் தமக்குள்ள அறிவை, ஆற்றலை சமுதாய நலனுக்காகப் பயன்படுத்த முன்வரும் தொண்டுள்ளம் படைத்தோரை உலகச் சான்றோர் அணி திரட்டினர்; ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தினர். மொழி, இனம், நாடு ஆகிய வேறுபாடுகளைக் கடந்து, உலக சமுதாயத்திற்கே உழைத்திடும் பண்பாட்டை அவர்களுக்கு ஊட்டி வளர்த்தனர்.

### மக்கள் சமுதாயம் மாண்புற ஆற்றிடும் பெரும் பணி

தொண்டு மனப்பான்மையைப் பேணி வளர்ப்பதன்மூலம் உலக சமாதானத்திற்கும் வழி காணலாம் என்ற கருத்தை அமெரிக்க நாட்டுத் தத்துவப் பேரறிஞர் வில்லியம் ஜேம்ஸ் 1904-ம் ஆண்டில் போஸ்டனில் நடைபெற்ற உலகச் சமாதான மாநாட்டில் தெரிவித்தார்.

"போரை அறவே அகற்றி விடுவதென்பது இயலாது. உலகச் சமாதானம் என்றெல்லாம் வெறுமனே பேசிக் கொண்டிருப்பது காலத்தை வீண் செய்வதாகும். போரும் இராணுவமும் என்றும் இருப்பவை. ஆனால் போர் ஏற்படாமல் தடுப்பதற்கான மாற்று மருந்தாக, மக்களுக்குள்ள போர்க் குணத்தை, ஆற்றலை, வேறு துறைகளில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அமைப்பை நாம் காணவேண்டும். வறுமையை, அறியாமையை, நோயை எதிர்த்துப் போரிடக் கூடிய சேனையை நாம் உருவாக்கவேண்டும்" என்றார் அவர். இந்த அடிப்படையில் தான் அமெரிக்க நாட்டுக் கிறித்துவ சமய அமைப்புகள் தொண்டர்களைப் பின்தங்கிய நாடு •

ஆர்வமே முரசாய், பண்பாட்டே கவசமாய், அறிவே படைக்கலனாய், அறநெறியே வழித்துணையாய்க் கொண்டு, பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ உறுதியுடனும் ஊக்கத்துடனும் சமுதாயப் பணிபுரியும் தொண்டர் திருக்கூட்டம் அருவியோட்டம் போல தொடர்ந்து இருந்து கொண்டே வந்துள்ளது, நம் தமிழகத்தில். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'', "மக்கள் பணியே மகேசுவரன் பணி" என்ற அடிப்படை உண்மைகள், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தமிழர் தம் வாழ்வின் நெறி முறைக் கோட்பாடுகளாக இருந்து வருகின்றன. சமுதாயப் பணி என்ற அந்த நீண்டு நெடுங்கதையிலே—முக்கியமான அத்தியாயம், இன்றையத் தமிழகத்திலே எழுதப்பட்டு வருகிறது. அதுதான் "அண்ணா கண்ட சீரணி."

களுக்கு அனுப்பி, கல்விப் பணியிலும் பொதுப் பணியிலும் ஈடுபடுத்தின. 1953-ம் ஆண்டில் தோற்றுவிக்கப் பட்ட உலகப் பொதுப் பணிக் கழகத்தின் சார்பில் (International Voluntary Services) எகிப்து, ஜோர்டான், ஈராக், வியட்நாம், நேபாளம், கம்போடியா, கானு போன்ற நாடுகளுக்கெல்லாம் தொண்டர்கள் சென்று, அங்கெல்லாம் உழவும் தொழிலும் செழிக்க உதவினர்.

அமெரிக்க நாட்டு அதிபராகக் கீர்த்தி பெற்ற கென்னடியின் நல்லாசியுடன் 1961-ல் சமாதானச் சேனை பிறந்தது. சமாதானச் சேனையைத் துவக்கி வைக்கும்போது கென்னடி "உங்களுக்காக நாடு என்ன செய்யும் என்று கேட்காதீர்கள். நாட்டிற்காக நீங்கள் என்ன செய்வீர்கள் என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்" என்று குறிப்பிட்டார்.

கென்னடியின் நல்லுரையை ஏற்ற பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள், உதவி கேட்கும் நாடுகளில் கல்வி, வேளாண்மை, மருத்துவம், சமுதாய அபிவிருத்தி போன்ற துறைகளில் ஆக்கப் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

இங்கிலாந்து நாட்டில் 1958-ம் ஆண்டில் ஆலெக் டிக்சன் என்பவரால் நிறுவப்பட்ட பொதுத் தொண்டர் கழகம் (Voluntary Service Overseas) தொடர்ந்து அரும்பணி ஆற்றிவருகிறது.

### சின்னஞ் சிறு பிஞ்சு உள்ளத்தின் தொண்டார்வம்

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, இக் கழகத்தின் சார்பில் பொதுத் தொண்டாற்றச் சென்ற கோலின் என்பிரே எனும் ஆங்கிலேய மாணவனின் சாதனை குறிப்பிடத்தக்கது. அவனுக்கு வயது பதினெட்டு. சொந்த ஊர் ஹம்ப்சயர். அங்கிருந்து அவன் ஓரியல்லா எனும் குக்கிராமத்திற்குச் செல்கிருன். அந்தக் குக்கிராமத்தின் மக்கள்தொகை ஆயிரம்தான். அது ஒரு தனிக்காடு. அந்த கிராமத்திற்கும், பக்கத்து ஊர்களுக்கு இணைப்பு ஏற்படுத்தக் கூடிய சாலை வசதிகள் கிடையாது. அத்தகைய ஊரிலே என்பிரே மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்று, முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டான். ஒரே ஆண்டில், அந்தக் கிராமம் பெற்ற வளர்ச்சி மகத்தானது. அங்கு கிராம ஆட்சி மன்றம் மீண்டும் உருவாக்கப்பட்டது. புது வீடுகள் கட்டப்பட்டன. சாலைகள் அமைக்கப் பட்டன. கிராமத் தொழில்கள் புத்துயிர் பெற்றன. எல்லாவற்றிற்கும் மேலாக என்பிரேயின் ஆலோசனைப் படி நூற்றுக்கு மேற்பட்ட ஆடவரும் பெண்டிரும் சிறுவரும் அணிதிரண்டு, ஓரியல்லா ஆற்றில் நீர்த்துறை ஒன்றைத் தாங்களாகவே கட்டி முடித்தனர். அதனுல் பக்கத்து ஊர்களிலிருந்து படகுகள் வந்து செல்ல வசதி ஏற்பட்டது. படகுகள் மூலம் பத்திரிகைகள் வந்தன. மருந்துகள் போன்ற பண்டங்கள் வந்தன. பக்கத்து ஊர்களோடு தொடர்பு கொள்ள வழி பிறந்தது. கிராம மக்களிடம் மறைந்திருந்த ஆற்றலை வெளிப் படுத்தி, அவர்களைக் கொண்டே அந்த ஊரை முன்னேற்றப் பாதையில் அழைத்துச்சென்ற என்பிரேயை அந்த ஊர் மக்கள் எப்படி மறப்பர்?

தொண்டின் பெருமையைப் பாராட்டிச் செய்யும் இத்தகைய நன்னெறிக் கழகங்கள் அமெரிக்கா, இங்கிலாந்தில் மட்டுமல்லாமல் இஸ்ரேல், இத்தாலி, நெதர்லாந்து, சுவிட்ஜர்லாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளிலும் நற்பணி ஆற்றி வருகின்றன.

தொண்டர் கழகங்கள் உலக நாடுகளிலெல்லாம் அமைந்திருப்பது போலவே, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மணிவாசகத்தை உலகுக்குத் தந்த நம் செந்தமிழ் நாட்டிலும், "ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணியை" உருவாக்கிட வேண்டும் என்று நம் தமிழக முதல்வர் ஆசைப்பட்டார்.

### ஒரு மணி நேரம் பொதுத் தொண்டிற்கு..

"நாட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது. சமூகம் முழுவதும் எழுச்சி பெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும். தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும். 'எனக்காகவும், என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்' என்று உறுதி கொண்ட சில ஆயிரவர் நமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின் சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி. இந்த ஆர்வம் கொண்டோர் பல்லாயிரவர் உளர் என்ற நம்பிக்கையுடன், துவக்க கட்டமாக, மாவட்டத்துக்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு சீரணியை அமைத்திடும் திட்டத்தை மேற்கொள்ள அரசு முடிவு செய்திருக்கிறது" என்று தமிழகச் சட்டப் பேரவையில் சென்ற ஜூன் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் அறிவித்தார்கள். அது கேட்ட ஆயிரமாயிரம் இளைஞர்கள் புத்துணர்ச்சியும் புதுப் பொலிவும் பெற்று, அண்ணுவின் அன்புக் கட்டளையை ஏற்று, ஊர் மெச்சிட உலகம் போற்றிடப் பணி செய்யத் தயாராஞர்கள்.

செந்தமிழர் அணியாம் சீரணியை ஆகஸ்டு திங்கள் 16-ம் நாள் சென்னையில் அண்ணு துவக்கி வைத்தார். "அரசியல் கட்சி நோக்கத்திற்காகவோ வன்முறை, குழப்பத்தைத் தூண்டுவதற்காகவோ, சீரணி அமைக்கப்படவில்லை. அதைச் சீனத்துச் செங்காவலர் படையுடன் ஒப்பிடுவது தவருனதாகும்" என்று தெளிவு படுத்திஞர்.

சீரணியின் தூய நோக்கத்தை அன்று சந்தேகக் கண்கொண்டு பார்த்த சிலரும் ஐயம் தெளிந்து மனநிறைவு பெறும் வகையில்

[34-ம் பக்கம் பார்க்க]

# தவறு தன்னிடமே...

**பீகார் மாநிலத்துள்ள பகல்பூரில் ஊராட்சி முறை 1964-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாள் ஏற்படுத்தப்பட்டது. வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்பட்டன. ஊராட்சி செயல்படத் துவங்கி மூன்றாண்டுகளாகிவிட்டதால், ஊராட்சியின் வளர்ச்சியை, அதன் பயனை அறிவதற்காக ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.**

வேளாண்மையே பெரும்பான்மையோரின் தொழிலாக இருப்பதால், அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுடன், வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, ஊராட்சியைப் பற்றி ஓரளவு அறிய முடியுமல்லவா ?

இதையொட்டி, மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அதிகாரிகள், ஊராட்சித் தலைவர்களிடமிருந்து முதலில் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. வேளாண்மைத் திட்டங்களை ஒன்றியத் தலைவர்கள் உருவாக்குவதில்லை என்று 75 சதவீத அதிகாரிகள் கூறினார்கள். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள்தான், இத்திட்டங்களைத் திட்டுகின்றனர் என்று 83·63 சதவீத தலைவர்கள் மாற்றுக் கருத்துத் தெரிவித்தனர். இவ்வித மாறுபட்ட கருத்திற்கு காரணம் என்னவாயிருக்க முடியும் என ஆராய்ந்ததில், இரு சாராருமே திட்டங்களின் நோக்கங்கள் பற்றி தெளிவாக புரிந்திருக்கவில்லை என்பது தெரிந்தது, செலவினங்களைக் காட்டியே திட்டங்களின் தன்மையைப் பற்றி தலைவர்கள் கூறினர்.

### பிறர் மீது தான் குற்றம்

வேளாண்மைத் திட்டங்களில் அடங்கிய முக்கிய வேலைகளையும் அம்சங்களையும் பற்றி வினவியபோது, அதிகாரிகளும், தலைவர்களும் ஒரு மனதாக சிலவற்றைக் கூறினர். விதைகள், உரங்கள், நவீன முறைகள், பயிர்ப் பாதுகாப்பு ஆகியவையே அவர்களின் கருத்தில் மிகச் சிறந்தனவையாகும். நீர்ப்பாசனத்திற்கு அளிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் போதிய அளவில் இல்லையென்பது இரு சாராரின் கருத்தேயாகும்.

ஊராட்சி ஒன்றியத்தில் தயாரிக்கப்படும் வேளாண்மைத் திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்ற வினாவிற்கு, அவை ஒழுங்காக செயற்படுத்தப்படுவதில்லை என்ற பதிலே பெரும்பான்மையோரிடமிருந்து கிடைத்தது. நிதிப் பற்றாக்குறை, ஊராட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு இல்லாமை ஆகிய இரண்டுமே திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படாததற்குரிய காரணங்கள் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் அதிகாரிகளிடையேயுள்ள உற்சாகமின்மை, தலைவர்களை சரிவர புரிந்துக் கொள்ளாதது, திட்டத்தின் பொருத்தமற்ற தன்மை போன்றவையே திட்டங்களின் தோல்விக்கு காரணங்கள் என ஊராட்சி தலைவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

### பாசனத்திற்கே முதலிடம்

வேளாண்மையில் அடங்கியுள்ள பல்வேறு கூறுகளைப் பற்றியும், அவற்றில் ஊராட்சி ஒன்றியம் ஆற்றியுள்ள சாதனைகள் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. வேளாண்மைத் திட்டங்களை உருவாக்குதல், உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல், கடன் வசதி, விதைகள், நவீன கருவிகள், பூச்சி மருந்துகள், உரங்கள், பாசனம் போன்றவற்றில் எதற்கு முதலிடம் தரப்படவேண்டுமென்ற கேள்விக்கு இருபிரிவினரும் பாசனத்திற்கே முதலிடம் தந்தனர். பொதுவில், எல்லா பணிகளுமே எதிர்பார்த்த நிலையை எய்தவில்லை. விதைகள், உரங்கள், கடன்கள் அளித்தல் ஆகியவற்றில் ஓரளவு முன்னேற்றம் இருக்கிறது. முதன்மை இடம் தரப்பட்ட பாசனமோ, பின் தங்கிய நிலையில் இருக்கிறது.

அதிகாரிகள், ஊராட்சித் தலைவர்களிடையே நிலவும் ஒற்றுமை, ஒத்துழைப்பு பற்றி அடுத்து ஆய்வு செய்யப்பட்டது. எந்த ஒரு திட்டத்திற்கும் ஊராட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு துவக்கத்தில் நல்ல முறையில் இருக்கிறதென்று அறிய முடிந்தது. திட்டத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்னைகளுக்கு தலைவர்கள் நல்ல முடிவு காண்கிறார்கள். ஆனால் திட்டம் நிறைவேற்றப்படுகையில் அதனை பார்வையிடுவதிலும், உழவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் தலைவர்களுக்கு அதிக ஈடுபாடு இல்லை. இந்தக் கூற்றை, தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. திட்டத்தின் பல்வேறு நிலைகளிலும் தாங்கள் ஒத்துழைப்பதாகவும், உழவர்களுக்கு பயிற்சியளிப்பதாகவும் தலைவர்கள் பதிலுரைத்தனர்.

வட்டார நிலையில் ஊராட்சி முறை ஏற்பட்ட பிறகு, வேளாண்மைத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது உறுதி. இருப்பினும், அந்த வளர்ச்சி மேலும் பெருகவேண்டும். ஆனால் போதிய நிதி வசதி, அதிகாரிகள், தலைவர்களிடையே நல்லுறவு, நேசமனப்பான்மை ஆகியவை பெருமளவில் தேவைப்படுகின்றன. இவர்கள் ஒரு சேர நின்று, கைகோத்து பணியாற்றினால்தான், நாடு உணவுத் துறையில் தன்னிறைவை அடைய முடியும்.

**வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்:**

இந்திய வேளாண்மையை இயந்திரமயமாக்குவது மெதுவாகவே செயல் பட்டுவரினும், அது உறுதியாக நடைபெற வேண்டிய ஒரு செயலேயாகும். கூட்டுறவுப் பண்ணைகள், பெரிய பண்ணைகளில், இயந்திரங்களின் உதவியால் வேளாண்மை செய்தல், வேளாண்மையை இயந்திரமாக்கும் வழிக்கே இட்டுச் செல்கின்றன. இதன் வாயிலாக பண்ணை இயந்திரங்களின் தேவை பெருகி வருகிறது.




நாட்டிலுள்ள ஒவ்வொரு ஐந்து இயந்திரக் கலப்பைகளிலும் (டிராக்டர் கள்) ஐந்தாவது இயந்திரக் கலப்பை சோவியத் யூனியனில் தயாரிக்கப் பட்டதேயாகும். எற்கனவேயே நாட்டில் 15,000 இயந்திரக் கலப்பைகள் இருக்கின்றன. மேலும் இயந்திரக் கலப்பைகளை இறக்குமதி செய்வதற்குரிய முயற்சிகள் நடை பெற்று வருகின்றன. இந்திய உழவர்கள், சோவியத் இயந்திரக் கலப்பைகளை பெரிதும் விரும்புகின் றனர்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தின் இறுதியில், இந்தியாவிற்கு ஒவ்வோராண்டும் 30,000 இயந்திரக் கலப்பைகள் தேவைப்படும் என்று மத்திய அரசு உணவு, வேளாண்மை அமைச்சர் மாநிலங்கள் அவையில் கூறியுள்ளார். குறைந்த குதிரை யோட்ட சக்தியுள்ள இயந்திரக் கலப் பைகளுக்கே பெரும் தேவையிருப்ப தால், சோவியத் யூனியன், செக்கோஸ் லவேகியா நாடுகளிலிருந்து இவற்றைப் பெற மத்திய அரசு முயன்று வருகிறது என்று அவர் மேலும் கூறி யுள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரக் கலப்பைகளை வினியோகிக்கும் பணி, 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷ' னிடம் விடப்பட்டுள்ளது என்றும், இதனால் இலாபம் அடைவது தவிர்க்கப்படக்கூடும் என்றும் மத்திய உணவு, வேளாண்மை அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் கூறியுள்ளார்.

**இயந்திரக் கலப்பைகளின் தேவை**

சிறப்பாக குறைந்த குதிரை யோட்ட சக்தி யுள்ளவற்றின் தேவை பெருகி யுள்ளது என்பது முதலமைச்சர்கள் மாநாட்டிலும் வலியுறுத்தப் பட்டுள்ளது. எனவே, இந்த ஆண்டில் 2,000 சிறிய இயந்திரக் கலப்பைகளை, ரூ. 2·5 கோடி செலவில் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய் துள்ளது.

சோவியத் இயந்திரக் கலப்பைகள் என் இவ்வளவு புகழுடன் விளங்கு கின்றன என்பது தெரியவில்லை. ஆனால் அவை விலையில் மிகவும் குறை வானவை. அதே குதிரை ஓட்

—16-ம் பக்கம் பார்க்க

# உழைப்பால் உயர்ந்த வட்டாரம்

'நம் மக்கள் உழைப்பதற்கு சற்று தயங்குபவர்கள்' என்று எவரேனும் கூறினுல், அவரைப்பற்றி நாம் என்ன எண்ண வேண்டியிருக்கிறது? நம்முடைய கிராமவாசிகளுக்கு, திட்டங்களைப் பற்றி எடுத்துக் கூறி, அதன் நன்மைகளை விளக்கி, நவீன, திவிர வேளாண்மை முறைகளை தெளிவாக்கினுல், அவர்கள் வெகு சீக்கிரம் அவற்றை புரிந்துக் கொண்டு, உற்பத்தியைப் பெருக்கக் காத்திருக்கின்றனர். கேரள மாநிலத்திலுள்ள பெரிந்தாள்மன்ன என்ற வட்டாரம் இதை நன்கு விளக்குகிறது.

பல துறைகளிலும் இவ்வட்டாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. 35 சதவீதம் மக்களே எழுத்தறிவு பெற்றவர்களாயிருந்தனர். வேளாண்மையே அவர்களது முக்கியத் தொழில். இஞ்சி, மிளகு, மர வள்ளிக்கிழங்குகளும் ஆங்காங்கே பயிர் செய்யப்பட்டன. இவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய், ஆண்டு முழுவதற்கும் போதுமானதாகஇல்லை. இதனுல், அவர்கள் வேறு பல தொழில்களையும் நாடி செல்ல வேண்டியிருந்தது. அவர்களின் பொருளாதார நிலை சீரற்ற முறையிலிருந்தது.

### சில முக்கிய திட்டங்கள்

அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்க, வட்டாரம் ஒரு விரிவான திட்டத்தைத்தீட்டி செயல்படுத்த துவங்கியது. அவற்றில் சிலவற்றை இங்கே கூறலாம்:

பெரிந்தாள்மன்ன வட்டாரம் அனைத்தும் தீவிர விவசாயத் திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயியின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியே திட்டங்கள் தயாரித்து அளிக்கப்படுகின்றன. நவீன விவசாய முறைகளை நன்கு அறிந்துகொண்டு விட்ட அவர்கள், 1,625 ஏக்கர்களில் 'தய்நான்-3' என்ற நெல்ரகத்தை பயிரிட்டுள்ளனர். தரிசாகக் கிடந்த ஏராளமான நிலங்களில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. நவீன முறைகளின் படி இஞ்சி, மிளகு, வாழை மரங்கள் போன்றவை பயிரிடப்படுகின்றன.

இயந்திரங்களைப் பயன்படுத்தியும் விவசாயம் நடைபெறுகிறது. வாடகைக் கிரயத் திட்டத்தில், சென்ற ஆண்டு இரண்டு ரஷ்ய டிராக்டர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஐந்து டிராக்டர்கள் வினியோகிக்கப்பட்டுள்ளன. வட்டார தலைமை யிடத்திலும் ஒரு டிராக்டர் இருக்கிறது. உரிய வாடகையைச் செலுத்தி, வட்டார டிராக்டரைக் கொண்டு சென்று, அவரவர்கள் நிலத்தை உழுதுக் கொள்ளலாம்.

### வாடகைக் கிரயத் திட்டம்

பயிர்ப் பாதுகாப்பு கருவிகள், பூச்சி மருந்துகள் பாதி விலையில் விற்கப் படுகின்றன. 11 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 14 திட்டங்கள் செயல்படுத்தப்பட விருக்கின்றன. வெட்டத்தூர் ஊராட்சியிலுள்ள ''பூங்காவனம் திட்டம்'' முடிவுறும் போது, சுமார் 300 ஏக்கர்களுக்கு பாசன வசதி கிட்டும். வாடகைக் கிரயத் திட்டத்தில் 116 'பம்பு செட்டு' கள் அளிக்கப்பட்டுள்ளன.

கால்நடைகள், கோழிப்பண்ணைகளை விருத்திச் செய்வதற்காக, பெரிந்தாள் மன்னவில் ஒரு கால்நடை தலைமை நிலையமும், தாழக்கோடில் ஒரு துணை நிலையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் இங்கே இலவசமாக சிகிச்சையளிக்கப் படுகின்றன. செயற்கை கருத்தரிப்பு நிலையம் ஒன்றும் வட்டாரத் தலைமை யிடத்தில் நன்ருக செயல்பட்டு வருகிறது.

மிகவும், பின்தங்கிய நிலையிலிருந்த கூட்டுறவு இயக்கம், வட்டாரத்தின் முயற்சியால் முன்னுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது, 10 சேவைக் கூட்டுறவு வங்கிகள், ஒரு விற்பனை வங்கி, ஒரு கூட்டுறவு நகர வங்கி, ஒரு நில அடமான வங்கி ஆகியவை இருக்கின்றன.

ஓர் ஆதார சுகாதார நிலையமும் அதற்கு மூன்று துணை நிலையங்களும் துவக்கப்பட்டுள்ளன. மெலட்டூர் என்ற இடத்தில், 12 படுக்கை வசதி கொண்ட கட்டிடம் ஒன்று ரூ. 81,000 செலவில், ஆதார சுகாதார நிலையத்திற்காக கட்டப்பெற்று வருகிறது. ஒவ்வொரு துணை நிலையமும் ரூ. 11,500 மதிப்பில் கட்டப்பெறுகின்றன.

### மக்களின் ஒத்துழைப்பு

ஐந்து அரசினர் பள்ளிக்கும், ஐந்து உதவி பெறும் பள்ளிக்கும் கட்டிடங்

[அடுத்த பக்கம் பார்க்க]

## பிற மாநிலங்களில்

சோவியத் இயந்திரக் கலப்பைகள் : [ 14-ம் பக்கம் தொடர்ச்சி ]

சக்தியுள்ள பிற தர இயந்திரக் கலப்பைகளுடன், சோவியத் கலப்பைகளை ஒப்பிடுகையில், அவை விலை மலிவுடன், பராமரிப்பு, உழைப்புச் செலவுகளும் குறைவே.

### கலப்பையின் எண்ணற்ற பணிகள்

பல்வேறு மண்களிலும், வெப்ப நிலைகளிலும் சோவியத் இயந்திரக் கலப்பைகள் சோதித்துப் பார்க்கப்பட்டன. அவற்றிலெல்லாம் இவற்றின் தரம் நன்கு வெளிப்பட்டது. அவற்றை இயக்கும் முறையும் மிக எளிது. அவற்றின் நீண்ட நாள் உழைப்பு, தரம், நுணுக்கம் போன்றவற்றிற்கு உலகிலுள்ள எல்லோரும் ஒருமுகமாக நல்ல எண்ணம் கொண்டுள்ளனர். சோவியத் இயந்திரக் கலப்பைகளை உழுதல், சமப்படுத்துதல், விதைத்தல், உரமிடுதல், நடுதல், அறுவடை செய்தல், போக்குவரத்து, பாசனம் போன்ற பல்வேறு வேலைகளுக்கு பயன்படுத்தலாம்.

சான்றாக, ஓர் உழவர் ‘DT 14’ என்ற இயந்திரக் கலப்பையை வாங்கலாம். இது “மக்களின் இயந்திரக் கலப்பை” என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. பலவித வயல்களில் காய்கறி, பழங்கள், விவசாயப் பண்ணை, திராட்சைப் பண்ணை, காட்டுப் பண்ணைகள் போன்ற பலவித தொழில்களுக்கு ஏற்ப, இந்த இயந்திரக் கலப்பைகளை திருத்தி அமைத்துக் கொள்ள முடியும். மேலும் இவற்றை எளிதாக திருப்பவும், முன்னும் பின்னும் எளிதாக செலுத்தவும் முடியும். குறைந்த அளவிலேயே எண்ணெய்ச் செலவாகிறது.

அல்லது “பேலாரூஸ்—1966” என்ற இயந்திரக் கலப்பைகளை எடுத்துக்கொள்வோம். வேகமாகச் செலுத்தும் சக்தியையுடையது மட்டுமின்றி, உழுவது முதல் அறுவடை வரை எல்லா காரியங்களிலும், எல்லா பயிர்களுக்கும் இது பயன்படக்கூடியது. பெருமளவில் சுமைகளை இது இழுத்துச் செல்லக்கூடியது. பலவித கருவிகளில், 80 விதக் கருவிகளை இத்துடன் இணைத்து பல்வேறு வேளாண்மைச் செயல்களுக்கு இதைப் பயன்படுத்தலாம்.

### இந்த இயந்திரக் கலப்பைகளின் புகழுக்குக் காரணம்

‘விலாடி மிரெஜ்’ (டி—40) என்பது மற்றொரு இயந்திரக் கலப்பை. இந்த டி. 40 என்ற கலப்பையானது வேகத்தில் இதையொத்த மற்ற கலப்பைகளை விஞ்சிவிட்டது. வரிசையாக நடுவதற்கும் பல்வேறு பயிர்களை அறுவடை செய்வதற்கும் இது ஏற்றது.

காய்கறித் தோட்டங்கள், பழத் தோட்டங்கள், வர்த்தகப் பயிர் தோட்டங்கள் ஆகியவற்றிற்கு, டி—20 என்ற ஓர் இயந்திரக் கலப்பை உலகெங்கும் நற்பெயர் பெற்று வருகிறது. இது பருத்திப் பயிர்களுக்கும் சிறந்தது.

இந்திய உழவர்கள் இவற்றை விரும்பி வாங்குவதில் எவ்வித வியப்புமில்லை. அவற்றின் நீண்ட நாள் உழைப்பு பழுதடையாத் தன்மை, சிக்கனம், இயக்குவதில் எளிமை, செப்பனிடுவதற்கு வசதி ஆகியவையே இவற்றின் புகழுக்குரியனவாகும்.

# உழைப்பால் உயர்ந்த வட்டாரம்

[முன் பக்கத் தொடர்ச்சி]

கள் கட்டித் தரப்பட்டுள்ளன. கல்வித் திட்டங்களுக்கு வட்டாரம் முதலிடம் அளிக்கிறது.

எல்லா ஊராட்சிகளிலும் மகளிர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமுதாய நலக் கட்டிடம் ஒன்று செத்தல்லூரில் இருக்கிறது. பல்வேறு துறைகளில் விவசாயிகளை பழக்க, பயிற்சி முகாம்களுக்கும், ஆய்வு சுற்றுலாக்களுக்கும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### வட்டாரம் சிறக்க அரும்பணி

போக்குவரத்து வசதிகள் இவ்வட்டாரத்தில் மிகவும் குறைவு. 31 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்டுமே புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்களின் முழுமையான ஒத்துழைப்பு, வட்டார வளர்ச்சிக் குழுவின் ஆதரவு, தீவிர முயற்சி ஆகியவையே இவ்வட்டாரம் சிறந்து விளங்குவதற்கு முக்கிய காரணங்களாவன. வட்டார வளர்ச்சிக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும், வட்டாரம் சிறக்க வேண்டுமென்பதற்காக அயராது உழைக்கின்றனர்.

— o —

# சாலைகள் நிறைந்த ஊராட்சி ஒன்றியம்

விசாகப்பட்டினம் (ஆந்திர மாநிலம்) மாவட்டத்திலுள்ள சுப்பாவரம் ஊராட்சி சமிதியில் 75 கிராமங்கள், 115 குக்கிராமங்கள் இருக்கின்றன. சமிதியின் மொத்த பரப்பு 149·5 சதுர மைல்கள். சமிதியில் 8 மைல்களுக்கு தேசிய நெடுஞ்சாலைகளும் 33 மைல்களுக்கு மாநில நெடுஞ்சாலைகளும 86·1 மைல்களுக்கு சமிதியில் சாலைகளுமாக 127·1 மைல்களுக்கு நல்ல சாலைகள் அமைந்துள்ளன. மொத்த நிலப்பரப்பான 149·5 சதுர மைலில் 127·1 மைல் நீள சாலைகள் அமைந்திருப்பதிலிருந்து, இந்தச் சமிதியில் நல்ல போக்குவரத்து வசதிகள் இருப்பது தெளிவாகிறது. சமிதியின் கூட்டம் நடைபெறுவதற்கென ரூ. 30,000 செலவில் ஒரு பெரிய அறை கட்டப்பட்டு வருகிறது.

தும்பாலா, ஜேபுரம், சின்னதிபுலா அக்ரஹாரம், சுடபாவரம், பாபவதா மற்றும் லகாபுரம் என்ற பெரிய, பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் 75 கிராமங்களின் கடன் தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றன. குறுகிய காலக் கடனாக ரூ. 13,05,308 அளிக்கப்பட்டுள்ளது. இந்த தொகையில் லகாபுரம் அளித்த கடன்கள் சேரவில்லை.

### காய்கறி பயிர்கள் ஏராளம்

இங்குள்ள 17,261 குடும்பங்களில் 13,125 உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டுவிட்டனர். "ஸ்ரீ வேங்கடேஸ்வரா காய்கறி, பச்சை மிளகாய் உற்பத்தி செய்வோர் கூட்டுறவு சங்க"த்தில் 233 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இது சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இந்த சங்கத்தின் கண்காணிப்பில் 43 கிராமங்களிருக்கின்றன. அங்கு விளையும் பச்சை மிளகாய்களெல்லாம் சங்கத்தினால் கமிஷன் முறையில் வாங்கப்படுகின்றன.

1965-66-ம் ஆண்டில் எட்டுச் சாளப் பயிரும் 'தாய்ச்சுங் நேடிவ் 1' என்ற நெல் ரகமும் இங்கே கொண்டுவரப்பட்டன. 'தைய்நான்-3', செனுன் 2' ஆகிய மிகு விளைச்சல் தரும் நெல் ரகங்களும் சீக்கிரமே புகுத்தப்படவிருக்கின்றன. வரட்சிப் பகுதிகளில் வழங்குவதற்காக 2,976 மூட்டை நெல் விதைகளை சமிதி கொள்முதல் செய்துள்ளது. காய்கறிகள் 2,400 ஏக்கர்களில் பயிரிடப்படுகின்றன.

### கால்நடை வளர்ச்சி

தக்காவிக் கடன்கள் திட்டத்தில் 1965-66-ம் ஆண்டு, 10 ஆயில் என்ஜின்களும் ரூ. 30,000 கடன் தொகையும் வழங்கப்பட்டன. ஒரு டிராக்டரும், 2 மின்விசை டில்லர்களும் நல்ல அடமான வங்கி வாயிலாக இச் சமிதிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பாசன, நல மீட்சி திட்டத்தின்கீழ் 38 உழவர்களுக்கு ரூ. 38,200 அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சமிதியில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், உதவித் தொகை பெறும் கோழிப்பண்ணைகளில் ஐந்தும் இருக்கின்றன. உள்ளூர் கால்நடைகளின் தரத்தை உயர்த்த மூன்று முர்ரா காளைகள், உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுப்பாவரம் சமிதியில் 118 துவக்கப் பள்ளிகளும், ஓர் உயர் துவக்கப் பள்ளியும், ஓர் ஆதார முதுநிலைப் பள்ளியும் இருக்கின்றன. மதிய உணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை 5,407. இங்குள்ள 123 பள்ளிகளில் 46 பள்ளிகள் சமிதிக்குச் சொந்தமான கட்டிடங்களிலும், 17 வாடகைக் கட்டிடங்களிலும், எஞ்சியவை வாடகையில்லாத கொட்டகைகளிலுமிருக்கின்றன.

இங்கு 60 இளைஞர் மன்றங்கள் இருக்கின்றன. இம்மன்றங்கள், எல்லா வளர்ச்சிப் பணிகளிலும் பங்கு பெறுகின்றன.

### வரிப் பாக்கியே இல்லை

58 கிராம ஊராட்சிகளில் தும்பாலா என்ற ஒரே ஓர் ஊராட்சிதான் முதல் நிலை ஊராட்சியாகும். எஞ்சியவை இரண்டாம் நிலை ஊராட்சிகளாகும். எல்லா ஊராட்சிகளுமே, வரி பாக்கி ஏதேனுமின்றி முழுவதையும் வசூலித்துவிட்டன.

மகளிர் மன்றங்கள் ஊராட்சிகளில் செயல்படுகின்றன. 60 மகளிர் மன்றங்களில் 976 உறுப்பினர்களிருக்கின்றனர்.

"வளமான வாழ்வைக் காண போமா?" என்று ஏங்கி, எண்ணியிருந்த 75 ஊராட்சிகளுக்கு சுப்பாவரம் ஊராட்சி சமிதி ஒரு நல்ல வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது.

# கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு

கிராம வானொலி மன்றங்களின் 8-வது ஆண்டு கருத்தரங்கும், மாவட்டரீதியான சிறந்த வானொலி மன்றங்களுக்குப் பரிசளிப்பு விழாவும் 22–11–67-ல், திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்தில் அமைந்த பந்தலில் நடைபெற்றது. மாண்புமிகு விவசாய அமைச்சர் திரு அ. கோவிந்தசாமி அவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு, முதன்மை பெற்ற வானொலி மன்றங்களுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய இயக்குநர் திரு. எம். எஸ். கோபால் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மற்றும் இக்கருத்தரங்கில், கிராம வளர்ச்சி இயக்குநர், மக்கள் தொடர்பு அதிகாரி, தலைமை வானொலி அதிகாரி, கோட்டாட்சித் தலைவர்கள், மாவட்ட விவசாய அதிகாரிகள், பஞ்சாயத்து ஒன்றியங்களின் பெருந்தலைவர்கள், ஆணையர்களும் கலந்துகொண்டனர். மேலும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களான திரு எம். எஸ். மணி, திரு கந்தசாமி, திரு பி. எஸ். முத்துச்செல்வன் முதலியவர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

பரிசு பெற்ற 13 வானொலி மன்றங்களுக்கும் ஒவ்வொரு சுழற்கேடயமும், நற்சான்றிதழும, டிரான்சிஸ்டர் ரேடியோ செட்டும் பரிசாக வழங்கிய பின், விவசாயத்துறை அமைச்சரவர்கள் தனது உரையில் வானொலி பற்றிக் குறிபபிடும்பொழுது,

"வானொலி ஒரு சாதாரண பொழுது போக்குக் கருவியாக மட்டுமல்லாமல், மக்களைப் பல துறையிலும் முன்னேறச் செய்யத்தக்க பல அரிய நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பி வருகிறது. எந்த ஒரு காரியத்தை விளம்பரம் செய்ய வேண்டுமென்றாலும், அதை வானொலியினால் தீவிரமாகவும் துரிதமாகவும் செய்ய முடிகிறது. திட்டமிட்டவாறு விவசாயத்துறையில் நூதன முறைகளை விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்குவதற்காகவே அகில—இந்திய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நிலையங்களில் தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் ''பண்ணையும் இல்லமும்" என்ற பெயரில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் தேதி முதல் இயங்கி வருகிறது. புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் கருத்துக்களையும் திறமையாக எடுத்துரைக்கும் பொழுது கேட்டறிந்துகொள்வது எளிதாகவே இருக்கிறது" என்றார்.

மேலும், ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பற்றி அவர் கூறியதாவது:—

"ஒவ்வொரு நாளும் விவசாய சம்பந்தமான ஏதாவது ஒரு பேச்சு அல்லது விவாதம் நடைபெறும். கிராம வானொலி மன்றங்கள் அனுப்பும் கேள்விகளுக்கு வாரந்தோறும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பதில் கூறபபடுகின்றன. தவிர, இந்த நாட்களில் விவசாயம் சம்பந்தமான பொருள் பற்றி பல நிபுணர்களின் பேச்சும் ஒலிபரப்பப்படுகிறது. மாதத்தின் முதல் நாளில், அந்த மாதத்திற்கான சாகுபடி குறிப்புக்களும், முதல் புதன்கிழமைகளில் விவசாய அரங்கம் பற்றிய நிகழ்ச்சிகளும், இரண்டாம், நான்காம் புதன்கிழமைகளில் விவசாயச் செய்திச் சுருளும் உழவர் பெருமக்களின் மனதைக் கவர்ந் துள்ளன. திடீரென்று ஏற்படும் சீதோஷ்ண

**சிறந்த கிராம வானொலி மன்றங்களுக்குப் பரிசளிப்பு**

## மாவட்ட வாரியாக பரிசு பெற்ற கிராம வானொலி மன்றங்கள்

1. செங்கற்பட்டு மாவட்டம்—
**குணகரம்பாக்கம் பெண்கள் வானொலி மன்றம்**
ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்
முத்துலட்சுமி பாசு, முக்கிய சேவிகா

2. வட ஆர்க்காடு மாவட்டம்—
**எஸ். வி. நகரம் வானொலி மன்றம்**
ஆரணி ஊராட்சி ஒன்றியம்
திரு கே. எம். வரதராஜன் முதலியார், தலைவர்
திரு எஸ். பட்டாபிராமன், ஆணையர்

3. தென்னார்க்காடு மாவட்டம்—
**கீழ்மாம்பட்டு மன்றம்**
வல்லம் ஊராட்சி ஒன்றியம்
திரு ஜி. முத்துவீரா ரெட்டியார், தலைவர்
திரு எ. என். ரெங்கநாதன், ஆணையர்

4. தஞ்சாவூர் மாவட்டம்—
**பாபுராஜபுரம் வானொலி மன்றம்**
திரு வி. நாகராஜன், அமைப்பாளர்
திரு ஆர். சின்னத்தம்பி, ஆணையர் (பொறுப்பு)

5. தர்மபுரி மாவட்டம்—
**பெண்ணகரம் வானொலி மன்றம்**
பெண்ணகரம் பஞ்சாயத்து யூனியன்
திரு எம். வி. வெங்கட்ராம செட்டியார், அமைப்பாளர்
திரு பி. காசிராஜன், ஆணையர்.

6. சேலம் மாவட்டம்—
**முத்துக்குட்டியூர் பெண்கள் வானொலி மன்றம்**
மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம்
திரு எம். வெள்ளையன், தலைவர்
திரு ஆர். காளிதாஸ், ஆணையர்.

7. திருச்சிராப்பள்ளி மாவட்டம்—
**சேருகுடி வானொலி மன்றம**
தாத்தையங்கார் பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
திரு எம். ராமச்சந்திரன், தலைவர்
திரு எம். எ. ஐ. செல்லையா, ஆணையர்,

8. கோயம்புத்தூர் மாவட்டம்—
**பெத்தாம்பாளையம் வானொலி மன்றம்**
பெருந்துறை ஊராட்சி ஒன்றியம்,
திரு பி. எஸ் குப்புசாமி கவுண்டர், தலைவர்,
திரு எஸ். ரெங்கசாமி, ஆணையர்.

9. கன்னியாகுமரி மாவட்டம்—
**அச்சங்குளம் வானொலி மன்றம்**
அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்
திரு எஸ். தாசன், அமைப்பாளர்
திரு எஸ். டி. ஜெயபாலன்; ஆணையர்.

10. இராமநாதபுரம் மாவட்டம்—
**பாண்டுக்குடி வானொலி மன்றம்**
திருவாடானை ஊராட்சி ஒன்றியம்
திரு எம் டி. எஸ். பிச்சை செட்டியார், அமைப்பாளர்
திரு என். எ. அழகப்பன், ஆணையர்.

11. மதுரை மாவட்டம்—
**திருமால்புரம் வானொலி மன்றம்**
மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்
திரு என். ஐயம்பெருமாள், தலைவர்
திரு பி. பாண்டியன், ஆணையர்.

12. திருநெல்வேலி மாவட்டம்—
**செட்டியூர் வானொலி மன்றம்**
கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம்
திரு அ. மணியரசு, அமைப்பாளர்
திரு எல். கோவிந்தன், ஆணையர்

13. நீலகிரி மாவட்டம்—
**தும்மணப்பட்டி வானொலி மன்றம்**
உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம்
திரு ஜே. தாத்தன், அமைப்பாளர்
திரு பி. கே. மாதன். ஆணையர்.

---

மாறுதல்களும் காலை ஒலிபரப்பில் சுமார் 4 நிமிடங்கள் முக்கிய அறிவிப்பாகக் கூறப்படுவது மிக்க பயனுள்ளதாகும்.

இன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்க்க நாம் முழுக்க முழுக்க கிராமங்களையே நம்பி இருக்கிறோம். ஆகவே நமது நாட்டின் முன்னேற்றமும், கிராமங்களின் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுவதற்கு, கிராம வானொலி மன்றங்கள் விவசாய வானொலி நிகழ்ச்சிகளை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விவசாயத்தின் இன்றைய நிலையை உணர்ந்து, நாடு தன்னிறைவு பெறுவதற்கு, நாம் யாவரும் ஒற்றுமை மனப்பான்மையோடும், தியாக உணர்ச்சியோடும் உழைப்போமேயானால் உலகம் போற்றும் ஒப்பற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்பதில் ஐயமில்லை” என்றார்.

திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு பி. வேலாயுதம் அரிய கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். சேலம் மாவட்டம் முத்துக்குட்டியூர் பெண்கள் வானொலி மன்றத்தின் சார்பாக பரிசுகளைப்

பெற்ற திரு வெள்ளையன் அவர்கள், "உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக இருப்பது வானொலி என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்று. ஏ.டி.டி. 27 உயர்ரக நெல்லைத் தமிழகமெங்கும் பரப்பிய பெருமை கிராம வானொலி மன்றங்களையே சார்ந்தது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

நீலகிரியிலிருந்து வந்திருந்த திரு ஜே. தாத்தன், கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் திரு பி. எஸ். தாசன், எம். ஏ., தாத்தய்யங்கார் பேட்டை திரு எஸ். செல்லையா, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் செட்டியூர் வானொலி மன்றம் திரு ஆ. மணியரசு ஆகியோர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்கள் தமது உரையில் கேள்விச் செல்வத்தின் சிறப்பை தெளிவாக எடுத்துரைத்தார்.

"கற்றலிற் கேட்டல் நன்று" என்பது ஆன்றோர் வாக்கு. எனவே திருக்குறளில் கல்வியை அடுத்துக் கேள்வி என்ற தலைப்புடன் பத்துக் குறள்களில் கேள்விச் செல்வத்தின் சிறப்பு விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அறிவு பெறுவதற்கான முக்கிய சாதனம் கல்வி மட்டுமல்ல, கேள்வியும் வேண்டும். கேள்விச் செல்வத்தை வளர்ப்பதில் நமது நாட்டு மக்கள் தனிக் கவனம் செலுத்தி வந்தார்கள். தமிழ் நாட்டுப் பேரரசர்கள் புலவர் பெருமக்களுடன் உரையாடி தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டதை நமது இலக்கியங்கள் விளக்கிக் கூறுகின்றன. முகலாயப் பேரரசர் அக்பர் படிக்கத் தெரியாதவராக இருந்தாலும் கேள்விச் செல்வத்தின் துணையால் பேரறிஞராகி, பேரரசனாக வாழ்ந்ததற்கு சரித்திரம் சான்று கூறுகின்றது. இக்கேள்விச்செல்வத்தின் மூலம் சமூகக் கல்வியை விரைவில் பரப்பி, குறிப்பாக விவசாயப் பெருமக்களிடையே அறிவொளியைப் பரப்புவதே கிராம வானொலி மன்றங்களின் அடிப்படைத் தத்துவமாகும். சமூகக் கல்வியை மக்களிடையே ஓயாமல் பரப்பிக்கொண்டிருக்க,கிராமங்களில் செய்துள்ள அமைப்பே கிராம வானொலி மன்றங்களாகும். ஜப்பான், மலேயா ஆகிய நாடுகளில் நடந்த ஒலிபரப்பாளர்கள் மாநாட்டிலும், கனடாவில் நடந்த 'காமன்வெல்த்' ஒலிபரப்பு மாநாட்டிலும் கிராம வானொலி மன்றத் திட்டம் பற்றி தீவிரக் கவனம் செலுத்தப்பட்டது.

மாதர் வானொலி மன்றங்களும் தமிழகத்தில் நன்கு செயலாற்றி வருவது பெருமைக்குரியதாகும். இந்த விஞ்ஞான யுகத்தில், வானொலி மன்றங்களின் மூலமாக மக்களுக்கு அறிவொளி பரப்பி உற்பத்தியைப் பெருக்கி நாட்டை வளம் பெறச் செய்வோமாக" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஆணையர்களின் சார்பாக உரையாற்றிய மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் திரு பி. பாண்டியன், வானொலி மன்றங்களின் வளர்ச்சியையும் அதனாலடைந்த பயனையும் செந்தமிழ்ப் பாக்களாகவே இயற்றிப் பாடியது, கருத்தரங்கிற்கே சுவையூட்டியது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஹரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் கூறிய கருத்து நடைமுறையில் மேற்கொண்டு பயன்பெறத்தக்கதாகும். "கோட்டாட்சித் தலைவர்களும், மாவட்ட விவசாய அதிகாரிகளும், தங்கள் ஆய்வு அறிக்கைகளில் (Periodical Review) வானொலி மன்றங்களின் வளர்ச்சி பற்றிய தெளிவான குறிப்புகளையும் சேர்க்க வேண்டும். இந்த நிர்வாக நடவடிக்கையின் மூலம், கிராம வானொலி மன்றங்கள் இடையுறாது இயங்கச் செய்ய முடியும்" என்று கூறினார்.

திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய உதவி இயக்குநர் திரு பி. ஆர். பி. ரெங்கன் நன்றி கூற, கருத்தரங்கு இனிது நிறைவு பெற்றது.

தமிழக அரசு சிறந்த வானொலி மன்றங்களுக்குப் பரிசளித்ததன் மூலமாக வானொலி மன்றங்களின் வளர்ச்சியில் புதிய உற்சாகம் உண்டாகும் என நிச்சயமாக நம்பலாம்.

---

**கிராம நலம்**

**ஆண்டு சந்தா ரூ. 2.**

தனிப் பிரதி விற்பனைக்குக் கிடையாது.

சந்தா மற்றும் கடிதப் போக்குவரத்துக்களுக்கு
" மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராம வளர்ச்சி—இயக்குநர் அலுவலகம்,
கோட்டை, சென்னை-9 "
என்ற முகவரிக்கு எழுதவும்.

கதை, கட்டுரை அனுப்புவோர்
ஆசிரியர், 'கிராமநலம்',
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
கோட்டை, சென்னை-9 "
என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# நகராட்சி-அமைச்சர் கருத்தரங்கு



இந்திய அரசின் சுகாதாரம் - குடும்பக் கட்டுப்பாடு அமைச்சகத்தின் சார்பில் நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்தரங்கும், உள்ளாட்சித் துறை அனைத்திந்திய மைய மன்றத்தின் 12-வது கூட்டமும் (Central Council of local Self-Government) சென்னை இராஜாஜி மண்டபத்தில் டிசம்பர் 8-ம் தேதி முதல் 11-ம் தேதி வரை நடைபெற்றன. மத்திய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் திரு சத்திய நாராயண சின்கா மாநாட்டில் உரையாற்றினார். தமிழக அரசின் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழக ஆளுநர் திரு உஜ்ஜல் சிங் சிறப்புரை ஆற்றினார்.







படம் 1. பெல்ஜிய நாட்டு நாளிதழான "De Nieuwe Gids" பத்திரிகையின் பொருளாதாரப்பகுதி ஆசிரியர் திரு ஏ. ஜி. சமாய் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சரை, 5-12-'67-ல் சென்னையில் சந்தித்து உரையாடினர்.

படம் 2. மலேயா நாட்டு தமிழ்ப் பள்ளி ஆசிரியாகளின் தேசிய சங்கத்தினைர் சேர்ந்த 25 உறுப்பினர்கள், தமிழக உள்ளாட்சித் துறை அமைசசர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்களை 4-12-'67 அன்று சென்னை கோட்டையில் சநதிததனா.








படம் 1 17-11-'67-ல் திருப்பாதிரிப்புலியூரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கடலூர் நகராட்சியின் குறைந்த வருவாயினருக்குக் குடியிருப்புக்கான அடிக்கல்லினை நாட்டினர்.

படம் 2. அமெரிக்க நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் குழுவினா 30-11-'67-ல் சென்னையில் இராஜாஜி அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

படம் 3 'கோ' நிறுவனத்தா. பளளிச் சிறுவர்களுக்கு இலவசமாக அளிக்கும பாடப் புத்தகங்களை, அவர்களுக்கு அளிப்பதற்காக வேண்டி, உள்ளாட்சித்துறை அமைசசர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் பெற்றுக் கொள்கிறர்.

(சேலம் மாவட்டம், நாமக்கல் தொகுதி- மோகனூர், 12-11-'67.)

படம் 1. தென் ஆர்க்காடு மாவட்ட சீரணிப் படைத் துவக்க விழா, 17-11-'67-ல் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் சீரணிப் படையின் அணி வகுப்பினைப் பார்வையிடுகிறார்.




படங்கள் 2-3—சமுதாய நலத் துறைச் சீரமைப்பு—சர்வகட்சித் தலைவர்களுடன் ஆலோசனை.

சமுதாய நலத் துறைச் சீரமைப்புப் பற்றி, திரு நல். முருகேச முதலியார் அவர்கள் அளித்த அறிக்கையின்மீது, சர்வ கட்சித் தலைவர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் ஆலோசனை நடத்தினார். 26-11-'67-ல் கோட்டையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட சர்வ கட்சித் தலைவர்கள்





# கேள்வியும்-பதிலும்

[கிராம வானொலி மன்றங்கள், கிராம மக்களிடையே அறிவொளி பரப்பும் பணியைச் செய்து வருகின்றன. கிராம மக்கள் வானொலி நிகழ்ச்சிகளை அமைதியாகக் கேட்டு, கூடிப்பேசி விவாதித்து, அநுபவத்தில் பயன் காணவேண்டும் என்பதே கிராம வானொலி மன்றத்தின் நோக்கம். வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு கிராம வானொலி மன்றங்கள் எழுப்பும் கேள்விகளுக்கு வானொலியில் பதில்கள் அளிக்கப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே தொகுத்து "கேள்வியும்-பதிலும்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம். —ஆசிரியர்]

*ஏரல் கிராம வானொலி மன்றம்—திருநெல்வேலி மாவட்டம்.*

கேள்வி: *எங்கள் பகுதியில் விவசாய நிலத்தில் கோரை அதிகமாக இருக்கிறது. இதை எவ்வளவு எடுத்தாலும் போவதில்லை. இதற்கு எந்த களைக் கொல்லியை எந்த அளவு எப்பொழுது போடலாம்?*

பதில்: கோரை—அருகு போன்ற புல் வகைக் களைகளை அழிக்க 'டால்பான்' என்ற களைக்கொல்லியை ஏக்கருக்கு 5–10 கிலோ அளவில் 50–60 காலன் நீரில் கலந்து தெளித்து அழிக்கலாம். இம்மருந்து தெளித்த 2 வாரங்களில் களைகள் பட்டுப்போகும். ஆனாலும் இக்களைகளின் கீழ் பரவியுள்ள தண்டு, மற்றும் கிழங்குகளின் உதவியால் மறுபடியும் துளிர்க்குமாகையால், மருந்தைத் திரும்பத்திரும்ப தெளித்துத்தான் கோரை–அருகுபோன்ற புல் வகைகளை அழிக்க முடியும். குறிப்பிட்ட அளவு மருந்தை ஒரே தடவையில் தெளிப்பதற்குப் பதிலாக 2–3 முறைகள் 15–20 நாட்கள் இடைவெளியில் சிறிது சிறிதாகத் தெளிப்பது நல்லது.

*சீதக்கமங்கலம் கிராம வானொலி மன்றம்—தஞ்சாவூர் மாவட்டம்.*

கேள்வி: *பூமியில் போட்டு கிளறிவிடும் மருந்து ஓர் ஏக்கருக்கு எவ்வளவு போட வேண்டும்? என்ன செலவாகும்?*

பதில்: மண்ணில் இட்டுக் கிளற 'சிமசீன்' என்னும் மருந்தை ஏக்கருக்கு 4–6 கிலோ அளவில் போட்டு கலக்க வேண்டும். இதனால் ஏக்கருக்குச் சுமார் ரூ.30 செலவாகும்.

*பெத்தாம்பாளையம் கிராம வானொலி மன்றம்—கோயம்புத்தூர் மாவட்டம்.*

கேள்வி: *களைகளைக் கொல்வதற்கு மருந்து அடிக்கும் போது பயிரும் சாக நேரிடும் என்று கருதுகிறோம். தங்கள் கருத்து என்ன?*

பதில்: அங்கத்தினர் கருதுவது சரியல்ல—தங்களின் கருத்துக்கு எதிராக ஓர் உதாரணமும் தர விரும்புகிறோம். அதாவது சோளம், கம்பு போன்ற தானியப் பயிர்களைத் தாக்கும் சுடுமல்லியை, 2, 4–டி என்ற உப்பை $1\frac{1}{2}$–2 கிலோ அளவில் கலந்து தெளிப்பதால் பயிரைப் பாதிக்காமல் கட்டுப்படுத்தலாம். எந்தப் பயிரும் இல்லாத தரிசு நிலத்தில் களைக் கொல்லி மருந்துகளை உபயோகிப்பது மிகவும் நல்லது.

*சிவலார்குளம் கிராம வானொலி மன்றம்—திருநெல்வேலி மாவட்டம்.*

கேள்வி: *நிருபணங்கள் என்றால் என்ன?*

பதில்: நிருபணம் என்றால் நிருபிப்பது என்று பொருள். அதாவது ஒரு நிலத்தின் ஒரு பகுதியில் விவசாய முறைப்படி சாகுபடியும்—அடுத்த பகுதியில் இலாகா சிபாரிசுப்படி சாகுபடி முறையும் செய்து காண்பிப்பதும் பயிரின் வளர்ச்சி முதல் இறுதியாக மகசூல் கிடைக்கும் வரை ஒவ்வொரு நிலையிலும் ஒப்பிட்டு காண்பிப்பது போல் நிருபித்து சாகுபடி செய்வதையே நிருபணங்கள் என்று கூறுகிறோம்.

கேள்வி: ஹெச். பி. 1 கம்பு (வீரிய ஒட்டுக் கம்பு) முதன்முதலில் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது ?

பதில்: வெவ்வேறு இன கம்பு ரகங்களை இனக் கலப்பு செய்து உருவான கம்பை விதைத்த பொழுது ஒரு தனிப் பட்டவீரியம் இருப்பதை உணர்ந்தனர். அவ்வாறு "வி.டி.பி.ட் 23-ஏ" என்ற மூலவகையோடு "பில்-3 பி" என்ற வேறொரு வகையை இனம் கலந்த போது உருவான கம்பை விதைத்த போது, அதில் தனிப்பட்ட வீரியம் வெளிப்படுவது தெரிந்தது. இந்த இனத்திற்கு 'ஹெச். பி-1" என்று பெயரிட்டு விநியோகிக்கப்பட்டது. இது இறவை சாகுபடிக்குச் ஏற்றது. ஓர் ஏக்கர் நடவு செய்ய ஒரு கிலோ கம்பு விதை தேவைப்படும். இப் பயிர் 80-85 நாட்களில் அறுவடைக்கு வருகிறது.

## காவேரிராஜபுரம் கிராம வானொலி மன்றம்.

கேள்வி: நமது நாடு பருத்தி சாகுபடியில் எந்த நிலையில் உள்ளது?

பதில்: நமக்கு ஆண்டுக்கு 79 லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. ஆனால் நமது நாட்டில் விளைவது 58 லட்சம் பேல் பஞ்சுதான். மீதியுள்ள 12 லட்சம் பேல் களுக்கு, எகிப்து, அமெரிக்கா போன்ற நாடுகளைத்தான் நம்பி இருக்கிறோம்.

## ஆவணிப்பூர் கிராம வானொலி மன்றம்,—தென் னார்க்காடு மாவட்டம்.

கேள்வி: புகையிலை சாகுபடி செய்ய அரசாங்க அனுமதி வாங்க வேண்டுமா?

பதில்: புகையிலை சாகுபடி செய்ய அரசாங்க அனுமதி எதுவும் தேவை இல்லை. சாகுபடி செய்யும் விவசாயி எவ்வளவு விஸ்தீரணத்தில் எந்த ரகம் புகையிலை பயிரிடு கிறார் போன்ற புள்ளி விவரத்தை சுங்க வரி இலாக்கா விற்குத் தெரியப்படுத்த வேண்டும். அறுவடையில் கிடைத்த மகசூல் விவரத்தையும் தெரிவிக்க வேண்டும். இதற்கென்டான சுங்கவரி விவசாயி கட்ட வேண்டியதில்லை. இந்தவரி கொள்முதல் செய்யும் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

கேள்வி: புகையிலைச் சாகுபடியில் தமிழகம் தன் னிறைவு பெற்றிருக்கிறதா?

பதில்: ஆம். தமிழகத்தில் புகையிலை 42,500 ஏக்கரில் சாகுபடியாகிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தமட்டில் அகிலஇந்திய உற்பத்தியில் மூன்றாவது ஸ்தானத்தையும், பரப்பளவில் ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளது.

## குறிச்சி கிராம வானொலி மன்றம்.

கேள்வி: பசுக்களுக்குச் செயற்கை முறையில் கருத் தரிக்கச் செய்வதில் ஏதேனும் தீங்கு உண்டா? அதிகமாக எத்தனை தடவைகள் செயற்கை முறையைக் கையாள லாம்?

பதில்: பசுவுக்கு கன்று ஈனும் சக்தி இருக்கும் வரைக்கும்—ஒவ்வொரு தடவையும் செயற்கைமுறையையே அனுசரிப்பதில் எவ்விதக் கெடுதலும் இல்லை. இயற்கை யிலேயே சருத்தரிக்காத பசுவை செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்ய முடியும்.

## கீழையூர் கிராம வானொலி மன்றம்.

கேள்வி: பசுக்கள் கன்று போட்டு எத்தனை மாதங்கள் வரை பால் கொடுக்கும்?

பதில்: கன்றுபோட்டு 300 நாட்கள் வரை பால் கறக்கலாம், பாலின் அளவு, இனம், பராமரிப்புத் தன்மையைப் பொறுத்ததே. பசு கருத்தரித்த பின் 7 மாதங்கள் வரை பால் கறக்கலாம். பிறகு சிறிது சிறிதாகப் பாலின் அளவு குறைய ஆரம்பிக்கும்.

## கீழ அருணாபுரம் கிராம வானொலி மன்றம்.

கேள்வி: ஊராட்சிப் புறம்போக்குகளில் முந்திரி பயிரிட அரசாங்கம் கடன் வழங்குவதாகக் கூறப்பட்டது. ஊராட்சி மன்றம் கடன் பெற வழி முறைகள் யாது?

பதில்: ஊராட்சி மன்றத்தின் மாதாந்திர அல்லது விசேஷக் கூட்டத்தில், ஊராட்சிப் புறம்போக்கு நிலங்களில் முந்திரி பயிரிடுவதெனத் தீர்மானித்து, தீர்மான நகல் நிலத்தின் சிட்டா, அடங்கற் குறிப்புகளுடன் விண்ணப்ப நமூனாவில் தலைவரோ அல்லது நிர்வாக அதிகாரியோ கையொப்பமிட்டு, டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிக்கு அனுப்பவேண்டும். ஊராட்சி மன்றத்தின் பொருளாதார நிலை, கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, மாவட்ட விவசாய அதிகாரிக்கு அது அனுப் பப்படும். வட்டார விவசாய அலுவலர் சாகுபடி செய்யப் போகும் நிலங்களைப் பார்வையிட்டு தனது அறிக்கையை அனுப்புவார். மாவட்ட விவசாய அலுவலரால் ஊராட்சிக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அதிகப் பட்சமாக ரூ. 2,000 வரை கடன் தொகை வழங்கப்படும்,

—:o:—

முதலமைச்சரின் பேருரை : [4-ம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப் பார்க்கிறேம். இவற்றுக்கெதிரான கண்டனங்கள்-எதிர்ப்புகள் தோன்றியிருந்தும் கூட நம்மையறியாமல் நாம் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருந்திருக்கிறேம்.

இக் கொடுந் தீமைகளை எதிர்த்துப் போராட தீரமிக்க வீரர்கள் தோன்றியபொதெல்லாம் அவர்களை உன்னதமான கருத்துக்களையும்-புனிதமான கொள்கைகளையும் ஒழிக்க வந்தவர்களென்று குறைகூறி வந்துள்ளோம்.

உள்ள வாழ்க்கை முறையைச் சீரழிய விட்டு விட்டு பகுத்தறிவாளர்களுக் கெதிராக குறை

ஒருமைப்பாடு ஏற்படவேண்டும் என நினைப்பவர்களுக்கு உள்ளபடியே அந்தக் கருத்தில் ஆர்வம் இருக்கிறது என்றல், அந்தக் கருத்தைத் தெளிவாக இங்கு எடுத்துரைக்க வேண்டும்.

**இலட்சியம் உயர்ந்ததானலும் அதற்காக தவறான செயல்முறையைப் பின்பற்றமாட்டோம்**

ஒற்றுமைக்கும் ஒரே தன்மைக்குமுள்ள வேறுபாடு புரியாது சிலர் குழப்பிக்கொள்கிருர்கள்.

ஒற்றுமை என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் அடிமைப் பண்ணையாக மாறுவதற்கு தெரிந்தோ—தெரியாமலோ அனுமதிக்கக்கூடாது.

## கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல்கள்

கூறுவது மென்மேலும் மூடநம்பிக்கைகள் வளரவும் இந்தச் சமுதாயம் சீரழியவுமே துணை புரிவதாகும்.

சமுதாயத்தினைச் சீரமைக்கும் பணியில் நீங்கள் ஈடுபடவேண்டும். நீண்ட காலமாகவே இப்பணி செய்யப்படாமல் உள்ளது. பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்று பட்டதாரிகளாகி வெளியேறுவோரை அப்பணிக்குரிய தூதுவர்களாக நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களில் சமுதாயச் சீரமைப்புக் குறித்த சிக்கலான விஷயங்களை திறந்த மனதோடு—முழுமையாகவும் விவாதிக்க வாய்ப்பிருக்கின்றது.

இப்பல்கலைக் கழகம் போன்ற அறிவாலயங்கள் மக்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதாக இருக்க வேண்டுமென்று மக்கள் நினைக்கிருர்கள்.

அண்ணமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே! ஜனநாயகத்தோடு ஒட்டி வாழ முடியாத சாதி முறையை எதிர்த்துப்போர் தொடுத்

எவ்வளவுதான் உயர்ந்த இலட்சியமாக இருந்தாலும் நாம் அதற்காக தவறான செயல் முறையைப் பின்பற்றுவோரில் ஒருவராக இருக்க முடியாது.

சுதந்திர நாளின்போது இராஜாஜி அவர்கள் தமக்கேயுரிய நுண்மான் நுழைபுலத்துடன் கூறினர்கள்.

"நமது நாட்டின் அரசியல் அனுபவம்—இரும்பையும் உலோகங்களையும் உருக்கி வார்ப்படத்தில் வார்த்து தேய்மானத்திற்கு அஞ்சாத உருக்குசெய்வது போன்றதாகும்."

"இது சில நாடுகளில் உருவாகியுள்ள சைனு பீங்கான் போன்ற தல்ல. அந்த நாட்டினரின் ஜனநாயகமெல்லாம் பிளாஸ்டிக் செய்வதுபோல் எளிதில் செய்துவிடக் கூடியது. ஆனல் நமக்கு இங்கே ஈடுபாடு—உலோகங்களிடம்"

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல குறிக்கோள்; மதிக்கத்தக்கது. எனினும், அதற்காக மொழித்

## அடிப்படை பலவீனமாயிருந்தால் மகுடமும் இருளில் வீழும்

திடுங்கள் என நான் உங்களை அழைக்கிறேன். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ முடியாத மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும் சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம் ஆகிய வற்றேடு ஒட்டி வாழ முடியாத பல்வேறு கோணங்களில் அமைந்த கொடுமைகளுக்கெதிராகவும் போர்தொடுத்திடுமாறு உங்களை நான் அழைக்கிறேன்.

—நமது காலத்திலுள்ள விஞேதமான இன்ஞெரு உண்மை—நாம் இப்போது ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறேம் என்பது;

துறையிலோ — பொருளாதாரத் துறையிலோ அநீதியையும், ஆதிக்கத்தையும் சகித்துக் கொள்ள முடியுமா?

சகித்துக்கொள்ள முடியாது என்பதற்காகத்தான் இந்த (தமிழக) அரசாங்கமே ஏற்பட்டிருக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கக் கட்டாயப் படுத்துவதற்கு எதிரான மக்களின் வலிவுமிக்க உறுதிப்பாட்டையே இந்தத் தமிழக அரசு பிரதிபலிக்கிறது.

நாம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்று வேண்டுவதை சிலர் தவருகவும் திரித்தும் கூறுகிருர்கள்.

நிலைக்க முடியாத வாதங்களையும் விவாதத்திற்குரிய புள்ளி விவரங்களையும் காட்டி அவர்கள் வீராப்பு பேசியபடி பிரிவினைப் பூச்சாண்டியைக் கொண்டுவந்து மிரட்டல்கள்—ராணுவம் ஆகியவற்றின் மூலம் மக்களை மௌனமாக்க முயல்கின்றனர்.

பிரச்சினைகளை ஆதிபத்ய முறைகளில் எப்போதும் தீர்க்க முடியாது. குறிப்பாக இந்த மொழிப் பிரச்சினை நமது வாழ்க்கை வழியுடன் நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் நெருக்கமாக இணைந்துள்ளதாகும்.

தமிழக அரசாங்கம், தவறும் தடுமாற்றமும் இல்லாத சொற்கள் மூலம் விளக்கியுள்ளது.

தமிழும் ஆங்கிலமும் நமது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்.

தமிழ், இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்கவேண்டும்.

ஆங்கிலம் நமது நாட்டிற்கும் உலகின் பிற நாடுகளுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்த பணி புரியும் என்று இந்தி ஆதரவாளர்கள்கூட ஒப்புக் கொள்கிறார்கள்.

அதை அவர்கள் ஒப்புகொள்வார்களானால் இங்கு இணைப்பு ஏற்படுத்த இந்தி இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள்?

வெளிநாட்டினருடன் இணைப்புக்கொள்ள எந்த மொழி பணியாற்றுகிறதோ—அதே மொழி அதே இணைப்புப் பணியை இந்தியாவுக்குள்ளும் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறது.

இரு இணைப்பு மொழிகள் தேவை என்று கூறுவது பெரியபூனை செல்வதற்கு பெரிய வழி சுவரில் இருக்கும்போது பூனைக்குட்டி செல்ல இன்னொரு வழி செய்ய வேண்டும் என்பதற்கு ஒப்பானதாகும். பூனைக்கு என்ன வழியோ அதுவே பூனைக்குட்டிக்கும் வழியாகும்.

ஆங்கிலம் அன்னியநாட்டு மொழி என்று சிலர் வாதிடுகிறார்கள்.

உள்ளபடியே (இலக்கிய நோக்கில்) ஷெல்லி-பைரன்-கீட்ஸ் காலரிட்ஜ் எமர்சன்-பேகன்—ஆகியோர் நமக்கு அன்னியர்களா? திருவள்ளுவர் வெறும் தமிழர் மட்டுமா? அவர்கள் எல்லாம் உலகக்குடி மக்கள்—உலகப் பேராசிரியர்கள்.

அவர்களது எண்ணங்களை மிளிரச் செய்யும் மொழிகள் வேறு நாட்டிலிருந்து வருகிறது என்பதால் தள்ளிவிடக்கூடியவை அல்ல.

எனினும், தமிழ் மொழியை கல்லூரிப் பாட மொழியாக ஆக்கத் தேவையான கவனத்துடன் படிப்படியாக செய்யும் கொள்கையை ஏற்று செயல்படுத்துவதால், ஆங்கிலத்திற்கு தமிழைவிட உயர்ந்த இடம் தந்துவிடமாட்டோம்....

### சாதாரண மனிதனை உயர்த்தும் திருப்பணி

....சாதாரண மனிதனை—கீழ்த்தட்டு மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன் தான் இந்த நாட்டின் பிற நாடுகளின் முதுகெலும்பாய் இருப்பவன். அந்த மனிதனின் ஓவியத்தை உங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். 'அவன் நம்புதற்கு முடியாத நிலையில் வாழ்பவன். ஆனால் மனித குலத்தின் மூன்றில் இரண்டு பகுதியாய் இருப்பவன். குடிசையில் அவன் வாழ்கிறான். அவனால் எழுதவோ படிக்கவோ முடியாது. அவனது சக்தி நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் வேலை செய்கிறான். அவனும் அவனது குடும்பமும் வழக்கமாகப் பசியுடனிருக்கிறது. இளையவயதிலேயே அவன் இறந்து விடுகிறான். ஆனாலும், அவன் தனது குழந்தைகளைப் பற்றி நம்பிக்கை கொண்டிருக்கிறான். அவர்கள் வலிமையுடனும் உடல் உறுதியுடனும் இருக்கவிரும்புகிறான். அவன் எழுதப் படிக்கத் தெரிந்தவனாக இருக்க விரும்புகிறான். சமாதான உலகில் தனி மனித உரிமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். இத்தகையவன்தான் (கீழ்த்தட்டில்) உள்ள சாமான்ய மனிதன்.

இந்த மனிதன் தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து கொள்ளத் துவங்கிவிட்டான். அதன் விளைவாக கிளர்ச்சிகளும், மோதல்களும் ஏற்படுகின்றன.

உறுதி எடுத்துக்கொள்ளுங்கள்—நாம் பின் தங்கப்போவதில்லை. நமது சாமான்ய மனிதனை இடர்ப்பாடான நிலையில் விட்டுச் செல்லப் போவதில்லை.

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான், இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

அடிப்படை பலவீனமாயிருந்தால்—மகுடமும் இருளில் வீழும்.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை-குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை—தனது குழந்தைகள் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்.

**காலை முதல் மாலை வரை உழைத்து விட்டு, சோர்வுற்று இல்லம் திரும்பும் அவர்களுக்கு, இரவில் ஒரு தலையாயப் பணி காத்து நிற்கிறது. தங்களுடைய இளமை நாட்களில் கல்வி கற்காத அவர்கள், முதுமையில் பேரார்வம் காட்டி, அவ்வூர் மக்கள் அனைவரும் அறியாமையை அகற்றிக் கொண்டிருக்கின்றனர்.**

**இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள 'பிலூரா' என்ற கிராமத்தில் இந்த அரிய செயல் இன்றளவும் நடைபெற்று வருகிறது. இது மாஹிதி நதிக் கரையில் உள்ளது.**

ஏனைய கிராமங்களைப் போன்றே, இதுவும் ஒரு சிறிய கிராமம்தான் இங்கேயும் மண் சுவர்கள், மண் தரைகள் மண்சாலைகள் போன்ற அனைத்தும் உண்டு. ஆனால் மாலை நேரம் நெருங்க, நெருங்க ஒருவிந்தை உங்களுக்காகக் காத்திருக்கிறது. அப்போதைய நிலையில்தான், அது மற்ற கிராமங்களைவிட பெரிதும் மாறுப்பட்ட ஒரு கிராமமாக காட்சியளிக்கிறது. மின் விளக்குகள் ஆங்காங்கே ஒளி விடுகின்றன ; ''பெட்ரோமாக்ஸ்'' விளக்குகளும், மெல்லிய ஓசையுடன் ஒளியை உமிழ்கின்றன. பாய்களும், தட்டிகளும் ஆங்காங்கே தரையில் பரப்பப்படுகின்றன.

### தலையை ஆட்டிக் கொண்டே கற்கின்றனர்..

குழந்தைகளுக்கோ ஒரே வியப்பு ! தங்களுடைய பெற்றோர்கள் பாய்களிலும், தட்டிகளிலும் அமர்ந்துக் கொண்டு, ஒவ்வொரு எழுத்தையும் உரக்கச் சொல்லி, தலைகளை ஆட்டிக் கொண்டு கற்பலகையில் எழுதுவது அவர்களை அப்படியே உற்சாகத்தில் திளைக்க வைக்கிறது.

முதியோர் கல்வி செயல்படும் 45 கிராமங்களில் " பிலூர் " கிராமமும் ஒன்று. அறியாமையை அறவே அகற்ற வேண்டுமென்று பிலூர் கிராமம் பெரிதும் முயன்று வருகிறது.

கணக்கெடுத்துப் பார்த்தால், ஊரிலுள்ள 1,200 முதியோர்களில் 515 பேர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றவர்களாயிருந்தனர். அதில் 129 பேர்கள் பெண்கள். எஞ்சிய முதியோர்களுக்கு எழுத்தறிவிக்கும் பணியை "நவயுகச் சங்கம்" ஏற்றுக் கொண்டுள்ளது. அண்டைக் கிராமங்களிலுள்ள 60 ஆசிரியர்கள் இச்சங்கத்துடன் ஒத்துழைக்க முன் வந்துள்ளனர்.

### இரண்டாண்டுகளில் அறியாமை அகலும்..

ஆண்களைவிட பெண்கள் தான் கல்வி கற்க பேரார்வம் காட்டுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. "பிலூரா எழுத்தறிவு பெற வேண்டும்" என்ற ஓர் இயக்கம் முதன் முறையாக துவக்கப்பட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் பிலூராவில் எழுத்தறிவில்லாதவரே இருத்தலாகாது என்பதே இந்த இயக்கத்தின் முக்கிய கருத்து. திரு ஜகன்நாத் என்பவர் இப்பணியில் முதன்மையாக நிற்பவர்.

பிலூராவின் ஒவ்வொரு தெருக்களிலும் இந்த எண்ணம் செயல்படுவதை காண முடிகிறது. இரவில் முதியோர் கல்வி வகுப்பு நடைபெறுகிறது. பகலில் "பிலூரா எழுத்தறிவு பெற்றுவிடும்", "பள்ளிக்குச் செல்லுங்கள்" என்ற சொற்கள் ஆங்காங்கே சுவர்களில் எழுதப் பெற்றுவிடும்.

பிலூரா அமைந்துள்ள மாவட்டமான 'துன்கார்பூர்', பஞ்சத்தால் அவதியுறும் ஒரு மாவட்டமாகும். சிரமைப்பு வேலைகளைக் கவனிக்க மக்கள் காலையிலேயே இல்லத்தை விட்டு புறப்பட்டுவிடுவர். மாலையில் சோர்வுற்று திரும்புவர். ஆனால் "அறிவுத்தாகம்" அவர்களைச் சரியாக 8 மணிக்கு பாய்களிலும், தட்டிகளிலும் அமரச் செய்து விடுகிறது. ஒவ்வொரு எழுத்தையும் அச்சில் பார்க்கும்போது அவர்கள் கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றன.

பிலூராவில் 125 பெண்கள் முன்பே எழுத்தறிவு பெற்றவர்கள். ஏனைய பெண்களுக்கு எழுத்தறிவிக்கும் பணி இவர்களிடம் தரப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் மாணவர்களும் இதற்கு முழுமையாக ஆதரவு அளிக்கின்றனர். ஏழாவது, பத்தாவது வகுப்பு மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பிலூரா ஒரு சாதாரண கிராமம் தான் ; ஆனால் செயலில் மற்ற கிராமங்களும் பின்பற்றவேண்டிய ஒரு கிராமம்.



**உள்ளாட்சித் துறை அமைச்சரின் உரை :** [10-ம் பக்கத் தொடர்ச்சி]

தத்தைத் தரக்கூடிய அனுபவபூர்வமான ஒன்றாகும். நகராட்சிகளின் வருமானங்களில் உயர்வு ஏற்பட்டிருப்பதைப் பற்றி யாரும் மறுப்பதற்கில்லை. காலங்காலமாக போடப் பட்டு வரும் வீட்டு வரி, தொழில் வரி, கால் நடை வரி, வாகன வரி, போன்ற வரிகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் பல மடங்கு உயர்ந் துள்ளன என்பது உண்மை. தமிழகத்தில், பொழுது போக்கு வரியும், நகராட்சியின் உசிதப்படி அதன் மீது விதிக்கப்படுகின்ற உபரிவரியும் கணிசமான வருவாயைத் தரக் கூடிய புதியதொரு நிதி ஆதாரமாகும். ஆனால், வரிகள் மூலம் கிடைக்கும் இவ்வருமான மானது, சமுதாயத்தின் தேவைகள் வளர்ந் ஒரு கொள்கையை கடைப்பிடிக்க முடியாத நிலையில், மாநில அரசின் நிதி நிலைமை அமைந் துள்ளது. குடிதண்ணீர், வடிகால் வசதி, மற்றும் சில சிறிய வேலைகளுக்கு மட்டும்தான் மானியங்களும் கடன்களும் அளிக்க முடியு மென்று அரசு வரையறுத்துள்ளது. நீண்ட நெடுங்காலமாக, நிதி வசதி இல்லாமல் பற்றாக் குறையிலேயே அமிழ்ந்து கிடக்கும் நகராட்சி மன்றங்களுக்குத்தான் இவை அளிக்கப்படு கின்றன. இந்தக் கடன்களை 25 முதல் 40 ஆண்டுகளுக்குள் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும். இதற்கு 6 சதவிகித வட்டி செலுத்த வேண்டும். அப்படித் திருப்பிக் கொடுக்கின்ற தொகை, வருடாந்திர தவணை

## வருவாயைப் பெருக்க ஆக்கரீதியான கருத்துக்கள்

திருக்கின்ற அளவுக்கு வளரவில்லை என்றே குறிப்பிட வேண்டும். நகராட்சி நிர்வாகம் சமாளிக்க வேண்டிய மிகப் பெரிய பிரச்சினை என்னவென்றால், மேலும் அதிகமாக நிதிகளை அவை திரட்ட வேண்டியுள்ளதேயாகும். நகராட்சிகள், கடன் பத்திரங்கள், 'டிபன் சர்கள்' வெளியிட்டு நிதி திரட்டலாமே என்று சொல்லலாம். ஆனால், மூலதனம் முடக்கமாக உள்ள இன்றைய நிதி நிலையில், அப்படிப்பட்ட ஒரு செயலை உறுதியான வருவாய் கிடைக்கக் கூடிய வழி என்று கொள்ள முடியாது. வரி விதிப்பதைப் பொறுத்தவரை, நாம் உச்ச வரம்பினை அடைந்துவிட்டோம் என்ற கருத் தினை பலர் கொண்டுள்ளனர். கூடுதலாக வரி விதிப்பது மிகவும் கடினமான ஒன்று. விதிக் கின்ற வரிகளை வசூல் செய்வது அவ்வளவு சுலப மாக முடியக்கூடியதல்ல என்பது மட்டு மல்லாமல், வரி போடுதலின் மூலம் மக்க ளிடையே செல்வாக்கினையும் வரி போடு பவர்கள் இழக்க நேரிடுகிறது. ஆக, உடனடி யாக வருவாயைப் பெருக்கித்தரக்கூடிய வழி வகை ஒன்றும் இல்லாத ஒரு நிலையே, நம்முன் உள்ளது. நகராட்சிகளின் வருவாயைப் பெருக்குகின்ற முறையில் ஆக்கபூர்வமான களுடன் சமன்படுத்தப்படுகிறது. கடந்த 13 ஆண்டுகளில் நாம் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 9,10,85,100-க்கு மேல் அளித்துள்ளோம். *தற்சமயம் 61 நகராட்சிகளில் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆனால் பல நகராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது போதிய அளவுக்கு இல்லை என்பதை நான் உணருகிறேன். கடந்த சில ஆண்டுகளாக குடிநீர் வழங்குவதற்காகும் செலவும் மிகவும் அதிகமாகப் பெருகியுள்ளது. குடிநீர் வழங்குவதற்குத்தான் முதலிடம் அளிக் கப்படவேண்டும். கடந்த நான்கைந்து ஆண்டு களாக குடிநீர் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ஆண்டுதோறும் படிப்படியாக மத்திய அரசின் பொது சுகாதாரத்துறை குறைத்துக்கொண்டே வருகிறது. இக் கருத் தரங்கின் விளைவாக, என்னுடைய மாநிலத் திற்கு மட்டுமல்லாமல், மற்ற எல்லா மாநிலங் களுக்குமே, மத்திய அரசின் பொது சுகாதாரத் துறை தனது நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்து கின்ற நிலை ஏற்படுமேயானால், நாட்டிலுள்ள எல்லா நகராட்சி மன்றங்களுமே மத்திய அரசுக்கு நன்றி செலுத்தும் என்பதில் ஐயமில்லை. தமிழகத்திலுள்ள 84 நகராட்சி

## பிரச்னைகளுக்கு தீர்வு காண்கின்ற நம்பிக்கையும் உறுதியும் ஏற்படவேண்டும்

கருத்துக்களையும் வழிவகைகளையும் இக் கருத் தரங்கு அளிக்குமேயானால், நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

### குடிநீர் வழங்குதலுக்கு முதலிடம்

இப்படிப்பட்ட நிலையில், நகராட்சி மன் றங்கள், தங்களுடைய பல்வேறு வேலைத் திட் டங்களை நிறைவேற்ற, மேலும் நிதி கேட்டும், மானியங்கள் கோரியும், மாநில அரசினை அணுகு வார்களேயானால், நாம் அவர்களைக் குறை சொல்வதற்கில்லை. சமுதாயத்துக்கு நகராட்சி மன்றங்கள் செய்கின்ற பணிகளின் முக்கியத் துவம் பற்றியும், அதனால் விளையும் பயன்கள் பற்றியும் நமக்கு எள்ளளவும் ஐயப்பாடு கிடை யாது. ஆனால், இப்படிப்பட்ட மானியங்களும் கடன்களும் அளிப்பதில் மிகவும் தாராளமான மன்றங்கள், 4 நகரியங்கள் ஆகியவற்றிற்கு குடிநீர் வழங்குதல், வடிகால் வசதிபற்றிய மூலதன வேலைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை ஒராண்டுக்கு ரூ. 90 லட்சம். இது மிக மிகக் குறைவான தொகையாகும்.

ஊழியரின் ஒரு பகுதியினருக்கு விலைவாசி உயர்வுப்படி அளிக்கும்போது, மற்ற பிரிவினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அந்தச் சலுகையானது மறுக்கப்படக்கூடாது என்ற கொள்கையை, இந்த மாநிலத்தில் நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். அதையொட்டி நகராட்சிகளில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த மூன்று

* விவரம் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட விலைவாசி உயர்வுப் படியை அனுபவித்து வருகின்றனர். இருந்தாலும் அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் குறைவாக இருப்பதனுல், விலைவாசி உயர்வுப்படி உயர்வினுல் கிடைக்கின்ற பயனும், அதையொட்டி, குறைவாகவே உள்ளது. இந்த விஷயத்தில் இதை எப்படிப் போக்கலாம் என்பது பற்றியோ வேறு யோசனைகளைச் சொல்லவோ நான் தயக்கப்படுகிறேன். அதிகப்படியான ஊதியம் வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்புகின்ற நகராட்சியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, அரசின் அனுதாபமும் அக்கறையும் என்றும் உண்டு. ஆனுல் அதை நாம் செயல்படுத்தத் தடையாக உள்ளது, தற்போதுள்ள நிதி நிலைமை ஒன்றுதான்.

நகராட்சி நிர்வாகத்துடன் நான் தொடர்பு கொள்ளத் தொடங்கிய கடந்த ஓராண்டில், பல நகராட்சிகளின் வேலை முறைகளைக் கண்டறிகின்ற வாய்ப்பு எனக்குக்கிடைத்துள்ளது. நாளங்காடிகள், பேருந்து நிலையங்கள், லாரி நிற்குமிடங்கள், கடைகள் போன்ற ஆதாயம் தரக்கூடிய முயற்சிகளில், பல நகராட்சி மன்றங்கள் ஆர்வம் காட்டுகின்றன. கடலூரில் இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு நான் வியப்படைந்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளில், ஐநூறு கடைகளுக்கு மேல், கடலூர் நகராட்சி மன்றத் தலைவர், கட்ட ஏற்பாடு செய்து, மாதம் 30 ரூபாய் என்ற குறைந்த அளவில் அவைகளை வாடகைக்கு விடவும் செய்துள்ளார். இதனுல் நகராட்சிக்கு உறுதியான, நிலையான வருவாய் கிடைக்க ஏதுவாகிறது. அத்துடன் மக்களுக்கும் இதனுல் பயன்கிடைக்கிறது. அதிகப்படியான கடைகள் தோன்றுவதினுல், கடைக்காரர்களிடையே ஒரு பலமான போட்டி ஏற்படுகிறது. அதன் விளைவாக பொருள்களை வாங்குபவர்களுக்குப் பயன் விளைகிறது. வியாபாரிகளிடம் விட்டுவிட்டிருந்தால், இவ்வளவு அதிகமாகக் கடைகளை ஆரம்பிக்க அவர்கள் முன்வந்திருக்கமாட்டார்கள். ஒரு சில கடைகளை மட்டும் கட்டி, அவைகளை அதிக வாடகை விகிதத்தில் ஏலம் விடுவதைவிட, கடலூர் நகராட்சி மன்றத்தலைவரின் செயல், நகராட்சி மன்றத்துக்கு மட்டுமல்லாமல், பொது மக்களுக்கும் அதிக பயன் விளைவிப்பதாக அமைந்துள்ளது. இந்தச் செயல்பற்றி மற்ற நகராட்சி மன்றத்தலைவர்களும் சிந்திக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பயன் தரத்தக்க தொழில் முயற்சிகள் ..

பேருந்துகளையும், திரைப் படக்கொட்டகைகளையும் நடத்துவதற்கு, சில நகராட்சி மன்றங்கள் அனுமதி கோருகின்றன. நகராட்சி மன்றங்கள் இப்படிப்பட்டவைகளைச் செய்ய வேண்டுமென்ருல், அதற்கு முன்னுல் நகராட்சி மன்றங்களின் சட்டமானது திருத்தப்பட வேண்டும். அப்படி திருத்தங்கள் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொள்வதற்கு முன்னுல், இந்த கோரிக்கைகளில் உள்ள பலா பலன்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நகராட்சிகளுக்கு வியாபார ரீதியில் நடைபெறக்கூடிய வேலை முறைகளை ஒப்படைப்பது பற்றி, நாம் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். வருங்காலத்தில் நகராட்சிகளுக்கு நல்ல பயன் அளிக்கக்கூடிய வேலைத் திட்டங்களை அவை ஏற்று நடத்துவதற்கான வழிவகைகள் தென்படுவதை நான் காண்கிறேன்.

நகராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் ஒன்ருன கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த மாநிலத்தில் பெரியதொரு முன்னேற்றத்தை நாம் அடைந்துவிட்டோம் என்று சொல்வதற்கில்லை. மூன்று அல்லது நான்கு நகராட்சி மன்றங்களும், 4 நகரியங்களும் சேர்ந்து மொத்தத்தில் 800 தொடக்கப் பள்ளிகளையும் 75 உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே நடத்தி வருகின்றன. தொடக்கப்பள்ளி ஒன்றுக்கு ஆகும் பராமரிப்புச் செலவு சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ. 15 ஆயிரம் ஆகிறது. உயர்நிலைப் பள்ளிக்கு ஓர் ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் ஆகிறது. நகராட்சி எல்லைக்குள் அரசினருடைய பள்ளிகள், தனியார் நடத்தும் பள்ளிகளே மிக அதிகமான அளவில் உள்ளன. உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்காகும் செலவு அதிகமாகிக்கொண்டே வருகிறது. உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று, பெருவாரியான நகராட்சி மன்றங்களிலிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கைகளை, அரசு ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்து வருகிறது.

சாலை வசதியைப் பொறுத்தவரை, தமிழகத்தில் எல்லா நகராட்சி மன்றங்களும் சேர்ந்து 4,200 கிலோ மீட்டர் நீளமுள்ள பாதைகளைப் பராமரித்து வருகின்றன. ஒரு கிலோ மீட்டருக்கு ஆகும் பராமரிப்புச் செலவு, கிட்டத்தட்ட ரூ. 2,000 ஆகும். இங்குமங்குமாய்ப்

[34-ம் பக்கம் பார்க்க]

குடிநீர், வடிகால் திட்டங்களுக்காக, நகராட்சி மன்றங்களுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் விவரம்.

| ஆண்டு. | | | தொகை ரூபாய். |
|---|---|---|---|
| 1954–55 | .. | .. | 5,68 500 |
| 1955–56 | .. | .. | 33,90,000 |
| 1956-57 | .. | .. | 6[illegible],17,000 |
| 1957–58 | .. | | 55,89 300 |
| 1958–59 | .. | .. | 73,58,000 |
| 1959–60 | | .. | 92,52,000 |
| 1960–61 | .. | .. | 51,50,100 |
| 1961–62 | .. | .. | 65,95,600 |
| 1962–63 | .. | .. | 74,70,700 |
| 1963–64 | .. | .. | 62,18 300 |
| 1964–65 | .. | .. | 92,40,700 |
| 1965–66 | .. | .. | 93,58,200 |
| 1966–67 | .. | .. | 1,39,76,700 |
| | மொத்தம் .. | | 9,10,85,100 |

# பிற மாநிலங்களில்..

## விடா முயற்சிக்கு ஒரு சான்று

## காளிராம் ஒரு தொழிலாளியானர்

கிராமங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு உழைப்புணர்வையும், தொழிலறிவையும் புகட்டி, அவர்களிடம் மறைந்து கிடக்கும் திறமையை வெளிக் கொணர்ந்து, உற்பத்தியைப் பெருக்குவதே, கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய குறிக்கோள். நவீன கருவிகளைக் கையாண்டு பொருள்களை பெருமளவில் உற்பத்தி செய்ய அவர்களுக்கு போதிய பயிற்சியளிக்கப்படுகிறது. ஆனால் பயிற்சிக்குப் பின், அத் தொழிலாளர்களுக்கு மூலப் பொருள்கள், இயந்திரங்கள், சிறிது மூலதனம் தேவைப்படுகின்றன. பயிற்சிக்குப் பின் இவற்றிற்கும் ஆவன செய்யப்பட்டால், தொழிலாளர்கள் சொந்தமாகவே தொழிற்கூடங்களை அமைக்க இயலும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு காளிராம்.

காளிராம் மிகவும் ஏழை. அவருக்கு நிலம் கிடையாது. பிறருடைய வயல்களில் வேலை செய்து நாட்களை கடத்திவந்தார். அருகிலிருந்த அரசினர் துவக்கப் பள்ளியில் படித்து, பின்பு ஜனதா உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பள்ளி இறுதி வகுப்பு தேர்வின் பொழுது, உடல்நிலை குன்றியதன் விளைவாக, பள்ளிக்குச் செல்லவில்லை. பள்ளிச் செலவில் பாதியை தந்தை தருவார். காலையிலும், மாலையிலும் உழைத்து சம்பாதித்து, மறு பாதிச் செலவை அவரே சமாளித்துக் கொண்டார்.

### நண்பர்கள் உற்சாகமிழக்கச் செய்தனர்

ஆங்காங்கே கூலி வேலைகள் செய்து நாளொன்றிற்கு 75 பைசா அல்லது ஒரு ரூபாய்தான் அவரால் சம்பாதிக்க முடிந்தது. இதனால் அவருக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டதுடன், ஏதாவது ஒரு தொழிலைப் பயின்று முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆவல் மிகுதியாயிற்று. வேலைத் தேடித்தரும் நிறுவனத்தில் தம் பெயரைப் பதிவு செய்து கொண்ட போதிலும், அங்கிருந்து அவருக்கு எந்தவித தகவலுமில்லை.

முயற்சியை தளரவிடாது, நில அளவை வேலை, ஆசிரியர் வேலை, குழாய்க் கிணறு அமைப்பு வேலை ஆகியவற்றிற்கு விண்ணப்பங்கள் செய்தார். ஆயினும் தோல்வியையே அவர் தழுவினர். அன்றொரு நாள் பத்திரிகையில் ஒரு விளம்பரத்தைக் கண்டார் காளிராம். சஹ்ரான்பூர் மாவட்டத்தில், நகால் என்னுமிடத்திலுள்ள பயிற்சி-உற்பத்தி நிலையத்தில் சேருவதற்கு விண்ணப்பங்கள் கோரி ஒரு விளம்பரம் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அது அவரை மிகவும் கவர்ந்தது. ஊரிலுள்ள பெரியோர்களை கலந்தாலோசித்தார். எல்லோரும் அவரை உற்சாகமிழக்கவே செய்தனர். ஆயினும் காளிராம் மனத்தளர்வுறாமல், நிலையத்திற்கே நேராக புறப்பட்டுவிட்டார்.

### நிலையத்தில் சேர மறுப்பு

பயிற்சி நிலைய முதல்வரை காளிராம் கண்டு தன் நிலையை விளக்கினர். காளிராம் ஒரு பரம்பரை தொழிலாளியல்லவென்றும், தொழிலைப் பற்றி ஏற்கனவே அவருக்கு எந்த அறிவும் இல்லை என்று கூறி அவரை பயிற்சி நிலையத்தில் சேர்த்துக்

கொள்ள மறுத்துவிட்டனர். ஆனால் காளிராம் பல முறை நிலைய முதல்வரைக் கண்டு தன் நிலையையும், ஆர்வத்தையும் வெளிக்காட்டவே, இறுதியில் வெற்றி அவர் பக்கம் தான். மாதம் ஒன்றுக்கு ரூ. 25 உபகாரச் சம்பளத்துடன் அவர் நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மேஜைகள், நாற்காலிகள், அலமாரிகள், கதவுகள், ஜன்னல்கள் போன்ற எல்லா பொருள்களையும் செய்ய நன்கு கற்றுக் கொண்டார். சொந்தத்தில் ஒரு தொழிற் பட்டறை அமைக்க என்னென்ன கற்றுக் கொள்ள வேண்டுமோ அவ்வளவையும் திறம்பட கற்றுணர்ந்தார். பயிற்சி 1956-ம் ஆண்டில் முடிவுற்றது. ஆனால் சொந்தத்தில் தொழிலை ஆரம்பிக்கவேண்டும் என்ற காளிராமின் எண்ணம் இதுகாறும் ஈடேற வழியில்லை. அதற்கு மூலதனமோ, மூலப் பொருள்களோ அவரிடம் இல்லை.

### நாள் கூலியில் வெறுப்பு

எனவே, வேதராஜ் என்ற ஒரு தச்சரிடம் நாள் கூலிக்கு அமர்ந்து ரூ. 1·25 பெற்றுவந்தார். ஓராண்டுகளாக இதே ஊதியம் பெற்ற காளிராமுக்கு அதில் வெறுப்பேற்படவே, மரச்சாமான்கள் தயாரிக்கும் ஒரு கம்பெனியில் சேர்ந்தார். அவர்களும் நாளொன்றுக்கு ரூ. 1·50 தான் அளித்தனர். இந்த நிலையினும் அவரால் தனியே தொழில் செய்ய முடியவில்லை.

இச்சமயத்தில் கருமார் வேலைக்கு ஆள் தேவையென பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியாயிற்று. அதற்கு காளிராம் விண்ணப்பம் செய்யவே, அவருக்கு டில்லியிலுள்ள ராணுவ தொழிற் பட்டறையில் ஒரு வேலை கிடைத்தது. அவருக்குக் கிடைத்த மாத ஊதியமான ரூ. 133-ல் ரூ. 50 செலவானது போக, எஞ்சியதை சேமித்து வைத்தார். தனியே தொழிலைத் துவக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் எப்போதும் சுடர் விட்டுக் கொண்டேயிருந்தது. ஆனால் சீக்கிரத்திலேயே உடல் நலம் குன்றிவிட்டதால், வேலையை விட்டு விட்டு, சொந்த ஊருக்கே திரும்பி விட்டார்.

### எண்ணங்கள் ஈடேற துவங்கின

பிறகு, பயிற்சி பெற்ற நிலையத்திற்கே மீண்டும் சென்று, அங்குள்ள ஆசிரியர்களிடம் யோசனைகள் கேட்டார். மீண்டும் கருமார்த் தொழில் பயிற்சிக்காக அவர் நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அவருக்கு ரூ. 25 உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்ததும், கருவிகள் வாங்கி, தொழிலைத் துவங்குவதற்காக காளிராமுக்கு ரூ. 300 மானியம் அளிக்கப்பட்டது. காளிராமுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. இருப்பினும் இந்த மூலதனம் அவருக்கு போதவில்லை. எனவே சிறு தொழில்களுக்கு பொருளுதவி செய்யும் திரு. திருவேதி என்பவரை நேரில் கண்டார். காளிராம் விண்ணப்பம் செய்தால், ரூ. 1,000 கடன் தருவதாக அவர் கூறினார். ஆனால் எவ்வளவோ முயன்றும் பணம் சீக்கிரம் கிடைத்தபாடில்லை. ஓராண்டுகால விடா முயற்சிக்குப் பின், கமிஷனரின் நிதியிலிருந்து அவருக்கு ரூ. 400 கடன் தரப்பட்டது.

### மூலப்பொருள் வாங்க மூலதனம் இல்லை

இந்த தொகைகூட போதாதெனினும், மனந்தளராமல் தொழிற் பட்டறைக்குரிய கருவிகள் சிலவற்றை வாங்கினார். கருவிகள் வாங்குவதிலேயே எல்லா பணமும் செலவழிந்து விடவே, மூலப் பொருள்கள் வாங்க மூலதனம் இல்லை. என்ன செய்வார்? அவருடைய ஊருக்கு அருகிலுள்ள ரயில் நிலையத்திற்கு சமீபமாக மரங்களடர்ந்த ஒரு பகுதி இருந்தது. அந்த பகுதிக்குரிய அதிகாரிகளை சந்தித்து அதை ரூ. 750-க்கு குத்தகை எடுத்துக் கொண்டார். ஏழு கூலியாட்களை சேர்த்துக்கொண்டு மரங்களை வெட்டித் தள்ளினார்.

இறுதியில் காளிராம் ஒரு தொழிலாளியாகிவிட்டார். உள்ளூர் வெளியூர் தேவைகளை நன்கறிந்திருந்த காளிராம், கதவுகள், அலமாரிகள், அலுவலக மரச் சாமான்கள், நாற்காலிகள், மேஜைகள், கட்டில்கள் போன்றவற்றைச் செய்து குவித்தார். அவர் தயாரித்த பொருள்களின் தரம் மிக உயர்வாக இருந்ததால், அவை சீக்கிரமே நல்ல விலையில் விற்றன. தொழில் வளரத் துவங்கிவிட்டது. ரூ. 2·50 நாள் ஊதியத்தில், மூன்று தச்சர்களை தன்னுடன் சேர்த்துக் கொண்டார். குறைந்தது நாளொன்றுக்கு ரூ. 8 முதல் ரூ. 10 வரை சம்பாதிக்கலானார். கடன்களை திரும்ப செலுத்த ஆரம்பித்தார்.

### உழைப்பின் சின்னம் காளிராம்

தொழிலில் காளிராமுக்கு எவ்வித இன்னலும் ஏற்படவில்லை. தன்னுடைய பட்டறையை பதிவு செய்துக் கொண்டார். சுருங்கக் கூறின் ஒரு சாதாரண கூலியாளாக இருந்த காளிராம், சிறு தொழிலதிபதியாக மாறிவிட்டார் எனலாம். சமூகம் அவரை கௌரவித்தது. அவர் கூறும் யோசனைகளுக்கு கருத்துக்களுக்கு ஊரார் செவி மடுத்தனர். நாணயம், நேர்மை, இடைவிடா உழைப்பு ஆகியவற்றின் சின்னமாக காளிராம் திகழ்ந்தார்.

இதிலிருந்து ஓர் உண்மை நமக்குத் தெளிவாகிறது. "பயிற்சி பெற்றும் பொருள் வசதியில்லையெனில், பயிற்சியால் பயனில்லை. பொருளிலிருந்தும் தகுந்த பயிற்சியில்லையெனில், பொருளால் பயனில்லை".

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 13, 14, 15, 16, 17, 29, 32, 33.
Articles reproduced from 'Panchayati Raj' on pages : 13 to 17 and 29, 32 and 33.

ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணி : [12-ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த மூன்று மாதச் சாதனைகள் அமைந்துள்ளன என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

**சிரணிப்படையின் சீரிய பணி**

சீரணியின் முதற்பணியாக செப்டம்பர் திங்கள் 3-ம் நாள் சென்னை நகரில் சீரணிப்படையினர் தெருக் கூட்டும் பணியைத் துவக்கினர். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆகியோரும் தெருக்கூட்டும் பணியில் ஈடுபட்டு தொண்டர்களை உற்சாகப்படுத்தினர். 1936-ம் ஆண்டில் வார்தாவில் தெருக்களைச் சுத்தம் செய்யும் வேலையில் அண்ணல் காந்தி வடிகள் ஈடுபட்டு துப்புரவு இயக்கத்திற்கு அடிகோலினர். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி அன்று சீரணியினர் தெருக்களில் துப்புரவு வேலைகளில் ஈடுபட்டதைக் கண்ட பொது மக்களும், பத்திரிகையாளர்களும் சீரணி நோக்கத்தைப் பாராட்டினர்.

அடுத்த பணியாக, ஊரூரில் சீரணியினர் உழைப்புச் செல்வத்தை நல்கி, பத்தே நாளில் பள்ளிக்கூடம் ஒன்றை உருவாக்கி முடித்து செப்டம்பர் 15-ந் தேதியன்று அண்ணாவின் பிறந்த நாளில் அவருக்கு அன்புப் பரிசாக அளித்தனர். சர்வோதயத் தலைவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் பள்ளிக் கட்டிடத்தைப் பார்வையிட்டு "காந்தியார் இன்று இருந்திருந்தால், சீரணியின் செயலைக்கண்டு போற்றிப் புகழ்ந்திருப்பார்" என்று பாராட்டுரை கூறி தொண்டர்களைப் போற்றினர்.

மூன்றாவது பணியாக சென்னை வியாசர்பாடி கல்யாணபுரத்தில் ஏழு பர்லாங்கு நீளமுள்ள கால்வாய் ஒன்றை வெட்டும் வேலையை அக்டோபர் 5-ம் நாள் அண்ணா துவக்கி வைத்தார். மழைகாலத்தில் தேங்கும் தண்ணீரை வெளியேற்றுவதற்கான இக்கால்வாயை சீரணித் தொண்டர்கள் இரவு பகலாக உழைத்து 24 நாட்களில் வெட்டி முடித்துள்ளனர்.

நான்காவது பணியாக, அக்டோபர் 22-ம் நாள் மேற்கு மாம்பலத்தில் சாலை அமைப்பு வேலைகளில் சீரணியினர் ஈடுபட்டனர். அதைத் தொடங்கி வைத்த அண்ணா அவர்கள் "இந்தச் சீரணி பற்றி முன்பு இருந்துவந்த அரசியல் சந்தேகம் இப்போது பெரும் அளவுக்கு நீங்கிவிட்டது" என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

திருச்சி மாவட்டத்தில் செப்டம்பர் திங்கள் 18-ம் நாள் சீரணியை அண்ணா துவக்கி வைத்தார். புதுக்கோட்டை பகுதியில் உள்ள குடிமியான் மலையில் மாபெரும் விவசாயப் பண்ணை உருவாகி வருகிறது. அங்கு, நிலந்திருத்தி, நீர்வளம் கண்டு, விளைச்சலைப் பெருக்கும் திருப்பணியில் நூற்றுக்கணக்கான சீரணியினரும் ஈடுபடுவது சீரணி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சீரணிக் கதிர்கள் இதுவரை சென்னையிலும், திருச்சியிலும் மட்டுமல்லாமல், செங்கற்பட்டு, வடார்க்காடு தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களிலும் தொண்டு எனும் ஒளியைப் பரவச் செய்துள்ளன. பிற மாவட்டங்களிலும் சீரணி தொடங்குவதற்கான ஆக்கவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றைய தினம் நாட்டிற்காக ஏதாவது செய்திட வேண்டும் என்ற துடிப்போடு, தமக்குள்ள ஆற்றலை ஆக்கப்பணிகளில் ஈடுபடுத்தி, சீரணி ஒளியை எங்கும் பரப்பிட ஆயிரமாயிரம் இளைஞர்கள் முன் வந்திருக்கிறார்கள். அண்ணா கண்ட சீரணி அனைவருடைய இதயங்களையும் வென்ற நிலையில் வெற்றிநடை போடுகிறது.

"இப்படை தோற்கின் பின் எப்படை வெல்லும்".

---

உள்ளாட்சித் துறை அமைச்சரின் உரை : [31-ம் பக்கத் தொடர்ச்சி]

போடப்படுகின்ற புதிய பாதைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்துறையிலும் பராமரிப்புக்காக ஆகும் செலவு படிப்படியாக அதிகமாகிக்கொண்டே வருகிறது.

**அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்**

ஆகவே, நகராட்சி மன்றங்களின் நிர்வாகம் இக்கட்டான ஒரு நிலையினை அடைந்துள்ளது என்பதனை, நான் இக் கருத்தரங்கில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். நகராட்சிகளின் நிதி ஆதாரங்கள் மிகவும் குறைவாக உள்ளன. இப்படிப்பட்ட நிலையில் உள்ள நகராட்சிகள், தங்களுடைய பணிகளையும், பொறுப்புக்களையும் நல்ல முறையில் நிறைவேற்றுவதென்பது, இயலாத ஒன்றாகும். பொதுமக்கள் தங்களுடைய பொறுப்புக்களைத் தக்க முறையில் அறிந்துள்ளார்கள். தங்களுடைய தேவைகளைப் பற்றியும் அவர்கள் நாள்தோறும் வலியுறுத்திக்கொண்டே வருகிறார்கள். நம் முன்னால் உள்ள இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது, எப்படி மேன்மேலும் இத்துறையிலே முன்னேற்றம் காணமுடியும் என்பது பற்றியெல்லாம், இத்துறையிலே ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்ற நகராட்சி மன்ற நிர்வாகிகள் அனைவரும், ஒருசேர அமர்ந்து, பரிசிலனை செய்யவேண்டிய ஒரு கட்டத்தை நாம் நெருங்கியுள்ளோம். அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடித்து, பொதுமக்களுக்கு மேலும் தரமான வசதிகளை அளிக்க நாம் தவறுவோமேயானால், நாம் இருந்து செயல் படுவதின் பயன்தான் என்ன என்ற வினு கட்டாயம் எழும்.

இந்த அடிப்படையிலேதான், இக் கருத்தரங்கிலே விவாதிக்கப்படுகின்ற கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பற்றி, நாம் மிகவும் ஆவலுடன் ஆழ்ந்து கவனிக்கவேண்டியுள்ளது. நம்மை எதிர்நோக்கியுள்ள மாபெரும் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்ற நம்பிக்கையும் உறுதியும் நமக்கு ஏற்படவேண்டும். நல்ல தரமான நகராட்சி நிர்வாகம் நாட்டில் நடைபெறுவதற்கான வழிமுறைகளை நாம் வகுத்துத் தருகின்ற ஒரு நிலையில், இக்கருத்தரங்கிற்குப் பிறகு, நாம் நிச்சயமாக இருப்போம் என்பதிலே, எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## ஈரோடு நகராட்சியில் நிறைவுபெற்றிருக்கும் திட்டங்கள்

ஈரோடு நகராட்சியில் குடிநீர் விநியோகத் திட்டம். 1919-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதனை அபிவிருத்தி செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தின் நான்காவது கட்டத்தை 6.73 லட்சம் ரூபாய் செலவில் செய்து முடிக்க 1959-ஆம் ஆண்டு அரசாங்கம் அங்கீகரித்தது. நான்காவது கட்டத்தின் கடைசி அம்சமாக விளங்கும் நிலமட்ட நீர்த்தேக்கம் பொது நலத் துறையினரால் கட்டப்பட்டு 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கம் 2½ லட்சம் காலன் நீர் கொள் அளவு கொண்டது. ஏற்கனவே பயன் படுத்தப்பட்டு வரும் நீர்த்தேக்கம் 1¼ லட்சம் காலன் நீர் கொள் அளவு கொண்டது. இவ்விரு நீர்த்தேக்கங்களும் நகரின் அழகிய பாகமாக விளங்கும் சிதம்பரனார் பூங்காவில் அமையப்பெற்றுள்ளன. புதியதாக கட்டப்பட்ட நீர்த் தேக்கம் தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட இருக்கிறது.

ஈரோடு நகராட்சி இரு உயர் நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இவ்விரு உயர் நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆண்டுதோறும் அரசாங்க பள்ளி இறுதித் தேர்வில் நல்ல சதவீதத்துடன் தேர்வு பெற்று வருகிறார்கள். இவ்விரு பள்ளிகளில் ஒன்று வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்குறையை போக்குவதற்காக நகராட்சி 7 ஏக்கர் 5002 சதுர அடி நிலத்தை விலைக்கு வாங்கி ரூபாய் 4,78,700 மதிப்பீட்டில் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டியுள்ளது.

ஈரோடு நகராட்சியில பணியாற்றிவரும் துப்புரவு ஊழியர்களுக்கென 1,28,400 ரூபாய் மதிப்பீட்டில் 42 வீடுகள் கட்டப்பட்டு உள்ளன. ஏற்கனவே துப்புரவு ஊழியர்களுக்கென 122 வீடுகள் கட்டப்பட்டு அவைகளில் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். புதியதாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின்சார வசதி வழங்குவதற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

## பெரியகுளம் நகராட்சியின் சாதனைகளும், ஆக்கத் திட்டங்களும்

### நகராட்சித் தங்கும் விடுதி

இந்த நகராட்சியில் சகலவசதிகள் கொண்டதான இரண்டு பகுதிகள் கொண்ட ஒரு தங்கும் விடுதிக் கட்டிடம் ரூபாய் 29,720 மொத்த செலவில் புதிதாக 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி காந்தி ஜெயந்தி தினத்தன்று திறந்துவைக்கப்பட்டது. இதற்கான விழாவில் பெரியகுளம் கோட்ட துணை ஆட்சியாளர் உயர்திரு துரைராஜ், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமை தாங்க நகர்மன்ற துணைத்தலைவர் உயர்திரு. எம். பேச்சிமுத்து தேவர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இவ்விடுதி புதிதாக திறந்து வைக்கப்பட்டதின் விளைவாக வெளியூரிலிருந்து வரும் அரசாங்க அலுவலர்களும், மற்றோரும் தங்குவதற்கு வழியேற்பட்டு, நெடுநாளைய குறையொன்று நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனலாம்.

### பாதாள சாக்கடைத் திட்டம்

இந்நகருக்கு அரசினரது 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் தேதிய 1587 (சுகாதாரம்) எண் ஆணையில் ரூ 14·15 லட்சம் செலவில் ஒரு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதற்கு பாதி மான்யமும், பாதி கடனுமாக பணவசதி செய்துதர அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த வேலையானது மூன்று நிலைகளில் செய்யப்பட வேண்டியுள்ளது. அவற்றில் முதல் இரண்டு நிலை வேலைகளுக்கான மதிப்புப் பட்டியல் அரசினர் அங்கீகாரத்திற்கு சென்னை பொது சுகாதார தலைமைப் பொறியாளர் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. மூன்றாவது நிலை மதிப்புப் பட்டியல் தயாரிப்பு நிலையில் உள்ளது. மேலே சொல்லப்பட்ட மதிப்பீடுகளுக்கு அரசினரின் ஒப்புதல் கிடைத்தவுடன் பாதாள சாக்கடைத் திட்ட வேலை துவங்கப்படும்.

### நகரின் தண்ணீர்த் திட்டம் சீரமைப்பு

இந்நகர் தண்ணீர் திட்டம் 1914-ம் ஆண்டிலிருந்த தேவையை அனுசரித்து தயாரிக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், தற்போதுள்ள தேவைக்குத் தக்கபடி தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் இத்திட்டத்தை சீரமைத்து நகரின் வருங்காலத் தேவைக்கும், புதிதாக செயல்படுத்தப்படவிருக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு தேவையான தண்ணீரும் கிடைக்குமாறு செய்ய உத்தேசமாக ரூ. 7 லட்சம் செலவாகுமென்றும் அதற்கான ஆய்வு நடத்தி சரியான மதிப்பீடு தயார் ஆகும் செலவிற்கும் அலுவலர் நியமனத்திற்கும் ஒப்புதல் கோரி அரசினரைக் கேட்கப்பட்டுள்ளது. அரசினரின் ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொண்டு தக்க நடவடிக்கை இது சம்பந்தமாக எடுக்கப்படும்.

### மகப்பேறு இல்லம்

இவ்வூரில் மகப்பேறு இல்லம் ஒன்று கட்டுவதற்கு 2350/1ஏ, 2350/1பி என்ற காலியிடங்களை அரசினரிடம் ஒதுக்கீடுமூலம் பெறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் மேற்படி மனை கட்டுவதற்கு தேவையான மதிப்புப் பட்டியல் ரூ. 60,000-க்கு தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஒரு பெண் மருத்துவ அதிகாரி, ஓர் ஏவலர், ஒரு பெண் தோட்டி ஒரு காவலர் ஆகியோரின் நியமனங்களையும் ஒப்புதல் செய்ய கோரி பொதுநல இயக்குநருக்கு எழுதப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 75,000 கடன் கோரி அரசுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அரசினரின் ஒப்புதல் கிடைத்தவுடன் மகப்பேறு இல்லத்தை கட்டி முடித்து அதனை செயல் படும்படி செய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## கடையநல்லூர் நகராட்சி
## (திருநெல்வேலி மாவட்டம்)

கடையநல்லூர் நகராட்சி 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் இயங்கி வருகிறது. இந்நகரின் மொத்த மக்கள் தொகை 1961-ம் வருடத்திய கணக்கெடுப்பின்படி 41,260. 1966-ம் வருடத்திய கணக்குப்படி 43,300. இந்நகரிலுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 10,100 ஆகும். இந்நகரில் சாலைகளின் மொத்த நீளம் 30 மைல். இந்நகரில் 575 மின் விளக்குகள் உள்ளன. இவற்றில 64 குழல் விளக்குகள் உள்ளன. இந்நகராட்சி ஒரு தினசரிச் சந்தை, ஒரு வாரச் சந்தை, ஒரு பஸ் நிலையம, ஒரு ஆடு அறுக்கும் தொட்டி முதலியவற்றை நிர்வகித்து வருகிறது. இந்நகராட்சியின் சாதாரண வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,05,984 ரூபாய் ஆகும்.

இந்நகராட்சிக்குச் சொந்தமான அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு 1966-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ம் தேதியன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தக் கட்டிடம் கட்டுவதற்கான செலவு ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி ஒன்பதினாயிரம் ஆகும். இந்தக் கட்டிட வேலை பொது சுகாதார பொறியியல் துறையினரின் மேற்பார்வையில் 1967-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி கட்டிடம் 1967-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 21-ம் தேதியன்று நெல்லை மாட்ட ஆட்சித் தலைவர் திரு எம். எம். இராசேந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

இந்நகரிலுள்ள மக்கள் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் தண்ணீர் வசதி குறைவாக இருப்பதால், இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் அவசியமானதால் இத்திட்டம் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் அரசினரால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 1967-68ம் வருஷத்துக்கு அரசினரால் கடையநல்லூர் நகராட்சிக்கு ரூ. 2,50,000 கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. மேற்படி ரூபாய் 2,50,000-யும் பொது சுகாதார பொறியியல் துறையினர்க்கு நகராட்சியிலிருந்து செலுத்தப்பட்டிருக்கிறது.

## குடியேற்றம் நகராட்சி

### குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் சிறிய அளவில் பல ஆண்டுகளாக உள்ளது. வளர்ந்து விட்ட இந்நகருக்கு இது போதுமானதாக இல்லாததால் ஒரு புதிய அபிவிருத்தி திட்டத்தை எடுத்து நடத்த தமிழக அரசு ரூ. 26.34 லட்சம் செலவு கடன் அனுமதித்தனர். திட்ட வேலை நடந்து வருகிறது. மேற்படி திட்டம் நிறைவேறினால் நகரில் எக்காலத்திலும் தண்ணீர் பஞ்சம் ஏற்படாது. இந்த திட்டத்திற்காக இதுவரை ரூ. 23,16,200 செலவு செய்யப்பட்டுள்ளது.

2. இந்நகராட்சிக்கு அரசினர் அளித்த ரூ. 5,000 கடன் தொகையுடன் பேருந்து நிலைய வளைவுக்குள் ஒரு கடை கட்டி 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதி அன்று மன்ற துணைத் தலைவர் திரு. ஆர். கோவிந்தசாமி அவர்களின் தலைமையில் மன்றத்தலைவர் திரு. கே. எம். கோவிந்தராஜன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி கடை வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

### சுகாதாரக் கடைநிலை ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.

சுகாதார கடைநிலை ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந் நகராட்சிக்குத் தமிழக அரசு ரூ. 18,000 கடனாகவும், ரூ, 18,000 உதவித் தொகையாகவும் அளித்தனர். 10 வீடுகள் கட்டும் வேலை தொடங்கப்பட்டு நடந்துவருகிறது.

### பயன் தரு முயற்சிகள்

நகர் மன்ற அலுவலக வளைவுக்குள் ஆறு கடைகள் கட்ட ரூ. 24,500 கடனும் மாட்டு சந்தை காலி இடத்தில் ஆறு கடைகள் கட்ட ரூ. 24,500 கடனும் தமிழக அரசினால் இந் நகராட்சிக்கு அளிக்கப்பட்டது. கடைகள் கட்டும் வேலை விரைவாக நடந்து வருகிறது.

மேற்படி வேலைகள் முடிந்து கடைகளை வாடகைக்கு விட்டால் நகராட்சியின் வருவாய் கூடுதலாகும்.

இந் நகருக்கு 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதியன்று வருகை புரிந்த மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நகர் மன்றம் ஒரு வரவேற்புரை அளித்தது. அது சமயம் இந் நகரத்தில் ஒரு தொழில்பேட்டையை நிறுவவும், நகரில் இருக்கும் கல்லூரியில் மாணவியரை சேர்க்க அனுமதியளிக்கவும, மன்றத்தினால் நடத்தப்படும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை அரசினரே ஏற்று நடத்தவும், வேண்டி கோரிக்கைகளை அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது.

### சீரணி அமைப்பு

தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டது போல் இம் மாவட்டத்திலும் ஒரு சீரணிப் படை ஏற்படுத்துவது சம்பந்தமாக வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இந் நகரத்தில் நகர்மன்ற ஆணையர் அவர்களால் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் தேதியன்று ஐம்பது பேர் கொண்ட ஒரு நகர சீரணி அமைக்கப்பட்டது.

கீழ்க்காணும் பொதுப்பணிகள் சீரணி தொண்டர்களினால் ஏற்று நடத்தப்படவிருக்கின்றன :—

1. 15 நகர் மன்றத் தொடக்கப் பள்ளிகளுக்கும் வெள்ளை அடித்தல்.
2. இரண்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கும் வெள்ளை அடித்தல்.
3. பள்ளிக் கட்டிடச் சுற்றுப்புறங்களைச் சமப்படுத்தி துப்புரவு செய்தல்.
4. கஸ்பா காலனியிலிருந்து புவனேஸ்வரிப்பேட்டை வழியாக போடிப்பேட்டை ரோடை இணைக்கும் ஒரு சாலை அமைத்தல்.
5. கங்காதர மடாலயம் தெருவில் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.
6. நெல்லூர்பேட்டை நகர் மன்ற உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தைச் செப்பனிட்டு சமப்படுத்தல்.

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART-2
ஊராட்சி அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

---o---

"கிராம நலம்" இதழில் விளம்பரங்கள்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

**Books and Publications "Gramanalam" Tamil monthly published by the Director of Rural Development, Madras—Advertisements in the Journal—Orders passed.**

**"கிராமநலம்"** என்ற திங்கள் இதழ் 1955-ம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கிராம வாசிகள், தங்களின் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, குடிசைத் தொழில், பொதுச் சுகாதாரம் போன்றவற்றை வளர்ச்சி செய்து கொள்வதற்கு தகுந்த வழிமுறைக் கூறி, அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் நோக்குடனே இந்த இதழ் வெளியிடப்படுகிறது. இதன் ஆண்டுச் சந்தா ரூ. 2 மட்டுமே. தற்போதுள்ள நிதி நிலையை விட, இந்த இதழின் நிதி நிலை தன்னைத் தானே உதவிக்கொள்ளக்கூடிய முறையில் இருக்க வேண்டுமென்றும், பயனுள்ள விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம், கிராமங்களிலுள்ளவர்களுக்கு—சிறப்பாக உழவர்களுக்கு அவை உதவியாயிருக்குமென்றும்எண்ணி' இந்த இதழில், 12 பக்கங்களுக்கு, வணிக விளம்பரங்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று யோசனைத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்த யோசனையை அரசு ஏற்றுக்கொண்டு, 1968-ம் ஆண்டு எப்ரல் திங்கள் முதல் "கிராமநலம்" இதழில், 12 பக்கங்களுக்கு மேற்படாமல் கீழ்க்காணும் முறைகளின்படி விளம்பரங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(அ) முழுப் பக்கத்திற்கும், அரைப்பக்கத்திற்கு மட்டுமே விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(ஆ) விளம்பரக் கட்டணம் வருமாறு.—

| | அவ்வப்போது வெளியிடும் விளம்பரங்களுக்கு (casual) | குத்தகையாக (contract)) ஒரே அளவில குறைந்தது 12 விளம்பரங்கள் |
|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைகள்—** | | |
| | ரூ. | ரூ. |
| முழுப் பக்கம் | 420 | 315 |
| அரைப் பக்கம் | 215 | 165 |
| **நான்காவது அட்டை** | | |
| முழுப் பக்கம் | 450 | 325 |
| அரைப் பக்கம் | 230 | 170 |
| **உள் பக்கங்கள்—** | | |
| முழுப் பக்கம் | 400 | 300 |
| அரைப் பக்கம் | 210 | 160 |

(இ) துவக்கத்தில் விளம்பரங்கள் சாதாரன இடங்களிலேயே இருத்தல் வேண்டும்.

(ஈ) விளம்பர முகவர்களின் (Advertising Agencies) சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்; ஒரே ஒரு விளம்பர முகவர் தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. மொத்த வியாபார உத்தரவாதமும் இருக்க வேண்டிய அவசியமில்லை.

(உ) "கிராமநலம்" இதழுக்காக சேகரிக்கப்பட்ட விளம்பரங்களுக்கென, முகவர்களுக்கு 15 சதவீதம் (பதினைந்து சதவீதம்) கழிவு (Commission) அளிக்கப் படவேண்டும். விளம்பரங்களை அனுப்புகையிலேயே, விளம்பர கட்டணத்திலிருந்து கழிவை, முகவர்கள் எடுத்துக் கொள்ளலாம். முகவர்கள் விளம்பரங்களை அனுப்பி விட்டு, அதற்குரிய கட்டணத்தை, விளம்பர தார்கள் மக்கள் தொடர்பு அதிகாரிக்கு நேரிடையாக அனுப்பிவிட்டால், விளம்பரத்திற்குரிய கழிவுத் தொகையை, மக்கள் தொடர்பு அதிகாரி, முகவர்களுக்கு செலுத்தவேண்டும்; ஆனல் விளம்பரதாரர்கள் செலுத்தவேண்டிய கட்டணம் முழுவதும் கிடைத்த பின்பே, மேற்கண்ட கழிவுத் தொகையை முகவர்களுக்கு அளிக்கவேண்டும்.

(ஊ) முகவர்களிடமிருந்து முதல் விளம்பரம் கிடைத்த பின்னர், அவர்களை விளம்பர முகவர் என்று ஏற்றுக்கொண்டு, அவர்களின் பெயரை தன்னுடைய அலுவலகத்தில், மக்கள் தொடர்பு அதிகாரி பதிவு செய்துக் கொள்ளவேண்டும்.

(எ) விளம்பரங்களின் நகல்கள், தேவையான ''பிளாக்கு'' (Blocks) களைப் பெறுவதற்கும், விளம்பரங்களை அச்சிடுவதற்கு தேவையான விளக்கங்கள் தருவதற்கும், ஆவணங்கள் (Records) போன்றவற்றை நிர்வகிப்பதற்கும் முகவர்களே பொறுப்பாளியாவார்கள்.

(ஏ) விளம்பரங்களைப் பெறுவதற்கு முகவர்கள் அனுமதிக்கப்படுவர். ''கிராமநலம்'' ஆசிரியரிடமிருந்து எழுத்து மூலம், முன்னரே அனுமதி பெறாத எந்த விளம்பரங்களையும், முகவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. ''கிராமநலம்'' ஆசிரியர் தகுதியெனக் கருதும் எக்காரணத்துக்காகவேனும், விளம்பரங்களை மறுக்கவோ, அல்லது அவற்றில் மாற்றங்கள் கோரவோ, அல்லது விளம்பரங்களின் தோற்றத்திலுள்ள சொற்கள், அமைப்பு அல்லது படங்களை மாற்றவோ, விளம்பரங்களை வெளியிட ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிக்கவோ, அவருக்கு முழு உரிமை உண்டு.

(ஐ) மக்கள் தொடர்பு அதிகாரிக்கு நேரிடையாக வரும் விளம்பரங்கள் அல்லது நேர் உதவியாளர்களின் (ஊராட்சி வளர்ச்சி) வாயிலாக வரும் விளம்பரங்களுக்கு எவ்வித கழிவுத் தொகையும் கிடையாது.

* * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967ம் ஆண்டு நவம்பர் 27ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2187—ன் சுருக்கம்.

---

## சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை, ''கிராமநலம்'' இதழில் பிரசுரித்தல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Publicity—Activities under Community Development and Panchayat Development Programmes—Publication in the journal of "Gramanalam"—Instructions—Issued.

புகைப்படக் கருவிகளை, வருவாய்க் கோட்ட அதிகாரிகளின் பாதுகாப்பில் வைத்து, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அவற்றின் தேவை எழும்போதெல்லாம் வானொலி மேற்பார்வையாளர்கள் புகைப்படம் எடுக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பித்து, கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 1967-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 304-ல், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேலும், போட்டிகளுக்கு பரிசுகள் வழங்குதல், வானொலி மேற்பார்வையாளரிடமுள்ள புகைப்படக் கருவிகளுக்கு பிலிம் சுருளைகள் (Film Rolls) வாங்குதல், புகைப்படங்களைப் பெரிதாக்கி, அச்சடித்தல் ஆகிய செயல்களுக்கென சமூகக் கல்வி மாதிரித் திட்டத்தில் ஓர் ஒன்றியத்திற்கு, ஓர் ஆண்டிற்கு, ரூ. 50 ஒதுக்கப்பட்டுள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களில், சிறப்பாக வளர்ச்சிப் பணிகளுக்கு விளம்பரம் அளிக்கும் வகையில், இப்புகைப்படக் கருவிகளை நன்கு பயன்படுத்தி, புகைப்படங்களை எடுத்து, அவற்றின் பேரில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களால் செய்திக் குறிப்புகள், சாதனைக் குறிப்புகள், மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுதப்பட்டு, அவை ''ஆசிரியர், ''கிராம நலம்'', கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், சென்னை-9'' என்ற முகவரிக்கு ''கிராமநல''த்தில் பிரசுரிப்பதற்கென அனுப்பி வைக்குமாறு, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967—ம் ஆண்டு நவம்பர் 6—ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 121802—ன் சுருக்கம்)

---

## மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் திருவுருவப்படத்தை குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் அமைத்தல்.

## Portrait—Gudiyatham Panchayat Union Council (North Arcot District)—Portrait of Thiru C. N. Annadurai, Chief Minister of Madras—Installation—Permitted.

குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய மன்றம் கூடும் அறையில், தமிழக அரசு முதலமைச்சர் மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் திருவுருவப் படத்தை அமைக்கவேண்டுமென்று, ஊராட்சியின் 1967-ம் ஆண்டு ஜூலை 31-ம் நாளிட்ட தீர்மானம் எண் 50-ல் உள்ள கோரிக்கைக்கு அரசு அனுமதியளிக்கிறது.

2. திருவுருவப் படத்தை வாங்கி, அமைப்பதற்கு ஏற்படும் செலவுகள் அனைத்தும் தனியாரின் நிதிகளிலிருந்து செலவழிக்கப்படவேண்டும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1748.)

## கிராம மனித சக்தித் திட்டம்—திட்டம் செயல்படாத வட்டாரங்களை நீக்கி, அதற்கு மாறாக வேறு வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்தல்—ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Rural Manpower Programme—Implementation of—1967-68—Invalidating of blocks from the operation of the Rural Manpower programme and the selection of blocks in the place of weeded out ones—Orders issued.

மத்திய அரசின் உதவியுடன், கிராம மனித சக்தித் திட்டம், இம்மாநிலத்தில் 72 ஊராட்சி ஒன்றியங்களிலே இப்போது செயல்பட்டு வருகிறது. கிராம மனித சக்தித் திட்டம் செயல்படுவது பற்றி பரிசீலனை செய்யவேண்டுமென்றும், அப்போது தான், திறமுடன் செயலாற்றாத வட்டாரங்களை குறிப்பாக அறிந்து அவற்றை நீக்கிவிட முடியுமென்றும் உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவு அமைச்சகம் யோசனை கூறியுள்ளது. அதற்கேற்ப, இத்திட்டம் நிறைவேற்றப்படுவது பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, தமிழக கிராம வளர்ச்சி இயக்குநர் பரிசீலனை செய்தார். இவ்வட்டாரங்களின் நிதிநிலை, மக்கள் தொகையின் அமைப்பு, பரப்பளவு, பொருளாதாரநிலை போன்ற இதர முக்கிய ஆதாரங்களுடன் நிதி, திட்ட சாதனைகளைக் கருத்தில் கொண்டு, 72 வட்டாரங்களிலும் இத்திட்டம் செயல்படுவது பற்றி விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது கிராம மனித சக்தித் திட்டத்திலிருந்து, கீழ்க்கண்ட ஐந்து வட்டாரங்களையும் நீக்கி விடுதற்குரியகோரிக்கைகளை கிராம வளர்ச்சி இயக்குநர் அனுப்பியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | சோழவரம் வட்டாரம் | செங்கற்பட்டு மாவட்டம் |
| 2. | அன்னூர் வட்டாரம் | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. | அவிநாசி வட்டாரம் | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 4. | பரமக்குடி வட்டாரம் | இராமநாதபுரம் மாவட்டம் |
| 5. | அன்னவாசல் வட்டாரம் | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

நீக்கப்பட்ட வட்டாரங்களுக்கு மாறாக, சில வட்டாரங்களில் கிராம மனித சக்தித் திட்டத்தை விரிவாக்கலாம் என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார், தங்களது வட்டாரங்களுக்கு கிராம மனித சக்தித் திட்டம் விரிவாக்கப்படவேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து வேண்டுதல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

2. கிராம வளர்ச்சி இயக்குநரின் கருத்தை, கவனமாகப் பரிசீலனை செய்தபின், அதை அரசு ஏற்றுக் கொண்டு, அதற்கேற்ப, கிராம மனித சக்தித் திட்டம் செயல்படுவதினின்றும் கீழ்க்கண்ட ஐந்து, செயல்படாத வட்டாரங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | சோழவரம் வட்டாரம் | செங்கற்பட்டு மாவட்டம் |
| 2. | அன்னூர் வட்டாரம் | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. | அவிநாசி வட்டாரம் | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 4. | பரமக்குடி வட்டாரம் | இராமநாதபுரம் மாவட்டம் |
| 5. | அன்னவாசல் வட்டாரம் | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

கிராம வளர்ச்சி இயக்குநரின் கருததுக்களையும், இத் திட்டம் நிறைவேற்றப்படுவதினின்றும் நீக்கப்பட்ட வட்டாரங்களின் இடங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கென ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள வேண்டுதல்களையும் கவனமாக பரிசீலனை செய்தபின், நடப்பாண்டில், கீழ்க்காணும் ஐந்து வட்டாரங்களில் கிராம மனித சக்தித் திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | நாமக்கல் வட்டாரம் | சேலம் மாவட்டம் |
| 2. | திருப்பத்தூர் வட்டாரம். | வட ஆர்க்காடு மாவட்டம் |
| 3. | திருப்பத்தூர் வட்டாரம் | இராமநாதபுரம் மாவட்டம் |
| 4. | முசையூர் வட்டாரம் | தென் ஆர்க்காடு மாவட்டம் |
| 5. | நரிக்குடி வட்டாரம் | இராமநாதபுரம் மாவட்டம் |

3. முடிவுறாத வேலைகளை நடப்பாண்டில் முடித்துவிடுவதற்கு, மேற்கண்ட பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ள நீக்கப்பட்ட வட்டாரங்களுக்கு அரசு அனுமதியளிக்கிறது; ஆனால் எந்த புதிய வேலையையும் அவை மேற்கொள்ளக்கூடாது.

4. இவ்வாணையின்படி செயல்படவிருக்கும் ஐந்து புதிய வட்டாரங்கள் ஒவ்வொன்றும், 1967–68-ம் ஆண்டிற்கென, ரூ. 75,000 வரை மதிப்புள்ள வேலைகளுக்கு திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க அரசு அனுமதியளிக்கிறது. புதிய வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும் நடப்பாண்டிற்கு சரியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி அளவு, கிராம வளர்ச்சி இயக்குநரால் காலப் போக்கில் தெரிவிக்கப்படும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967ம் ஆண்டு நவம்பர் 18ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2107–ன் சுருக்கம்)

## சமுதாய வளர்ச்சித் திட்டம்—கிராமத் தொழில்கள்—கிராமக் கலைகள், கைவினைப் பொருள்கள் தொழில்கள்—வட்டாரத்திலுள்ள தச்சு, கருமார்த் தொழிற் பிரிவுகள்—உழுபடைக் கருவிகளைப் பழுது பார்த்தல்—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Community Development Programme—Village Industries—Rural Arts, Crafts and Industries—Carpentry and Blacksmithy units in Block—Undertaking of repairs to agricultural Implements—Instructions issued.

தெளிப்பான்கள் போன்ற சாதாரண கருவிகளைப் பழுது பார்ப்பதற்குக் கூட, வட்டாரங்களில் ஏற்பாடுகள் இல்லையென்பதும், அதனால் அவை பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதும், சிறிய பழுதுகளைச் செப்பனிடுவதற்குக்கூட அக்கருவிகளை வினியோகித்த நிறுவனங்களுக்கே அவை அனுப்பப்படுகின்றன என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. உழுபடைக் கருவிகள் மற்றும் சாதனங்களை, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தச்சு, கருமார்த் தொழிற் பிரிவுகளில் செப்பனிட்டுக் கொள்ளலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வித கருவிகளை செப்பனிடுதற்குரிய செலவினங்கள், எந்த கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும் என்பதை ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானிக்க இயலாதிருப்பதால், அவற்றைப் பழுது பார்க்க, ஊராட்சி ஒன்றியங்கள் தயக்கமடைகின்றன என்று குறிப்பாக கூறப்பட்டுள்ளது.

(2) உழுபடைக் கருவிகளைச் செப்பனிடும் பணியை, வட்டாரத்திலுள்ள தச்சு, கருமார்த் தொழிற் பிரிவுகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், சிக்கலான, நுணுக்கமான பழுதுகள் ஏற்பட்டிருக்கையில், விவசாய உதவிப் பொறியாளரின் உதவியை நாட வேண்டும் என்றும், கவனமாக பரிசீலனை செய்த பின், அரசு ஆணை பிறப்பிக்கிறது. எவ்வகை கருவிகளுக்கு அவர்களின் உதவி தேவைப்படுமோ, அவற்றின் பெயர்களடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்துக்கொண்டு, விவசாய உதவிப் பொறியாளரின் உதவியை—அவரின் வருகையின்போது—நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியக் கருவிகளுக்குரிய செப்பனிடும் செலவுகளை, ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதிகளிலிருந்து செலவழித்து, கணக்குப் புத்தகங்கள் அளவிலேயே (Book Adjustments) சரி செய்துக் கொள்ள வேண்டும். தனியாரின் உழுப்படைக் கருவிகளைப் பழுது பார்க்கும் நேர்வுகளிலெல்லாம், அவர்களிடமிருந்து "செண்டேஜ்" கட்டணங்களை, கிராமத் தொழில்கள் திட்டங்களிலுள்ள பொது வசதித் தொழில் பட்டறைகள் பின்பற்றும் விகிதங்களின்படி வசூலிக்க வேண்டும். அதாவது, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 9-11-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2037-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள (நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, அதை கீழே காண்க) ஆணைகளின்படி "செண்டேஜ்" கட்டணங்கள் வசூலிக்கப்படவேண்டும். எப்படியெனில் ஒரு மணி நேரத்திற்கு, ஒரு நபருக்கு ரூ. 1 வீதத்தில் (ரூபாய் ஒன்று மட்டும்) ஊதியக் கட்டணத்துடன், உழைப்புக் கட்டணமாக 100 சதவீதமும் (ஒரு நூறு சத வீதம் மட்டும்), செப்பனிடுவதில் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்குரிய விலையும் சேர்த்து வசூலிக்கப்பட்டு, அந்த தொகையானது, ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதிகளில் வரவு வைக்கப்பட வேண்டும். மேலும், தொழிற் பிரிவுகளில் நிர்வகிக்கப்படும் கணக்குகளில் (Pro forma Accounts) தேவையான பதிவுகளைச் செய்த பின்னரே, மேற்கண்டவாறு வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

* * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 19—9—1967 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 46898-ன் சுருக்கம்)

(மேற்கண்ட அரசு குறிப்பாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அரசு ஆணை நகலின் தமிழாக்கம்.)

---

## கிராமத் தொழில்கள் திட்டம்—நாங்குநேரித் திட்டம்—பொது வசதி தொழிற்பட்டறைகள்—நிர்வாகச் செலவுகள்-கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 13-4-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 644-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை மேலும் நீடித்தல்—அனுமதிக்கப்படுகிறது

## Rural Industries Project—Nanguneri Project—Common Facility Centres—Charging of Overheads—Further Continuance of the procedure laid down in G. O. Ms. No. 644, R. D. & L. A., dated 13-4-1966—Sanctioned.

நாங்குநேரி திட்டப் பகுதிகளிலுள்ள 10 பொது வசதி தொழிற்பட்டறைகளிலும், ஒரு மணி நேரத்திற்கு, ஒரு நபருக்கு ரூ. 1 (ரூபாய் ஒன்று மட்டும்) வீதத்தில் ஊதியக் கட்டணத்துடன், உழைப்புக் கட்டணமாக 100 சத வீத (ஒரு நூறு சத வீதம் மட்டும்) "செண்டேஜ்" நிர்வாகக் கட்டணமும், கருவிகளைச் செப்பனிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்களுக்குரிய விலையையும் சேர்த்து மொத்தமாக வசூலிக்க வேண்டுமென்று, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 13-4-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 644-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேற்கண்ட நடைமுறைகளை வருங்காலத்திற்கும் நீடிக்கலாம் என்று தொழில், வணிக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். தொழில், வணிக

இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, நாங்குநேரி திட்டப் பகுதிகளிலுள்ள 10 பொது வசதி தொழிற்பட்டறைகளிலும், ஒரு மணி நேரத்திற்கு, ஒரு நபருக்கு ரூ. 1 (ரூபாய் ஒன்று மட்டும்) வீதத்தில் ஊதியக் கட்டணத்துடன், உழைப்புக் கட்டணமாக 100 சதவீத (ஒரு நூறு சதவீதம் மட்டும்) "செண்டேஜ்" நிர்வாகக் கட்டணமும், கருவிகளைச்செப்பனிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்களுக்குரிய விலையையும் சேர்த்து மொத்தமாக வசூலிக்கப்படவேண்டும் என்ற நடைமுறையானது 1-8-1966 முதல் மேலும் 6 திங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

* * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 9-11-66 நாளிட்ட அரசு ஆணை எண் 2031-ன் சுருக்கம்.)

---

## கையாடல்—'காசோலை'களிலுள்ள எழுத்துக்களை கள்ளத்தனமாக மாற்றுவதால் ஏற்படும் இழப்பு—முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை தவறாது பின்பற்றுதல்.

## Embezzlement—Loss due to fradulent alteration in cheques—Precautionary measures Instructions—Issued—Strict adherence of.

ரூபாய் 1000-க்கும் மேற்பட்ட தொகைகளுக்குரிய 'காசோலை' (Cheques) கள் 'குறுக்குக் கோடிடா(Uncrossed) தவாறே பெரும்பாலான நேர்வுகளில், நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறை, பொதுப்பணிகள் துறை, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், ஊராட்சி நிர்வாக அதிகாரிகள் ஆகியோரால், இன்னும் அளிக்கப்பட்டு வருகின்றன என்பது, கருவூல, கணக்குகள் இயக்குநரால் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழக கருவூல நியதி (Madras Treasury Code)யிலுள்ள டி. ஆர். 16-ன் கீழ், துணை விதி 42 (b)-ல் உள்ள விதித் துறைகளுக்கு (Provisions) இச்செயல் எதிராக இருப்பதாலும், இதுபற்றி நிதித் துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் 21-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1412-ல் ஏற்கனவேயே தெளிவான விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், ரூ. 1000-க்கு மேற்பட்ட காசோலைகளை அளிக்கையில் மேற்கண்ட ஆணையிலுள்ள விளக்கங்களை தவறாது பின்பற்றும்படி, தங்கள் கீழுள்ளவர்களுக்கு ஆணைகள் பிறக்குமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(நிதித் துறையின் 1967-ம் ஆண்டு மே 25-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 50300-ன் சுருக்கம்)

---

## பர்மா அகதிகளின் துயர் துடைப்பு, சீரமைப்பு—ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு தருதல்.

## Repatriates from Burma—Relief and Rehabilitation—Provision of employment in Panchayats and Panchayat Unions.

அரசுப் பணிகளிலுள்ள பல்வேறு பதவிகளிலே பர்மா அகதிகளை நியமனம் செய்வதில் சில சலுகைகளை அளிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்தது. ஒவ்வொரு அகதியின் தகுதியையும் பற்றித் தனித் தனியே பரிசீலனை செய்தபின், அவர் நியமனத்திற்கு தகுதியுடையவராயிருப்பின், விதிகளை தளர்த்திக்கொள்ளலாம் என்று பொதுத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி 21-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 10-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிலுள்ள பதவிகளில் கூட பர்மா அகதிகளை நியமித்துக்கொள்வதில் இதேவித சலுகைகளை அளிக்கலாம் என்று அரசு எண்ணுகிறது.

அதற்கேற்ப, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்கையில், அவ்வித பதவிகளுக்கு பர்மா அகதிகள் தகுதியுடையவர்களாயிருப்பின், அவர்களுக்கு சலுகைகள் அளிக்கும்படியும் அதற்கேற்ப அவர்களை நியமிக்க விதிகளைத் தளர்த்துவதற்கு அரசைக் கேட்டுக்கொள்ளும்படியும், பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோருக்கு தெரிவிக்கப்படுகிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 10-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண். 117502-ன் சுருக்கம்)

---

## நிதி நிலை அறிக்கை—மானியக் கோரிக்கை எண்களை அனைத்து நாடுகள் எண்களுக்கு மாற்றுதல்.

## Budget—Demands for grants—Numbers—Change over to Arabic figures—Regarding.

நடப்பாண்டிற்குரிய துணை மானியக் கோரிக்கைகளில், கோரிக்கை எண்களெல்லாம் அனைத்து நாடுகள் எண்களில் (Arabic numerals) விவரிக்கப்பட்டு, அவற்றிற்குரிய ரோமன் எண்கள் அடைப்புக் குறிகளில் காண்பிக்கவேண்டும் என்று, நிதித்துறையின் 14—8—1967 நாளிட்ட அரசு ஆணை எண் 744-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைத் தொடர்ந்து, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(நிதித் துறையின் 18-9-1967 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 92232)

## 1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம்—தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தார்களை, தகுதி பெற்ற அதிகாரிகளில் சேர்த்துக் கொள்ளுதல்—அறிவிக்கப்படுகிறது.

## Madras Public Buildings (Licensing) Act, 1965—Competent Authorities—Notified under the Act—Inclusion of Independent Deputy Tahsildars as Competent Authorities—Notified.

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தில், குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில், தகுதி பெற்ற அதிகாரிகளாக (Competent Authority), அவரவர்களின் அலுவல் வரம்பில் செயல்புரிய, வருவாய்த் துறையைச் சார்ந்த தாசில்தாரர்களுக்கு அதிகாரம் அளித்து, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 195, மற்றும் 1966-ம் ஆண்டு மே 17-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1244 ஆகியவற்றில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. (இவ்வாணைகளின் தமிழாக்கத்தை "கிராம நலம்" இதழ்களில் முறையே 1966-ம் ஆண்டு ஜூன், 1967-ம் ஆண்டு ஜனவரி திங்கள் இதழ்களில் காண்க.) மேற்கண்ட அரசு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள "தாசில்தார்கள்" என்ற சொல்லானது, தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தார்களையும் (Independent Deputy Tahsildars) சேர்த்துத்தானு என்று, வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் விளக்கம் கோரியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரின் இக்கேள்வியை வருவாய்த் துறை கழகத்துடன் அரசு பரிசீலனை செய்தது. மேற்படி சட்டத்தில், தகுதி பெற்ற அதிகாரிகளின் அலுவல்களைச் செய்ய, தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தாரர்களையும் சேர்த்துக்கொள்வதென, அரசு முடிவு செய்துள்ளது.

2. அதற்கேற்ப பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரிக்கப்படும்.

### பிற்சேர்க்கை

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத் (தமிழகச் சட்டம் 13/1965) திலுள்ள பிரிவு 2-ன் உட்பிரிவு (2)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 1966-ம் ஆண்டு பிப்ரவரி 16-ம் நாளிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ் பாகம் II, பிரிவு 1, பக்கங்கள் 198—199-ல் வெளியிடப்பட்டுள்ள கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி 4-ம் நாளிட்ட, 1966-ம் ஆண்டு அறிவிப்பு 11—1—5490-க்கு (பிறகு திருத்தப்பட்டுள்ளவாறு), தமிழக கவர்னர் அவர்கள், கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்கள்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன அறிவிப்பிலுள்ள அட்டவணையில்—

1. பத்தி (1) மற்றும் (2)-ல் உள்ள 3-வது இனத்திற்கும், அது சம்பந்தப்பட்ட குறிப்பிற்கும் மாறாக, கீழ்க்கண்ட இனமும், குறிப்பும் முறையே சேர்க்கப்படவேண்டும்.

அதாவது :—

| | | |
|---|---|---|
| 3. | தாசில்தாருடன், தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தாரும் சேர்த்து. | நிலைமைக்கேற்றவாறு—தாலுகாவிலுள்ள கட்டிடங்கள் அனைத்திலும், வருவாய்க் கோட்ட அதிகாரி தகுதி பெற்ற அதிகாரியாக இல்லாத கட்டிடங்கள். |

2. பத்தி (1) மற்றும் (2)-ல் உள்ள 4-வது இனத்திற்கும் அது சம்பந்தப்பட்ட குறிப்பிற்கும் மாறாக, கீழ்க்கண்ட இனமும், குறிப்பும் முறையே சேர்க்கப்படவேண்டும்.

அதாவது :—

| | | |
|---|---|---|
| 4. | நீலகிரி மாவட்டத்திலுள்ள தாசில்தார் அல்லது தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தார். | நிலைமைக்கேற்றவாறு—தாலுகா, அல்லது சப்- தாலுகாவிலுள்ள கட்டிடங்கள் அனைத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளர் (பொது) தகுதிபெற்ற அதிகாரியாக இல்லாத மற்ற எல்லாக் கட்டிடங்கள். |

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு அக்டோபர் 13-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1880).

## விடுமுறை நாட்கள்—1968-ஆம் ஆண்டிற்குரிய பொது, அரசு விடுமுறை நாட்கள்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Holidays—Public and Government, 1968—Orders Passed.

**1968**-ம் ஆண்டிற்குரிய, தமிழக விடுமுறை நாட்களை யொட்டி அரசு கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பிக்கிறது.

(1) **பொது விடுமுறை நாட்கள்**: (அ) ஒவ்வோராண்டிலும் ஜூன், டிசம்பர் திங்களிலுள்ள இறுதி நாட்களை, முறையே "அரையாண்டுக்குரிய வங்கி கணக்குகளை முடித்தல்." "ஓராண்டிற்குரிய வங்கி கணக்குகளை முடித்தலுக்"கென விடுமுறை நாட்களாக அறிவிக்கப் பட்டுள்ளது. இவற்றில் ஏதாவது ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமையாகிவிட்டால், அதற்கு முந்தைய நாள் விடுமுறை நாளாகவிருக்கும். 1968-ம் ஆண்டில் 1968-ம் ஆண்டு ஜூன் 30-ம் நாள் ஞாயிறன்று வருகிறது. எனவே அரையாண்டிற்குரிய வங்கிக் கணக்குகளை முடிப்பதற்காக 1968-ம் ஆண்டு ஜூன் 29-ம் தேதி (சனிக்கிழமை)-யை பொது விடுமுறையாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) இவ்வாணையில் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

(2) **அரசு விடுமுறை நாட்கள்**: தமிழக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள எல்லா அரசு அலுவலகங்களும்—

(அ) அறிவிப்பின் பிற்சேர்க்கையிலுள்ள 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதி, மற்றும் டிசம்பர் 31-ம் தேதி ஆகிய நாட்கள் தவிர, ஏனைய நாட்களிலும்:

(ஆ) 1968-ம் ஆண்டு மே திங்களிலுள்ள இரண்டாம் சனிக்கிழமை தவிர, ஏனைய எல்லா இரண்டாம் சனிக்கிழமைகளிலும் மூடப்படவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(இ) 1968-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் நாளில் வரும் 'தமிழ்ப்புத்தாண்டு நாள், 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில், இரண்டாம் சனிக்கிழமையான விடுமுறை நாளில் வருகிறது. 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி (சனிக்கிழமை) பொது விடுமுறை நாளாக அறிவிக்கப் பட்டுள்ளதால், திருவள்ளுவர் முக்தி நாளுக்காக 1968-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி (திங்கள்) நாளை அரசு விடுமுறை நாளாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழக அரசு அலுவலகங்களுக்கு மட்டுமே, இந்நாள் விடுமுறை நாளாகும்.

(ஈ) மே நாளான 1968-ம் ஆண்டு மே 1-ம் நாளை (புதன்), 1968-ஆம் ஆண்டு மே திங்களிலுள்ள இரண்டாவது சனிக்கிழமைக்கு மாறாக அரசு விடுமுறையாக்க அரசு முடிவு செய்துள்ளது. அதாவது எல்லா அரசு அலுவலகங்களுக்கும் 1968-ம் ஆண்டு மே 1-ம் நாள் (புதன்) விடுமுறை நாளாக ஆக்கப்படுவதால், அதற்குமாறாக 1968-ம் ஆண்டு மே 11-ம் நாள் (சனி) எல்லா அரசு அலுவலகங்களுக்கும் வேலை நாளாக இருக்கும்.

### பிற்சேர்க்கை

#### அறிவிப்பு

இந்திய அரசு, உள்துறை அமைச்சகத்தின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் தேதி நாளிட்ட அறிவிப்பு எண் 20–25–56 பொது 1-ஐ, 1881-ம் ஆண்டு செலாவணி முறிச் சட்டத்தின் (Negotiable Instruments Act, 1881) (மத்தியச் சட்டம் 26/1881) பிரிவு 25-ல் உள்ள "விளக்கத்துடன் ஆராய்ந்ததால் ஏற்படும் விளைவாக, மேற்கண்ட "விளக்க"த்தில் குறிப்பிட்டு கூறப் பட்டுள்ள விடுமுறை நாட்களான 'ஞாயிற்றுக்கிழமை' களுடன், 1968-ம் ஆண்டில் கீழ்க்கண்ட நாட்களும் பொது விடுமுறை நாட்களாக பின்பற்றப்பட வேண்டுமென்று தமிழக ஆளுநர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| 3—1—1968 | புதன் | ரம்ஜான் |
| 15—1—1968 | திங்கள் | பொங்கல் |
| 26—1—1968 | வெள்ளி | குடியரசு நாள் |
| 11—3—1968 | திங்கள் | பக்ரீத் |
| 29—3—1968 | வெள்ளி | தெலுங்கு புத்தாண்டு நாள் |
| 10—4—1968 | புதன் | முஹரம் |
| 12—4—1968 | வெள்ளி | பெரிய வெள்ளிக்கிழமை |
| 13—4—1968 | சனி | தமிழ் புத்தாண்டு நாள் |
| 29—6—1968 | சனி | அரையாண்டிற்குரிய வங்கி கணக்குகளை முடித்தல் |
| 15—8—1968 | வியாழன் | விடுதலை நாள் |
| 30—9—1968 | திங்கள் | ஆயுத பூசை |
| 1—10—1968 | செவ்வாய் | ஆயுத பூசை |
| 2—10—1968 | புதன் | மஹாத்மா காந்திஜி பிறந்த நாள் |
| 21—10—1968 | திங்கள் | தீபாவளி |
| 21—12—1968 | சனி | ரம்ஜான் |
| 25—12—1968 | புதன் | கிருஸ்துமஸ் |
| 31—12—1968 | செவ்வாய் | ஓராண்டிற்குரிய வங்கி கணக்குகளை முடித்தல் |

(பொதுத் துறையின் 1967-ம் ஆண்டு அக்டோபர் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண். 2282)

## இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு—ஜனவரி 1968—வாண வேடிக்கைகள், கிராமிய நடனங்கள் சம்பந்தமாக

## Second World Tamil Conference—January 1968—Display of fire works and folk dances—Regarding.

சென்னையில், 1968-ம் ஆண்டு ஜனவரி துவக்கத்தில், நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு பற்றிய செய்திக் குறிப்பின் நகல் ஒன்று, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு அனுப்பப்படுகிறது. (அதை கீழே காண்க).

அவரவர்களின் அலுவல் வரம்பில், இச்செய்திக் குறிப் பிறகு பெருமளவில் விளம்பரம் அளித்து, தலைசிறந்த வாணவேடிக்கைக்காரர்கள், கிராமிய நடனக்காரர்களிட மிருந்து விண்ணப்பங்களைச் சேகரித்து, அவற்றையெல்லாம் 1967-ம் ஆண்டு டிசம்பர் 7-ம் நாளுக்கு முன்பு "திரு மு. ரா. பெருமாள் முதலியார், அமைப்புச் செயலாளர், இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு நேரடியாகவே அனுப்பி வைக்குமாறும், அவற்றின் நகலை திரு கே. வேங்கிட சுப்பிரமணியம், கிராம வளர்ச்சி துணை இயக்குநர் (கல்வி) மற்றும் சிறப்பு அதிகாரி, உலகத் தமிழ் மாநாடு, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### உலகத் தமிழ் மாநாடு

—

**பத்திரிகை அறிக்கை**

சென்னை மாநகரத்தில் நடக்கவிருக்கின்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டிப் பல சிறந்த கலை நிகழ்ச்சிகள் இடம் பெற விருக்கின்றன.

மாநாட்டின் முதல் நாளாகிய சனவரி 3-ம் நாள் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெறும். அதன் பிறகு கடற்கரையில் நமது பெருமதிப்பிற்குரிய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களும், நமது அன்பிற்குரிய தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் வெளிநாட்டுத் தமிழறிஞர்களும் கலந்துகொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டம் நடக்கவிருக்கிறது. அந்தக் கூட்டத்தின் முடிவில் வாணவேடிக்கை நடக்கும். அதில் தலைசிறந்த வாண வேடிக்கைக்காரர்கள் கலந்து கொள்ளுவார்கள். அவர்களில் மிகச்சிறந்தவரென்று நடுவர்களால் தெரிந்தெடுக்கப் படும் வாண வேடிக்கைக் கலைஞருக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ரூபாய் 1,000 பரிசு கொடுப்பார்கள்.

சனவரி 4-ம் தேதியிலிருந்து 10-ம் தேதிவரை நடக்க விருக்கிற மாநாட்டில் தமிழகத்தின் தலைசிறந்த கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடக்கவிருக்கின்றன. அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகிறவர்களுக்கும் பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பங்குபெற விரும்புகிறவர்கள் 1967-ம் ஆண்டு டிசம்பர் 7-ம் தேதிக்குள் கீழே கண்ட முகவரிக்கு விண்ணப்பித்துத் தொடர்பு கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்,

தமிழ்ப்பெரும் புலவர்
திரு மு. ரா. பெருமாள் முதலியார்,
எம்.ஏ.எல்.டி.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டு அமைப்புச் செயலாளர்.
சென்னை-9.

(கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் 1967–ம் ஆண்டு நவம்பர் 28–ம் நாளிட்ட விரைவு சுற்றறிக்கை எண் 19736–ன் சுருக்கம்.

---

### இந்த இதழில்

| | பக்கம் |
|---|---|
| இன்னலுறும் ஏழை மனிதனை முன்னேற்றும் புனிதப் பணி .. | 2 |
| பாட்டுக்கொரு புலவன் .. .. | 5 |
| நகராட்சி நிறுவனங்களின் வருவாயினைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும் | 9 |
| ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணி .. | 11 |
| கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு .. | 18 |
| கேள்வியும் – பதிலும் .. .. | 25 |

### அடுத்த இதழில்...

மாண்புமிகு உணவமைச்சரின் ரோமாபுரிப் பயணம் பற்றிய சிறப்புக் கட்டுரை.

கிராம நூலகம்.

உலகத் தமிழ் மாநாடு—முழு விவரங்கள் படங்களுடன் (மாநாடு பற்றிய சிறப்புக் கட்டுரைகளும்).

---

வெளியிடுபவர் :
திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.



கல்வித் துறையில் மேலும் ஒரு சாதனை:

தொடக்கப் பள்ளிச் சிறார்களுக்கு

மதிய உணவுடன், இலவசமாக பாடப்புத்தகங்கள்

[சேலம் மாவட்டம். நாமக்கல் தொகுதி]



REGD NO M 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1967
சமுதாய நலத்துறை சீரமைப்பு-
சர்வ கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை